68

The "BHARATI" Reg. No. M. 2456.

பிரஜோற்பத்தி சித்திரை—வைகாசி

மே—1931.

10 JUN 1931

பாரதி

மாலை 3. மணி 5.

ஓர் தேசீய

மாதப் பத்திரிகை

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

பிரசுராலயம்:
உத்தமபாளையம்,
மதுரை ஜில்லா.

JL
ன211, N29BH
N31·3·5
198532

போஷகர்கள்

1. Messrs. மச்சா முத்துஸ்வாமி செட்டியார் & பிரதர்ஸ்,
சென்னை.

2. ஸ்ரீமான் நாகையஸ்வாமி அவர்கள், மானேஜர்,
தேவாரம் ஜமீன், தேவாரம்.

3. ,, T. A. K. அழகர் ராஜா அவர்கள்,
சொந்தக்காரர், மஹேஸ்வரி விலாஸ் ராஜா
எஸ்டேட், தேவாரம்.

4. ,, C. சங்கரலிங்கம் அவர்கள், சொந்தக்காரர்,
ஆனந்த விலாஸ் எஸ்டேட், தேவாரம்.

5. ,, சி. ராமலிங்கம் செட்டியார் அவர்கள்,
மிராஸ்தார், தேவாரம்.

6. ,, S. ராமலிங்கம் செட்டியார் அவர்கள்,
மிராஸ்தார், கூடலூர்.

7. ,, ப. ச. வேலுச்சாமி அவர்கள்,
ஜவுளி வியாபாரம், கூடலூர்.

8. ,, V. S. சுப்ரமண்யம் அவர்கள், மிராஸ்தார்,
சித்தயங்கோட்டை.

9. ,, ஜான் அந்தோணி ஆஜா அவர்கள்,
பைசன்வாலி, தேவிகுளம், திருவாங்கூர்.

போஷகர்கள்.

(தொடர்ச்சி.)

10. ஸ்ரீமான் T. V. K. காமராஜ பாண்டிய நாயக்கர் அவர்கள்,
ஜமீன்தார், முனிசிபல் சேர்மன் & M. L. C.,
போடிநாயக்கனூர்.

11. ,, உ. ம. சே. முகியித்தீன்பிள்ளை ராவுத்தர்
அவர்கள், மானேஜர், T. C. P. A. ஏலச் சரக்கு
விற்பனைக் கம்பெனி, Ltd., கோம்பை.

12. ,, ந. ராமராஜ் அவர்கள், மிராஸ்தார், தேவாரம்.

13. ,, K. பண்டாரம் அவர்கள், மானேஜர், T. C. P. A.
ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி, Ltd.,
பிராஞ்ச், போடிநாயக்கனூர்.

14. ,, K. M. அகமது மீரா அவர்கள், மிராஸ்தார்,
உத்தமபாளையம்.

15. ,, ராவ்சாகிப் A. S. அழகண்ணன் செட்டியார்
அவர்கள், மிராஸ்தார், மெம்பர், ராமேஸ்வரம்
தேவஸ்தானக் கமிட்டி & M. L. C.,
போடிநாயக்கனூர்.

16. ,, C. A. A. அப்துல் ரஹீம் ராவுத்தர் அவர்கள்,
மிராஸ்தார் & ஜில்லா போர்டு மெம்பர், கம்பம்.

17. ,, K. முத்துச்சாமி செட்டியார் அவர்கள்,
மிராஸ்தார், லக்ஷ்மிநாயக்கன்பட்டி,
தேவாரம் P. O.

18. ,, ஆ. ஆத. இராமனுகத் தேவர் அவர்கள்,
மிராஸ்தார், ஆதியாகுடி, புளியால் P. O.,
தேவகோட்டை

19. ,, நா. பூ. வேலுத் தேவர் அவர்கள், மிராஸ்தார்,
சிறுநல்லூர், திருவேகம்பத்து P. O.,
தேவகோட்டை

20. ,, பி. மு. முத்துவேல் உடையார் அவர்கள்,
மிராஸ்தார், அதங்குடி, புளியால் P. O.,
தேவகோட்டை

21. மெஸ்ஸர்ஸ் V. S. ராமலிங்கம் செட்டியார் & பிரதர்ஸ்,
கோம்பை

குறிப்பு:— போஷக சந்தா குறைந்தது ரூபாய் 100.

"பாரதி"

படங்களுடன் வெளிவந் துலவும் தேசீய மாஸிகை.

பொருள் அடக்கம்.

மாலை 3.　　1931 மே　　மணி 5.

தொடர் எண்.		பக்கம்.
1.	கதர் விற்பனை—ஜனுப். பீர்முகம்மது பாவலர் அவர்கள்	321
2.	"பாரதி"யும் தமிழரும்—ஆசிரியர், "பாரதி." ...	323
3.	"பாரதி"க்கு மதிப்புரைகள்	328
4.	ஆங்கில ஆட்சிக்கு அடிகோலியது எப்படி?— திரு. முனகால எஸ். பட்டாபிராம அய்யர் அவர்கள்	356
5.	கள்ளரக்கன்—திரு. கா. மு. ரெத்தினம் அவர்கள் ...	362
6.	ஏகாதிபத்தியமும் அடிமை வாழ்க்கையும்— திரு. என். வேங்கடரமணன் அவர்கள் ...	366
7.	பாரத நாட்டுப் பாட்டு— பண்டித K. அப்துல் சுகூர் சாகிப் அவர்கள் ...	371
8.	சுயராஜ்ய மகிமை— திரு. P. கந்தநரசிம்மன் அவர்கள், B. A., B. L.	372
9.	வட்டமேஜையில் சுதேச மன்னர் சூழ்ச்சியா?— திரு. K. G. கிருஷ்ணன் அவர்கள், B. Sc. (Hons.)	375
10.	ஆசிரியக் குறிப்புகள்	381
	1. அறிக்கை, 2. ஸ்வாமி சிரத்தானந்தர், 3. கவிஞர் தாகூரது ஜன்ம தினச் செய்தி, 4. சமூக மகா நாடுகள், 5. பாரியின் ஜெயந்தி, 6. ரிக்ஷாவண்டி இழுப்பவர்கள், 7. கைத்தொழில் அபிவிருத்திக்குச் சாஸ்திரீய ஆராச்சி, 8. நோபெல் வெகுமதி, 9. கே. டி. பால், 10. காங்கிரஸ் நிர்வாக சபை, 11. மணியின் மறைவு, 12. உருது பாஷை, 13. தேச பக்தர் சிதம்பரம் பிள்ளை, 14. பாதிரிமாரின் சீற்றம், 15. அடுத்த போருக்குத் தயாராயிருக்க வேண்டும், 16. நீக்ரோவர்களுக்கு அநீதி, 17. ஏன் அனுமதி மறுப்பு, 18. பண்டித ஜவஹரிலால் நேரு, 19. வெற்றி பெறுவது ஆத்மசக்தியா? விஷப் புகைகளா?, 20. பிரதிநிதி வேணுகோபாலின் படு மோசம், 21. ஸ்பெயின் குடியரசு, 22. இங்கிலாந்தில் ஜாதி அகம்பாவம், 23. இலங்கையில் பரீட்சைகள், 24. தாயகத்து வரும் நமது சகோதரர்கள், 25. மதுக்கடை மறியல், 26. இலங்கையின் எழுச்சி, 27. விதேசத் துணி பகிஷ்காரம், 28. தாலுகாப் போர்டுகளின் கவனிப்பு, 29. நீக்ரோ காந்தி வேண்டும், 30. பர்மாவில் கலகம்.	
11.	ஆராய்ச்சி மேடை	400

படங்கள்.

1. ஸ்வாமி சிரத்தானந்தர்.　2. ரவீந்திரநாத் தாகூர்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்

ஸ்வாமி சிரத்தானந்தா.

(மகாத்மா முன்ஸிராம்)

பாரதி

ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

"எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓர்இனம்
எல்லாரும் இந்தியா மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்."—பாரதி.

ஆசிரியர்: ரா. நாராயணஸ்வாமி

Copy Right] உத்தமபாளையம். [Registered.

மாலை 3 | பிரஜோற்பத்தி சித்திரை-வைகாசி 1931-ஆ மேமீ | மணி 5

கதர் விற்பனை.

குறவஞ்சி.

சுத்தசுதே சித்துணியில் சொகுசான உடையே—சாமி
சொகுசான உடையே
சுயராஜ்யம் பெறவிற்பது தொண்டர்களின் படையே (சுத்)
மெத்தநயமான பல வேறு வகையுண்டு—சாமி
வேறு வகையுண்டு
விலைசரசம் வாங்கியணி வீர் பிரியங்கொண்டு (சுத்)
நாலுமுழ நீளமுள்ள நல்ல கம்பித்துண்டு—சாமி
நல்ல கம்பித்துண்டு
நாகரீகமா யிதுவே நாமணிந்தோம் பண்டு (சுத்)
தோளுக்குமேல் அழுத்தமான தோவத்திகள் வாங்கும்—சாமி
தோவத்திகள் வாங்கும்
துவைக்க நன்றாயிருக்கும் விலை சுருக்கம் உடை தாங்கும் (சுத்)

ஆந்திரதேசத் துணைவர் அணிவதெல்லாம் கதரே—சாமி
அணிவதெல்லாம் கதரே
அந்நியநாட்டுத் துணிமேல் ஆசைவைப்போன் பதரே (சுத்)
காந்திகுல்லாய் தைப்பதற்கு கால்கெஜமே போதும்—சாமி
கால்கெஜமே போதும்
கருத்துடனே தரித்து மனங் களிப்பீரே யெப்போதும் (சுத்)
அங்கிசட்டை குடுத்தினியும் ஆவலுடன் தைத்து—சாமி
ஆவலுடன் தைத்து
அணிந்துகொள்வீர் சுதந்திரத்தில் ஆத்திரமே வைத்து (சுத்)
இங்கிதமாய் தலைப்பாகை எடுத்துக் கட்டிக்கொள்ளும்—சாமி
எடுத்துக் கட்டிக்கொள்ளும்
இந்தியர் நெய்யாத்துணியை எரித்துடனே தள்ளும் (சுத்)
பச்சைக்கதர் செவப்புக்கதர் புளுப்புக்கதர் பாரும்—சாமி
புளுப்புக்கதர் பாரும்
பாங்கான கருப்பு மஞ்சள் பலநிறமுஞ் சேரும் (சுத்)
இச்சைப்படும் பாலருக்கு ஏற்றகெட்டித் துணியே—சாமி
ஏற்றகெட்டித் துணியே
இதையணிவோர் தமையணுகா திரண்டுவகைப் பிணியே (சுத்)
மெல்லியலார் புடவைகளும் விதவிதமாய்த் தருவோம்—சாமி
விதவிதமாய்த் தருவோம்
வீட்டில்கொண்டுவந்து தர வேண்டுமென்றால் வருவோம் (சுத்)
சொல்லியலார் காந்திமகான் துணையடிகள் போற்றி—சாமி
துணையடிகள் போற்றி
சுகமடைவீர் டம்பமான துணிகளெல்லா மாற்றி (சுத்)
சமுக்காளம் போர்வையெல்லாம் தருவோ மிதுபோல—சாமி
தருவோ மிதுபோல
சத்தியஞ்செய்தே குறிப்பீர் தனிநாட்டு நூலே (சுத்)
நமக்கான உடைகளெல்லாம் நாமே நெய்குவோமே—சாமி
நாமே நெய்குவோமே
நாட்டிலே கைத் தொழில் பரவ நன்மைசெய்கு வோமே (சுத்)
சீர் மிகுந்த பிரபுக்களும் தேசபக்தி மிகுந்து—சாமி
தேசபக்தி மிகுந்து
சேவிக்கின்றார் இதற்காகச் சிறையிலேயும் புகுந்து (சுத்)
பீர்முகம்ம தடுப்பதுவும் பேசுங் கதருடையே—சாமி
பேசுங் கதருடையே
பின்பற்றினால் சுயராஜ்யம் பெருவோ மென்னதடையே (சுத்)

பீர்முகம்மது பாவலர்.

"பாரதி"யும் தமிழரும்.

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர், "பாரதி."

பத்திராதிபரின் கடமை, கஷ்ட நஷ்டங்கள், மேலான சேவை, பத்திரிகையை உண்மையுடன் நடத்துவதால் அவர்களுக்கு ஏற்படும் துன்பங்கள் முதலியவைகளைப் பற்றி நம்மவரில் அநேகருக்கு நன்கு தெரியாது. கற்றறிந்த பலரும் நம் நாட்டில் பத்திரிகைகளை அதுவும் சுய பாஷைப் பத்திரிகைகளைத் தக்கவாறு ஆதரிக்கிறதில்லை. கற்றவர்களே பத்திரிகைகளை அலட்சியம் செய்தால் சாதாரண ஜனங்களைப் பற்றிக் குறை கூற இடமேயில்லை. நமது தமிழ் நாட்டில் எத்தனை பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட்டன? ஆனாலும் அப்படியே எத்தனை பத்திரிகைகள் மாண்டு மறைந்தன? போலிப் பத்திரிகைகளைப் பற்றிக் கவலையில்லை, நாட்டுக்கும் பாஷைகளுக்கும் தொண்டு செய்ய வெளி வந்த எத்தனையோ உயர்தரப் பத்திரிகைகளும் மாசிகைகளும் போஷிப்பின்மையால் மறைந்தன. தமிழகத்தில் தமிழ்ப் பத்திரிகைகளுக்குச் செல்வாக்கில்லை; ஆதரவில்லை. தமிழில் பத்திரிகைகளைப் படிப்பதும், வரவழைப்பதும், வைத்திருப்பதும் கேவலம் என்று பல தமிழர்கள் கருதுகிறார்கள். இப்படி இருந்தால் தமிழ்ப் பத்திரிகைகள் எவ்வாறு செழித்து ஓங்கும்?

ஒரு பத்திரிகை எல்லா அபிவிருத்திகளுக்காகவும் நன்கு உழைக்க முடியாது. ஒவ்வொரு பத்திரிகையும் ஒவ்வொரு விஷயத்தைத் தலைமையாகக் கொண்டே அதில் அதி தீவிரமாக உழைக்கும். கொள்கையில் சிறிதேனும் மாற்றமின்றித் தைரியத்துடனும் சத்தியத்துடனும் உழைக்கும் பத்திரிகைகள் அடையும் கஷ்ட நஷ்டங்கள் கொஞ்சமன்று. உண்மைப் பத்திரிகைகளின் பொறுப்பு மகா கஷ்டமானது. இத்துடன் அவைகளுக்கு நஷ்டமும் ஏற்பட்டாலோ தாங்க முடியாது. உறுதியான தேசீயப் பத்திரிகைகளின் நிலையைப் பற்றிச் சொல்வதற்கில்லை. சர்க்காரின்

களை எடுத்துக் காட்டிச் சர்க்காரைக் கண்டித்துப் பொது ஜனங்களுக்கு ஊழியம் செய்வதில் தேசியப் பத்திரிகைகளுக்கு எவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன! பத்திரிகையால் தாக்கப்பட்டவர்களது எதிர்ப்புக்குப் பத்திராதிபர்கள் ஆளாக வேண்டியிருக்கிறது. ஆகையால் பத்திராதிபர்களுக்கு எவ்வளவோ தைரியம் வேண்டும். பொது ஜனங்களுக்கு எத்தனையோ வழிகளில் அவர்கள் தொண்டு செய்துகொண்டிருக்கிறார்கள். இத்தகைய பத்திரிகைகளால் அதிக பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் அவர்கள் பத்திரிகை நடத்த முன் வரவில்லை. பத்திரிகைத் தொழில் பத்திராதிபரது சொந்த வேலையன்று. அவர்கள் பொது ஜன ஊழியத்திற்காகவே மனமுவந்து சலியாது இதைச் செய்கிறார்கள்.

இந்தியாவில் பொது ஜனத் தொண்டர்கள் நன்கு மதிக்கப்படுவதில்லை. அதிகமாய் ஆதரிக்கப்படுவதில்லை. பொது ஜன இச்சா சேவகர்களுக்கு உதவி செய்து ஊக்கமும் ஆக்கமும் அளிக்க வேண்டுவது நாட்டாரது பெரும் கடமையாகும். அது போன்றே நாட்டுக்கு நல்ல பணி செய்யும் பத்திரிகைகளையும் ஆதரித்து வளர்த்துக் காக்க வேண்டியது தேச மக்களின் முக்கிய கடமை. நம் நாட்டில் எக் காலம் வரைக்கும் பத்திரிகைகளை நன்கு ஆதரிக்கவில்லையோ அக் காலம் வரைக்கும் இந் நாட்டுக்கு அதிக அபிவிருத்தி யில்லை யென்று கூறத்தான் வேண்டி யிருக்கிறது. பத்திரிகைத் தொண்டு நாட்டுத் தொண்டு என்பதை அனைவரும் அவசியம் அறிதல் வேண்டும். பத்திரிகைப் பெருக்காலல்லவா அமெரிக்கா, இப்பொழுது இவ்வாறு மகோன்னத நிலைமை அடைந்திருக்கிறது; ஜப்பான், இன்று உலக வல்லரசுகளில் ஒன்றாக விளங்குகிறது. தனது பண்டைப் பெருமைகளைப்பற்றிப் பெருமையாகப் பேசிக்கொண்டிருக்கும் இந்தியா, பத்திரிகை விருத்தியில் மிக மிகப் பின்னணியில் நிற்கிறது.

பத்திரிகைகளை ஆதரிக்காம விருப்பதற்குக் காரணம் நாட்டின் வறுமையைப் பற்றி மட்டும் சொல்வதற்கில்லை; நாட்டின் படிப்பின்மையை மட்டும் கூறுவதற்கில்லை. புஸ்தகங்களையும் பத்திரிகைகளையும் போதியபடி விலைக்கு வாங்கிப் படித்து அவைகளை ஆதரிக்கும் வழக்கம் நமது நாட்டாருக்கு அதிகமா யில்லை. இதைப்பற்றி நம் தேசத்து எத்தனையோ அறிஞர்களும் ஆசிரியர்களும் தேசாபி

மானிகளும் குறை கூறி யிருக்கின்றார்கள். நாகரீகமடைந்த தேசத்தார் செல்வ சக்தியையும் அவர்கள் புஸ்தகம் வாங்கும் சக்தியையும் நமது தேசத்தின் செல்வ சக்தியுடனும் புஸ்தகம் வாங்கும் சக்தியுடனும் ஒப்பிட்டு, நமது தேச சக்திக்கு மகா குறைச்சலாகவே புஸ்தகங்களும் பத்திரிகைகளும் வாங்கப்படுகின்றன என்று நமது சுதேச பத்திரிகை ஒன்று இந்தியாவை அனுதாபத்துடன் தாக்கி எழுதி யிருக்கிறது.

தமிழ்ச் சகோதரர்களே, எத்தனையோ வகைகளில் எவ்வளவோ சிறப்புடன் வெளிவந்த “வாணி விலாசனி” மாசிகை தமிழர்களது ஆதரவுக் குறைவால் மாண்டதுமன்றி, அதன் ஆசிரியரையும் அபார கடனுக்குள் ஆழ்த்திவிட்டார்கள். விவேகத்தைப் போதிக்க வந்த “விவேக சிந்தாமணி”யையும் தமிழ் நாடு கொன்றது. பஞ்சாமிர்தம் போன்ற உருசியுள்ள “பஞ்சாமிருத”த்தையும் தமிழ் நாடு வதைத்தது. “பிழைக்கும் வழி” என்ற உயரிய பத்திரிகையைத் தமிழர்கள் அதோகதி யாக்கி விட்டார்கள். தேசாபிமானத்துடனும் பாஷாபிமானத்துடனும் கர்ஜித்துத் தேசத்தைத் தட்டி எழுப்பிக் கொண்டு வந்த “பால பாரதி”யையும் மதிக்காது அதையும் முழுங்கிவிட்டது. பல இன்பச் சுவைகளுடன் வெளிவந்த “லட்சுமி”யையும் சென்ற காலத்தில் சேர்த்து விட்டது. மாதர்களுக்கென வெளிவந்த அருமையான “மாதர் மனோரஞ்சனி,” “பெண் கல்வி”ப் பத்திரிகைகளைத் தொலைத்துவிட்டது. ஜனங்களை வசீகரிக்கும் “ஜன வினோதினி” எங்கே? மாதர்களுக்கென வெளிவந்த உயர்தரப் பத்திரிகையாம் “தமிழ் மகள்” எங்கே? விஷயஞ் செறிந்த “ஞானபானு” எங்கே? நெஞ்சை அள்ளும் பாரதியாரது “இந்தியா” எங்கே? இவை எல்லாம் மாண்டன. தமிழரது அனாதரவால் எத்தனையோ உயரிய பத்திரிகைகள் மறைந்தன.

தமிழ் நாட்டின் பரப்பையும் தமிழர்களின் பெருக்கையும் தமிழர்களில் கற்றறிந்தவருடைய தொகையையும் கவனித்துப் பார்த்தால், இன்னும் எத்தனை எத்தனையோ துறைபற்றிய பல உயரிய பத்திரிகைகள் உண்டாகிப் பெருகத் தமிழ் நாட்டில் இடமுண்டு; ஆனால், தமிழர்களுக்கு மனம் மட்டும் வேண்டி யிருக்கிறது. இன்னும், அயல் நாடுகளில் வசிக்கும் தமிழரிடையே சில

சிறந்த பத்திரிகைகள் தோன்றிய போதிலும், தமிழருடைய பத்திரிகாபிமானக் குறைவால் அவைகளும் அழிந்தன. எப்படியோ சில இன்னும் உயிருடனிருக்கின்றன. நல்ல பத்திரிகைகளைக் கொன்ற சாபம் தமிழர்களைப் பிடித்து ஆட்டிக்கொண்டிருக்கிறது. இச் சாபம் விலக வேண்டுமேயானால், தமிழரிடை தேசாபிமானம் சிறக்க வேண்டுமேயானால், சுதந்திரம் பெருக வேண்டுமேயானால், தமிழ் மக்கள் பத்திரிகைகளை அதிகமாய் ஆதரிக்க வேண்டும்.

"பாரதி"

"பாரதி"க்கு 2-வது ஆண்டு பூர்த்தியாகி, இப்பொழுது 5 மாதங்கள் ஆகின்றன. இதற்குள் இப் பத்திரிகை செய்திருக்கும் சேவை கொஞ்சமல்ல. ஆனால் இப் பத்திரிகையால் நாம் அடைந்திருக்கும் கஷ்டங்களும் நஷ்டங்களும் கொஞ்சமல்ல. எந்தக் கொள்கையுடன் "பாரதி" புறப்பட்டதோ, அதிலிருந்து அணுவளவேனும் அகலாது தனது கடமையை ஆற்றியே வந்திருக்கிறது. கடந்த தேசியப் போராட்டத்தில் கவர்ன்மெண்டின் அநீதங்களைக் கண்டித்துப் பொது ஜனங்களைக் கிளர்ச்சி செய்யச் செய்தது. அரசியல் ஞானத்தை அளிப்பதில் "பாரதி" வேகத்துடன் முன்னே போய்க்கொண்டிருந்தது. மாதந்தோறும் ஒரு பெரியாரது ஜீவிய சரித்திரத்தை வாசகர்களுக்குக் கொடுத்துக் கொண்டே வந்தது, வருகிறது. ஆங்கிலம் அறியா கிராமவாசிகளுக்கும் நகரவாசிகளுக்கும் "பாரதி" எவ்வளவோ உதவியாயிருக்கின்றது. கல்கத்தாவிலிருந்து வெளிவரும் "மாடேன் ரேவியூ" போன்று தமிழில் ஒரு மாஸிகை இருக்க வேண்டும் என்றிருந்தது. சிறிய அளவில் சொற்ப சந்தாவில் நிறைந்த விஷயங்களுடன் "பாரதி" வெளிவந்து அத் தேவையை அகற்றி விட்டது. அஞ்சா நெஞ்சத்துடன் தனது கடமையை இது ஆற்றியே வந்திருக்கிறது. ஜாதியையும் சமயத்தையும் சமூகத்தையும் சற்றும் கவனியாது தேசியத்தையே தனது உயிராகக் கருதித் தனது சேவையைச் செவ்வனே செய்துகொண்டிருக்கிறது.

இதனால் சம்பாதிக்க நாம் இதை வெளியிடவில்லை. இதன் மூலம் பணம் பெருக்குவதையே நாம் தொழிலாகக் கொள்ளவில்லை. தேசத்தில் தேசியத்தைப் பெருக்க வேண்டும், தமிழ்ப் பத்திரி

காபிமானத்தை வளர்க்க வேண்டும், அரசியல் அறிவை அபிவிருத்தி செய்ய வேண்டும், நாட்டுக்கு நானாவழியில் தொண்டு புரிய வேண்டும் என்ற நோக்கத்துடனேயே நாம் பெரும் நஷ்டத்தையும் பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் தாங்கிக் கொண்டு ஒரு கிராமத்திலிருந்து "பாரதி"யை வெளியிடுகிறோம். எம்மை நேரில் அறிந்த அநேக அன்பர்களுக்குத்தான் இது நன்கு தெரியும். "தமிழ் நாடு தமிழ்ப் பத்திரிகைகளை ஆதரிக்காது, எங்களுடைய அனுபவத்தை உங்களுக்குச் சொல்லுகிறோம்" என்று கூறி எமக்குத் தெரிந்த சில பெரியார்கள் "பாரதி"யை வெளியிட வேண்டாமென்று தடுத்தார்கள். எமது தேசாபிமானப் பெருக்காலும் பொது நலத் தொண்டின் உணர்ச்சியின் வேகத்தாலும், மொழிப் பற்றின் மிகுதியாலும் பத்திரிகாபிமான இழுப்பின் கதியாலும், காலப் போக்காலும் தமிழர்களை நம்பியே "பாரதி"யை வெளியிட்டோம். முன்னர் நமக்குப் புத்திமதிகள் புகட்டிய அறிஞர்களின் வாக்குகள் உண்மையாகிக் கொண்டிருப்பதை இப்பொழுது அறிகிறோம். தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் "பாரதி"யின் ஒரு பிரதி உலாவுமாயின், 100 வாலிபர்களில் ஒருவர் "பாரதி"யை ஆதரிப்பாராயின், பத்து தேசியத் தொண்டர்களில் ஒருவர் இந்த மாசிகையை வாங்கி வாசிப்பாராயின், ஒவ்வொரு ஆரம்ப, நடுத்தரப் பாடசாலைகளுக்கும் ஒரு "பாரதி" வருமாயின் "பாரதி" எவ்வளவோ அபிவிருத்தி அடைந்துவிடும்.

"பாரதி"யை மறக்க வேண்டாம். "பாரதி"யின் பணியை எண்ணுங்கள். தமிழன்பர்கள் அனைவரும் "பாரதி"யை அன்புடன் ஆதரிக்க வேண்டுகிறோம். "பாரதி"யின் ஒவ்வொரு வாசகரும் சந்தாதாரரும் தன்னால் இயன்றவரையில் புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுத்து, "பாரதி"யை ஊக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். பிரிய வாசகர்களே, அன்பர்களே, சந்தாதாரர்களே, அபிமானிகளே, போஷகர்களே! "பாரதி" என்னும் செடிக்கு அனேக சந்தாதாரர்கள் என்னும் தண்ணீரை ஊற்றி வளர்க்கக் கோருகிறோம். "பாரதி"யும் உயரிய பத்திரிகைகளில் ஒன்று என்பது எமது தாழ்மையான அபிப்பிராயம். ஆகையால் "பாரதி"யையும் அவசியம் தயவு செய்து ஆதரியுங்கள்.

வந்தே மாதரம்.

"பாரதி"க்கு மதிப்புரைகள்.

நவ சக்தி

சென்னை, 1929௵ மே௴ 15௳

"பாரதி." இப் பெயர் வாய்ந்த திங்கள் இதழ் ஒன்று வரப் பெற்றோம். இதன் ஆசிரியர் திருவாளர். ரா. நாராயணஸ்வாமி செட்டியார், "தேவாங்க மித்திரன்" என்னும் பத்திரிகைக்கு ஆசிரியரா யிருந்தவர்; "ஏல விவசாயி" என்னும் பத்திரிகைக்கு ஆசிரியரா யிருப்பவர். இவருக்கு மொழியினிடத்தும், சமயத்தினிடத்தும், நாட்டினிடத்தும் தணியாக் காதல் உண்டு. இக் காலத்தில் எழுச்சிக்குக் காரணம் இவருக்குள்ள பல துறை ஆராய்ச்சியே யாகும். திருவாளர். செட்டியாரவர்கள் தமது அரிய பொழுதைப் பெரிதும் நூல்கள், பத்திரிகைகள் முதலியவற்றைப் படிப்பதிலேயே கழித்து வருவோரென்பதை நாமறிவோம். மேல் நாட்டு உலகியல் *துறைகள் பலவற்றில் திருவாளர். செட்டியாரவர்கள் பேராராய்ச்சி யுடையவர்; பத்திரிகை துறையைப் பற்றி மேல்நாட்டறிஞர் பலர் எழுதிய பன்னூல்களை வரவழைத்துப் பயின்று பத்திரிகைகளில் வல்லுநராயினர். நமது நாட்டில் பத்திரிகை யியல் உணர்ந்து பத்திரிகை நடாத்துவோர் மிகச் சிலர். அவருள் ஒருவர் அன்பர் நாராயணஸ்வாமி செட்டியார்.

தற்போது தமிழ் நாட்டில் பத்திரிகை உலகம் உற்றுள்ள நிலையை விரித்துரைக்க வேண்டியதில்லை. தமிழ்ப் பத்திரிகை உலகம் வறுமையுற்றுள்ள இவ் வேளையில், பத்திரிகை யியல் வல்லார் ஒருவர் தமிழ்ப் பத்திரிகை ஒன்று நடாத்த—அதிலும் தேசியப் பத்திரிகை நடாத்த முன் வந்தமை குறித்து மகிழ் வெய்துகிறோம்.

பத்திரிகைக்குப் "பாரதி" என்னும் பெயர் சூட்டியது பல்லாற்றானும் பொருத்த முடையதாகும். நமது பாரதத் தாயின் பெயரை நினைவூட்டும் இப் பெயர்—நமது தமிழ்க் கவி பாரதியை நினைவூட்டும் இப் பெயர் எவ்வாற்றானும் போற்றற் குரியதென்று நாம் கூற வேண்டுவதில்லை.

பெயருக் கேற்ற பொருளும், அமைப்பும், வனப்பும், பிறவும் செறிந்து கிடக்கின்றன. முதல் இதழ்க்கண் கடவுள் வணக்கம், நாட்டு வணக்கம், தமிழ் வணக்கம் என்னும் மூன்றும் காட்சி யளித்தல் நெஞ்சைக் கவர்கிறது. ஆசிரியர் வரைந்துள்ள முகவுரை அவரது பத்திரிகை யுலக ஆராய்ச்சியைச் செவ்வனே புலப்படுத்துகிறது.

அம் முகவுரையின் ஒரு பாங்கர் அயல் நாட்டுப் பத்திரிகைகளின் நிலையைப் பற்றிய கட்டுரை நமது நாட்டார் கருத்தை ஈர்க்கும் என்பதில் ஐயமில்லை. ஒவ்வொரு நாட்டையும் குறிப்பிட்டு அவ்வந் நாட்டுப் பத்திரிகைகளின் நிலையை ஆசிரியர் முறையே கிளர்ந்து கூறியிருக்கிறார். இக் குறிப்பான் ஆசிரியர் எத்துணைப் பத்திரிகைகளுடன் உறவு கொண்டுள்ளாரென்பது விளங்குகிறது.

"பாரதி"யில் போந்துள்ள கட்டுரைகள் பல வாழ்வை வளம் படுத்தும் முறையில் வரையப்பட்டிருக்கின்றன. வாழ்வுக் குரிய பலதிற கட்டுரைகள் "பாரதி"யில் ஒளிர்கின்றன. கல்வி கேள்விகளில் வல்ல ஆண்பாலாரும் பெண்பாலாரும் "பாரதி"க்குக் கட்டுரை வரைந்து வருவது தமிழ் நாட்டிற்குப் பெரு விருந்தளிப்பதாகும். பத்திரிகை நலம் பல "பாரதி"யில் பொலிகின்றன வென்று சுருங்கக் கூறலாம்.

நாட்டைத் திருத்த வேண்டுமென்னும் நோக்குடன் "பாரதி"யை நடாத்தப் புகுந்த அன்பர் நாராயணஸ்வாமியாருக்கு நமது வாழ்த்து உரியதாக

ஸ்ரீ ராமகிஷ்ருண விஜயம்

சென்னை, சுக்கில௵ ஐப்பசி௴

பாரதி யென்னும் இவ்வரிய மாதப்பத்திரிகை பற்பல நற்சின்னங்களுடன் வெளிப் போந்திருக்கிறது. இதன் ஆசிரியர் ஏற்கனவே தேசாபிவிருத்தியிலும் சுதந்திரப் போரிலும் முன்னணியில் நின்றவர். நமக்குக் கிடைத்த சில பகுதியில் காணும் விஷயங்கள், ஆரம்பத்தில் அலக்ஷியத்துடன் பத்திரிகையைப் படிக்கத் தொடங்கினாலுங்கூட படிப்பவர் மனதைக் கவர்ந்து கடைசிவரை படிக்கச் செய்து அவர் அறிவை வெகு விரிவாக்கக் கூடியனவாக இருக்கின்

றன. பத்திரிகையில் தேசியமணங் கமழ்வதுடன், பாரததேசம் சமத்துவம் ததும்ப சகோதரத்வம் ஜ்வலிக்க, சுதந்திர வெற்றியடைய வழிகாட்டியாயிருக்குமென்பதில் தடையில்லை. சிறுவரும் ஸ்திரீகளும் எளிதில் அறிந்து கொள்ளும் நடையில் இனிமையுடனும் ரஸத்துடனும் விஷயங்கள் எழுதப்படுகின்றன. சித்திரங்களும் பல காணப்படுகின்றன. பத்திரிகை பாரதநாட்டை மேன்மைப்படுத்துமென்று நம்புகிறோம்.

சுதேச மித்திரன்

சென்னை, சுக்கில௵ சித்திரை௴ 8௳ (20—4—29.)

பாரதி:— இஃது ஓர் தேசீய மாதப் பத்திரிகை. இது 1929-ம் வருஷம் ஜனவரி முதல் வெளி வருகிறது. இதன் ஆசிரியர் இத் தொழிலுக்குப்புதிதல்ல; இவர் 'தேவாங்க மித்திர'னின் மாஜி ஆசிரியர், 'ஏல விவசாயி'யை இப்போது நடத்துபவர். நமக்கு அனுப்பப்பட்டிருக்கும் முதலிரண்டு இதழ்களினின்றும் இப்பத்திரிகை தேசத் தொண்டு புரிவதாய்க் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பதை நன்கு நிறைவேற்றும் என்ற நம்பிக்கை உண்டாகிறது. தேசாபிமானம், பாஷாபிமானம், சமயம், ஆசாரச் சீர்திருத்தம் போன்ற பற்பல துறைகளில் உழைக்க இச்சஞ்சிகை முற்பட்டிருப்பது போற்றத்தக்கதாகும். முதல் சஞ்சிகையில் 3 படங்களும் இரண்டாம் சஞ்சிகையில் 3 படங்களும் காணப்படுகின்றன.

சுதேச பரிபாலினி

இரங்கூன், 1929௵ ஜூன்௴ 15௳

"பாரதி" என்னும் பெயர் தாங்கிய ஒரு தேசீய மாதப் பத்திரிகையொன்று நமது பார்வைக்கு வரப்பெற்றோம். காலம் சென்ற பாரதியாரைப் பற்றி நாம் புதிதாக வாசகர்களுக்கு ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. வரகவி, தமிழ் நாட்டைத் தட்டி யெழுப்பிய கவிச் சிங்கமாகுவர். எனவே அப்பெரியாரின் பெயரைத் தாங்கி வெளியாகும் இச்சஞ்சிகையின் ஆசிரியரைத் தமிழுலகு நன்கறியும். இவர் முன் தேவாங்க மித்திரன் என்ற பத்திரிகையின் ஆசிரிய பீடத் தமர்ந்து தமது சமூகத்திற்கும் தேசத்திற்கும் தம்மாலாய தொண்டு செய்து

வந்தவராகுவர். இச்சஞ்சிகைக்குத் தமிழ்ப் பெரியார்களும் பண்டிதை பத்மாசனி அம்மாள், பண்டிதை அசலாம்பிகை அம்மாள் ஆகிய சகோதரிகளும் கட்டுரைகள் வரைந்துள்ளனர். "பாரதி"யில் வெளிவரும் விஷயங்களைப் படிப்பவர்களுக்கு தேசீய உணர்ச்சி பொங்குமென்றே கூறலாம். தேசாபிமானம், பாஷாபிமானம், பாரதி உதயம், தமிழ் வேதம் ஆகிய தலைப்பின் கீழ் வரையப்பட்டுள்ள கட்டுரைகள் படிப்பதற்கு உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளிப்பதோடு தேசியத் தொண்டில் போதிய பங்கெடுத்துக் கொள்ளும்படி மக்களைத் தூண்டுவதாகவுமிருக்கிறது.

செங்குந்த மித்திரன்

சென்னை, சுக்கில௵ பங்குனி௴

ஸ்ரீ ரா. நாராயணஸ்வாமி அவர்களை ஆசிரியராகக் கொண்டு உத்தமபாளையத்திலிருந்து வெளிவரும் பாரதி என்னும் உயரிய தேசீய மாத வெளியீட்டின் இதழ்கள் சில கிடைக்கப் பெற்றோம். அவ்விதழ்களின் முகப்பில் இந்தியர்களனைவரும் சமத்துவ நெறிபற்றிச் சகோதரபாவம் பூண்டு சுதந்திரப்போர் தொடுக்கத் தயாராகி விட்டனரென்பதைத் தெள்ளத் தெளிய உணர்த்தும் சுதந்திர தேவியின் திருவுருவம் அழகு செய்து நிற்கின்றது. சென்ற டிஸம்பர் மாதத்தோடு ஓராண்டு வயது நிறையப் பெற்று இரண்டாமாண்டு தொடக்கத்திலிருக்கும் பாரதியில் பல அரிய ஆராய்ச்சி விஷயங்கள் வெளியிடப் பெறுகின்றன. அத்தகைய நுண்ணிய ஆராய்ச்சிகள் பல, கண்டு பிடித்த அறிஞர்களின் சரிதங்கள் பல விவரிக்கப் படுகின்றன. உரை நடை எளிமை யுடையதாய் இனிமை பயப்பதாய் இலக்கியச் செறிவுடையதாய் வரையப்படுகின்றது. தமிழ் மக்களனைவரும் ஆதரித்து இதனை உயர் நிலைக்குக் கொணர வேண்டுமென்பது எமது பேரவா.

தமிழரசி

கோலாலம்பூர், சுக்கில௵ வைகாசி௴

"பாரதி" என்ற பெருமை வாய்ந்த பெயருடன், மதுரை ஜில்லா, உத்தமபாளையத்திலிருந்து இவ்வுயரிய மாசிகை வெளிவருகின்றது. இதன் ஆசிரியர் திரு. நாராயணசுவாமி யாவர். தமிழ் நாட்டில் தேசீ

யப் புலவர் பாரதியாரின் அருமையான பாடல்களை யறியாதாரிலர். அப்பெரியாரது பெயர் தாங்கியுள்ள "பாரதி" கவீந்திரரின் வீரஞ் செறிந்த திருவுரைகளை யொப்ப மனதிற்கு எழுச்சி தரவல்ல வியாசங்களையும், ஆவேசத்தைக் கிளப்பவல்ல பாக்களையும், அருத்த புஷ்டியான ஆராய்ச்சிகளையும், கருத்தடக்கிய கட்டுரைகளையும் தன்னுள்ளடக்கித் தமிழ் மக்களுக்குத் தேசிய உணர்வைத் தீவிரமாய் ஊட்ட முன்னணியில் நிற்கின்றது. இப்பத்திரிகையையும், ஆசிரியரையும் மனமார வாழ்த்துகின்றோம். இஃது தமிழ் நாட்டில் நீடித்து நின்றுலாவி அரிய பெரிய பணிகள் புரியுமாறு தமிழ் மக்கள் "பாரதி"க்குப் போதிய ஆதரவளித்து ஊக்கிவர வேண்டுகின்றோம்.

இந்தியன்

அதமன்கோட்டை, 28—2—30.

தேனினுமினிய செந்தமிழ் மொழியில் பற்பல அறிஞர்களால் எழுதப்பட்ட அழகிய கட்டுரைகளுடன் தேசத்தொண்டு புரிய வந்துதித்த பாரதியை நாம் மனமார வரவேற்கிறோம். தேசிய நறுமணங் கமழும் விஷயங்களும், தேசிய வீரர் திவ்ய சரிதைகளும், தேசாபிமான மூட்டும் கட்டுரைகளும் இதில் காண்கின்றன. சுத்தானந்த பாரதியார், திரு ரா. பி. சேதுப்பிள்ளை, திரு வி. கல்யாண சுந்தர முதலியார் போன்ற தமிழ்ப் புலவர்களின் நல்லாதரவை பாரதி பெற்றிருக்கிறது. மஹாத்மாஜி, பண்டித நேரு, இராஜாராம் மோகன்ராய் போன்ற தேசபக்த சிகாமணிகளின் திருவுருவப் படங்கள் மாதந்தோறும் பாரதியில் வெளிவரும். இதன் ஆசிரியர் ஸ்ரீ ரா. நாராயணஸ்வாமி அவர்களைத் தமிழுலகமும் பத்திரிகா உலகமும் நன்கறியும். இது பொழுது போக்கை உத்தேசமாகக் கொண்ட பத்திரிகையல்ல; பாரத மக்களுக்கு சுதந்திரப் பாதை காட்டும் வீரவிளக்கு. இதனை இடை குறை வாராமல் ஆதரிப்பதொன்றே தமிழ் மக்கள் கடன்? பாரதியைப் பரம் பொருள் காத்து ரக்ஷிப்பாராக.

முஸல்மான்

தென்காசி, 1929௵ மே௴

"பாரதி" என்று நாமஞ் சூடப்பெற்ற மாதச் சஞ்சிகையின் 1, 2 இதழ்கள் எம் கணிப்புரைக்கென வரப்பெற்று ஆர்வத்துடன் பார்வையிட்டோம். "தேவாங்க மித்திரன்" "ஏல விவசாயி" என்ற சஞ்சிகைகளின் ஆசிரியரும், தேசத்தொண்டில் சிறந்தவரும், முதிர்ந்த அனுபவமுள்ளவருமான ஸ்ரீமான் ரா. நாராயணசுவாமி அவர்களை அதிபராகக் கொண்டு அழகிய முறையில் 80 பக்கங்களுடன் வெளிவரும் இச் சஞ்சிகையில் பாஷாபிமானம், தேசாபிமானம், மதாபிமானம் முதலியன ஒருங்கே அமையப்பெற்றும் மக்களுக்கு அவசியமான அருமை பெருமை வாய்ந்த ருசிகரமான வியாசங்களும் மிளிர்ந்துகொண்டிருக்கின்றன. ஆதலால் இதைத் தமிழ் நாட்டினர் யாவரும் ஆதரித்துப் பயன் பெறுவார்களாக.

தேச பக்தன்

கொழும்பு, சுக்கில௵ வைகாசி௴ 28௳

பற்பல பிணக்குகளிலும், வீண் விவாதங்களிலும் ஈடுபட்டு நமது தற்கால தமிழ்நாடு தனது அரும் ஆற்றலை வீணாக்கி வரும் பொழுது உண்மை விடுதலைக்கும் சீர்திருத்தத்திற்கும் அரசனாய் நின்று பாடு பட்டுழைக்க ஒரு சிலர் முன் வந்து நிற்கின்றனர். இவர்களைக் கண்டுதான் வருந்தி வாடும் மனம் சிறிது ஆறுதலடைகின்றது. இத்தகைய உழைப்பாளர் கூட்டத்தில் ஒருவராகிய நண்பர் திரு. ரா. நாராயணஸ்வாமி சமீபத்தில் "பாரதி" என்ற அழகிய திருநாமம் புனைந்த ஒரு மாசிகையை ஆரம்பித்திருக்கிறார். இந்த சஞ்சிகையின் மூன்றிதழ்கள் நமது பார்வைக்கு வந்துள்ளன.

"பாரதி" தன் அழகிய பெயருக் கேற்பப் பல அரும் பெரும் விஷயங்களைத் தாங்கி வெளி வருகின்றது. அரசியல், சமூக விஷயங்கள் எல்லாவற்றையும் பற்றி சிறந்த கட்டுரைகள் அதில் வெளி வருகின்றன. ஒரு சஞ்சிகையைக் கையில் எடுத்துப் பிரித்துப் பார்த்தவுடன் கேவலம் பொருளையோ புகழையோ குறிப்பாகக் கொண்டு அது நடத்தப்படவில்லை யென்று தெரியவரும். மாதர் முன்னேற்றத்திற்கு வேண்டிய பல அரிய விஷயங்கள் "பாரதி"யில் இடம் பெற்றுள்ளன. சித்திரப் படங்கள் பலவும் அதில் மிளிர்ந்தழகு செய்கின்றன. பத்திரிகையின் அச்சுப் பதிப்பு கண்ணைக் கவரும் நவீன முறையில் அமைந்துள்ளது. படித்த தமிழன் ஒவ்வொருவரும் "பாரதி" போன்ற பத்திரிகைகளை மிகவும் ஆதரிக்க வேண்டுவது அவசியம்.

தமில் நாட்டில் எண்ணைத் தொலையாத பத்திரிகைகள் தோன்றி மறைகிற இக்காலத்தில் "பாரதி" தமிழர் ஆதரவுக்குறைவால் துன்புறும் நிலைமை அடைய விடுதல் பெரும் இழுக்கென்று கூறுவோம். "பாரதி" பல்லாண்டு வாழ்ந்து தமிழர் வசிக்கும் நாடெல்லாம் தவழ்ந்திலங்க இறைவன் அருள்வானாக.

சித்தாந்தம்

சென்னை, விபவ௵ பங்குனி௴

பாரதி:—இது புதியதொரு தேசீய மாதப் பத்திரிகை. அருமையான பல கட்டுரைகள் தமிழில் நல்ல முறையில் எழுதப் பட்டுள்ளன.

ஊழியன்

காரைக்குடி, 1929-௵ மே௴ 7௳

பாரதி. இம் மாதப் பத்திரிகையின் முதல் இரண்டு இதழ்கள் வரப் பெற்றோம். இதன் அமைப்பு மனதைக் கவர்வதாயிருக்கின்றது. இனிய நடையில், இரசமான கட்டுரைகள் அடங்கி யிருக்கின்றன. தேசாபிமானமும், ஆசாரச் சீர்திருத்த ஆர்வமும் அக் கட்டுரைகளில் ததும்புகின்றன. இதற்கு நமது வாழ்த்து உரியதாகும்.

அருணகிரி

பள்ளத்தூர், சுக்கில௵ சித்திரை௴

பாரதி, மதுரை ஜில்லா உத்தமபாளையத்திலிருந்து வெளிவரும் மாதப்பத்திரிகை; ஆசிரியர் திருவாளர். ரா. நாராயணஸ்வாமி அவர்களாகும். இதன் இரண்டு மணிகள் நமது பார்வைக்கு வரப் பெற்றோம். இது முன்னர் ஒரு துறைநோக்கொடு வேலை செய்து வரும் 'ஏல விவசாயி' என்னும் கிருஷிப் பத்திரிகையின் ஆசிரியரான நாராயணஸ்வாமி அவர்களால் பொது நோக்கில் வேலைசெய்ய ஏற்பட்ட மற்றோர் சிறந்த பத்திரிகையாகையால், இதைத் தமிழர்கள் யாவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம். அழகிய பேப்பரில் சில படங்களுடன் பாஷை, சமயம், ஆசார சீர்திருத்தம், விவசாயம், சரித்திரக் கலை, பொருளாதாரம் முதலிய விடயங்கள் பற்றிய கட்டுரைகளைக் கொண்டு வெளிவரும் பாரதி சிறப்புற்றோங்கி நாட்டிற்கு நலன் பல நல்குக.

இளந்தமிழன்

தூத்துக்குடி, விபவ௵ பங்குனி௴

"பாரதி"யின் முதல் மணிகளிரண்டு வரப்பெற்றோம். இரண்டு வருட காலம் "தேவாங்க மித்திரன்" என்னும் சமூகப் பத்திரிகைக்கும் "ஏல விவசாயி" யென்ற பத்திரிகைக்கும் ஆசிரியராயிருந்து நாட்டுக்குத் தொண்டாற்றிவந்த நமது நண்பர் திரு. நாராயணஸ்வாமியவர்கள் "பாரதி"யின் ஆசிரியராவர். "பாரதி" கவியரசு ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியின் ஞாபகத்தைத் தமிழர்களுக்குத் திங்கள்தோறும் இடித்திடித்து ஊட்டுவதுபற்றி நாம் பெருமகிழ்ச்சியுற்று நல்வரவு கூறுகின்றோம்.

"பாரதி"யின் முதலிரு மணிகளில் காணப்பட்ட கட்டுரைகளை நாம் வாசித்தோம். ஆசிரியரவர்களால் எழுதப்பட்ட "தேசாபிமானம்" என்னும் கட்டுரை எமது உள்ளத்தைக் கொள்ளை கொண்டது; உரோமத்தைச் சிலிர்க்கச் செய்தது. பின்னும் "பாரதி"யில் திரு. வி. கலியாணசுந்தர முதலியார், சுத்தானந்த பாரதியார், ரா. பி. சேதுப்பிள்ளை, எஸ். சோமசுந்தர பாரதியார், பண்டிதை அசலாம்பிகை அம்மையார் முதலிய தமிழ்நாட்டு நல்லறிஞர்களால் எழுதப்பட்ட வியாசங்களும் பாக்களும் வெளிவந்து தமிழ் நாட்டாருக்கு இன்பமூட்டுகிறது. காந்தியடிகள், மோதிலால் நேரு, அரசர் அமானுல்லா, ராஜாராம் மோகன்ராய் முதலிய பெரியாருடைய படங்களையும் நம் பாரதி தன்னகத்தே கொண்டுள்ளது. இப்பத்திரிகை உருவத்திலும் உள்ளுரைகளிலும் உயரிய தேசீய நோக்கத்திலும் உயர்வாக ஓங்கி நிற்கின்றது. ஆகையால் நம் "பாரதி"யைத் தமிழ் மக்கள் யாவரும் ஆதரிக்க வேண்டுகிறோம். "பாரதி"யும் பத்திரிகாசிரியரும் பல்லாண்டு வாழ பரமனடிகளைப் பணிகின்றோம்.

குடியரசு

ஈரோடு, சுக்கில௵ சித்திரை௴ 16௳

R. நாராயணசாமி அவர்களை ஆசிரியராகக் கொண்டு உத்தமபாளையத்தினின்றும் வெளிவரும் பாரதி என்ற திங்கள் வெளியீட்டின் முதல் இரண்டு பத்திரிகைகள் வரப்பெற்றோம். இதில் தற்கால

முன்னேற்றத்திற் கேற்ற விஷயங்கள் பல அறிஞர்களால் எழுதப் பட்டிருக்கின்றன.

தமிழ் நேசன்

கோலாலம்பூர், சுக்கில௵ சித்திரை௴ 22௳

“ஏல விவசாயி” பத்திரிகையின் ஆசிரியராகிய ரா. நாராயணஸ்வாமி அவர்களை ஆசிரியராகக்கொண்ட தேசியப் பத்திரிகையாகிய பாரதி என்னும் சஞ்சிகையின் 1,2 இதழ்கள் வரப்பெற்றோம். ஜாதிப் போராட்டங்களும், சமயக் கிளர்ச்சிகளும், தீண்டாமைப் பிணக்குகளும் தென் நாட்டில் மலிந்துகிடக்கும் இக்காலத்தில், யாவரையும் ஒன்றுபடுத்தி ஜாதி வித்தியாசங்களைப் பாராட்டாது எல்லா ஜனங்களும் இந்தியர் என்ற ஹோதாவில் தேச விடுதலைக்காக உழைக்க வேண்டுமென்னும் உயர் நோக்கத்துடன் இப்பத்திரிகை கிளம்பியிருக்கின்றது. மக்களுக்கு இன்றியமையாததான, தேசாபிமானம், பாஷாபிமானம், சமயம், ஆசாரச் சீர்திருத்தம், விவசாயம், பெண்கள் முன்னேற்ற விஷயங்கள், விநோதங்கள், தேசிய கீதங்கள் இந்திய மகான்களின் சரித்திரங்கள் முதலிய பல விஷயங்கள் இதனிடத்தே காணப்படுகின்றன. தமிழ்நாட்டுப் பெரியார்கள் பலரும் பல அரிய விஷயங்களை இதனிடத்தே வரைந்துள்ளார்கள். பெண்மக்கள் நலம் கருதி அவர்களின் அடிமை வாழ்வு, அறியாமை, கல்விக்குறைவு, மூட வழக்கங்கள் முதலியவற்றை எடுத்துக் காட்டி அவற்றைப் போக்கி அவர்களுக்கு விடுதலை அளிக்கவேண்டிய அவசியத்தையும் இச் சஞ்சிகை வற்புறுத்திக் கூறுகின்றது. தமிழ்மக்கள் யாவரும் இதனை ஆதரித்துப் போற்றுவார்களென்று நம்புகின்றோம்.

தமிழன்

கோலார் தங்கவயல், சுக்கில௵ சித்திரை௴ 12௳

பாரதி எனும் பெயரிய மாதாந்தப் பத்திரிகையின் இரண்டு வெளியீடுகள் கைவரப்பெற்றோம். மேலை நாட்டுக் கலை பயின்ற

அறிஞர் பலரும் அப்பத்திரிகைக்கு கட்டுரையாளராயிருந்து வருகின்றனர். அவர்களால் எழுதப்பட்டுள்ள கட்டுரை ஒவ்வொன்றும் நல்லியலைத் தன்னகத்தடக்கப் பெற்றதாய்த் திகழ்கின்றன. அதின் ஆசிரியர் திரு R நாராயணசாமி என்பவராகும். இவர் பல ஆண்டுகளாய்த் தேசியத்தொண்டிலீடுபட்டு, அரசு, சமயம், சமூகம் எனும் இயக்கங்களை நன்குணர்ந்தவராய் மிளிர்வதுடன் “ஏல விவசாயி” “தேவாங்க மித்திரன்” எனும் பத்திரிகைகளின் ஆசிரியராகவுமிருந்து நல்லனுபவம் வாய்க்கப் பெற்றவராயிருக்கிறார். பொதுஜன நன்மையை நாடும் ஒவ்வொருவரும் இப் பத்திரிகையினை ஆதரிக்க வேண்டுவது கடமையாகும்.

இந்திய மித்திரன்

ஈப்போ, சுக்கில௵ வைகாசி௴ 4௳

பாரதி.—மதுரை ஜில்லா, உத்தமபாளையத்திலிருந்து 1929௵ ஜனவரி மாதமுதல் வெளியாகும் சிறந்த மாதாந்த செந்தமிழ்ப் பத்திரிகை. இதன் ஆசிரியர் ஸ்ரீமான் ரா. நாராயணஸ்வாமி யென்னும் தமிழ் வல்லுநராவர். இஃது பொதுப் பெருநோக்கோடு சுதந்திரம் சமத்வம், சகோதரத்வம் ததும்ப பேரறிஞர்களால் வரையப்பட்ட அநேக அரிய விஷயாலங்காரத்தோடு ஜ்வலிக்கிறது.

இத்துணைச் சிறப்போடும் தலைவர்களின் உருவப்படங்களோடும் மாதம் 80 பக்கங்களில் குறையாத புத்தக ரூபமாக முத்துப் போன்ற எழுத்துக்களால் உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சாகி வரும் அழகிய இம்மாசிகையின் வருடச் சந்தா மிக மிக சொற்பம். உள்நாடு ரூபா 2. வெளிநாடு ரூபா 2-8-0 அல்லது 4 ஷிலிங். தமிழர்கள் ஒவ்வொருவரும் ஆண், பெண், ஜாதி மதம் கொள்கையாதிய பேதமின்றி இப் பத்திரிகையைப் படிப்பதாற் பயனடைவார்களென்பதே எமது துணிபு. இப்பத்திரிகையின் ஆசிரியர் “ஏல விவசாயி” என்னுமோர் அரிய விவசாயப் பத்திரிகைக்கும் ஆசிரியராயிருந்து வருவதோடு “தேவாங்க மித்திர” னென்னும் சமூகப் பத்திரிகையின் ஆசிரியராகவுமிருந்தாரெனத் தெரிவதாலேயே இப்பத்திரிகை எத்தகைய உயரிய முற்போக்கில் உழைக்கத் தக்க உத்தம பத்திரிகையாயிருக்குமென்பதை வாசகர்களே ஊஹித்துக்கொள்ளலாம்.

சிவ நேசன்

பலவான்குடி, சுக்கில௵ சித்திரை௴ 17௳

பாரதி:— மதுரை ஜில்லா, உத்தமபாளையத்திலிருந்து திரு. ரா. நாராயணஸ்வாமி அவர்களை ஆசிரியராகக் கொண்டு சித்திரப் படங்களுடன் வெளிவரும் சிறந்த செந்தமிழ்த் தேசியத் திங்கள் வெளியீடு. இதனது முதன் மாலையின் முதலிரண்டு மணிகள் நமது பார்வைக்கு வந்துள்ளன. இது படிப்போர்க்குத் தேசிய விஷயங்களை மெய்ப்பாடு தோன்றும் வண்ணம் மிக்க உருக்கமாகப் போதிக்கும் விழுப்பமுடையதாகும். தாய்மொழியாகிய தமிழ் மொழியின் வரலாற்று முறையாதியவற்றையும், சமயவுண்மை, பெரியோர் சரித்திரம், வேளாண்மை, வியாபாரம், கைத்தொழில் முதலியவற்றையும் பலமுகமாக எளிய நடையில் எடுத்துரைக்கும் ஏற்றமுடையதாகும். இதன் முகவுரையில் பத்திரிகையின் வரலாறு, வளர்ச்சி, பயன் முதலியவற்றை விரிவாக விளக்கியிருப்பது குறிப்பிடற்குரியதாகும். சாதி சமயப் பிணக்கின்றி, கட்சி வேற்றுமை காட்டாது, இந்தியர் எல்லோரும் பாரதத்தாயின் புத்திரர்கள் என்ற லட்சியத்தை மேற்கொண்டு தேச முன்னேற்றமடையத் தக்க வழிகளைக் காட்டுவதே கடப்பாடாகக் கொண்டுள்ளது. தேசாபிமானமில்லாதார்க்கும் அதனை அதிகமாக உண்டுபண்ணி அவ்வழியில் அவர்களைச் செலுத்தும் செவ்விய வுரை நடைகளைத் தன்னகத்துக் கொண்டுழைப்பது. இவ் வுயரிய பத்திரிகையை நாட்டு நலங்கருதும் ஒவ்வொருவரும் கைவிடாது கொண்டொழுகுதல் கடமையாம்.

முன்னேற்றம்

சிங்கப்பூர், சுக்கில௵ சித்திரை௴ (9—5—29.)

பாரதி:— இப்பெயர் கொண்ட மாதப் பத்திரிகையின் முதலிரண்டு சஞ்சிகைகள் நமக்குக் கிடைத்தன. இஃது திருவாளர் ரா. நாராயணஸ்வாமி அவர்களை ஆசிரியராகக் கொண்டு உத்தமபாளையத்திலிருந்தும் வெளி வருகின்றது. இப்பத்திரிகை தேசிய விடுதலையைக் கோரி. திறமுடன் வாலிபர் எழுச்சிக்கும், மாதர் முன்னேற்றத்திற்கும் முன்னணி நின்றுழைக்கக் கருதியுள்ளதாய் அறியக்கிடக்கின்றது. இது அழ

கிய படங்களுடனும் சிறந்த கட்டுரைகளுடனும் 80 பக்கங்களுடன் மிளிர்கின்றது.

விஸ்வ நேசன்

ஈரோடு, சுக்கில௵ வைகாசி௴ 10௳

திருவாளர் R. நாராயணசாமி அவர்களை ஆசிரியராகக் கொண்டு உத்தமபாளையத்தினின்றும் வெளிவரும் பாரதி என்ற திங்கள் வெளியீட்டின் முதல் இரண்டு பத்திரிகைகள் வரப்பெற்றோம். இதில் தற்கால முன்னேற்றத்திற்கேற்ற விஷயங்கள் பல அறிஞர்களால் எழுதப் பட்டிருக்கின்றன.

தாருல் இஸ்லாம்

சென்னை, 1929௵ ஏப்ரல்௴ 19௳

திரு. ரா. நாராயணஸ்வாமியை ஆசிரியராகக் கொண்டு உத்தமபாளையத்திலிருந்து வெளியாகும் "பாரதி" என்ற மாதப் பத்திரிகையின் முதலிரண்டு இதழ்கள் வரப்பெற்றோம். பிரபல கட்டுரையாளரால் எழுதப் பெற்ற பல பொருள் செறிந்த வியாசங்கள் காணப்படுகின்றன. இதில் சித்திரப் படங்களுமுண்டு.

குமரன்

காரைக்குடி, சித்திரை௴ 6௳

பாரதி:— இப்பெயர் கொண்ட தமிழ் மாதப் பத்திரிகையின் முதலிரண்டு இதழ்கள் கிடைக்கப்பெற்றோம். இதன் ஆசிரியர் திருவாளர் ரா. நாராயணஸ்வாமி அவர்கள். இதில் தேசாபிமானம், பாஷாபிமானம், ஆசாரச் சீர்திருத்தம், கைத்தொழில், பெண்கள் முன்னேற்றம் முதலிய பல அரிய விஷயங்கள் வெளிவருகின்றன. இராஜாராம் மோகன்ராய், பாரதியார் முதலிய பல பெரியார்களின் வாழ்க்கைக் குறிப்புகளும், படங்களுடன் வெளியிடப்படுகின்றன. எண்பது பக்கங்களுடன் நல்ல காகிதத்தில் சிறந்த முறையில் அச்சிடப் பெறுகிறது.

உதய தாரகை

யாழ்ப்பாணம், 26—4—29.

பாரதி:— இது புதிதாய் உத்தமபாளையத்திற் பிரசுரிக்கப்படுகின்ற ஒரு தேசிய மாதப் பத்திரிகை. திரு. ரா. நாராயணஸ்வாமி அவர்கள் இதன் ஆசிரியர். விசேஷ பிரபுக்கள் பலர் தற்போது இதன் போஷகர்களாய் ஏற்பட்டிருக்கிறார்கள். தேசாபிமானம், பாஷாபிமானம், சமயம், ஆசாரச் சீர்திருத்தம், ஜீவிய சரித்திரங்கள், விவசாயம், தொழில், வியாபாரம், நாட்டுப் பழைய புதிய சரித்திர ஆராய்ச்சிகள், அயல் நாடுகள், வாலிபர் கன்னியர்க்குரிய கட்டுரைகள் முதலான தேசிய முன்னேற்றத்துக்கு இசைந்த விஷயங்களை வழக்கமாய் வெளியிடுவது ஆசிரியர் நோக்கம். எமக்கு அனுப்பப்பெற்ற பிரதியை மனமுவந்து ஏற்றோம்.

கலிகால தீபம்

காரைநகர் சுக்கில ஆவணி 16.

பாரதி:— மதுரை ஜில்லா உத்தமபாளையத்திலிருந்து திரு. ரா. நாராயணசாமியை ஆசிரியராகக் கொண்டு மாதந்தோறும் வெளிவரும் இப்பத்திரிகை தேசாபிமானம், பாஷாபிமானம், சமயம், ஆசார சீர்திருத்தம், ஜீவிய சரித்திரங்கள், விவசாயம், தொழில் வியாபாரம், சரித்திரம், கலைவளர்ச்சி, பொருளாதாரம் முதலிய பல விஷயங்களால் பொலிவுற்று விளங்குகின்றது. திரு. நாராயணசாமி பத்திரிகைத்தொழிலில் விஷேட அனுபவம் உடையவரென்பது அவர் எழுதும் விஷயங்களால் பெரிதும் விளங்குகின்றது.

வேளாளன்

தூத்துக்குடி, சுக்கில௵ ஆனி௴

பாரதி:— இஃதொரு மாதப் பத்திரிகை. இதன் ஆசிரியர் திரு. R. நாராயணசாமி செட்டியார் அவர்கள். இதன் நாலாவது இதழ் நமது பார்வைக்கு வந்தது. தேசிய மணங்கமழும் பல கட்டுரைகள் காணப்படுகின்றன. பார்வைக்கு மிக அழகான முறையில் அமைந்திருக்கிறது. பத்திரிகையை தேசமக்கள் ஆதரித்தல் அவசியம்.

தெய்வீகன்

பொன்மலை, திருச்சி. 1929-௵ மே௴

நண்பர் R. நாராயணசாமியாரை ஆசிரியராகக் கொண்ட "பாரதி" திங்கள் ஏடுகள் நான்கு நமது காரியாலயத்திற்குப் போந்திருக்கின்றன. "பாரதி," திங்கள் தாள்களுள் தலைமை பெற்றிலங்குவதற்கு ஆசிரியரின் முதிர்ந்த அநுபவமும், நிறைந்த நாட்டுப் பற்றுமே பொருட்டுகளாகும். திருமிகு நாராயணசாமியார் தொண்டிலும், தியாகத்திலும் கொண்டுள்ள விருப்பே "பாரதி"யாகத் திகழ்கிறதென்பதைப் பத்திரிகையுலகம் நன்குணர்ந்ததாகும். "தேவாங்க மித்திரன்," "ஏல விவசாயி" முதலிய பத்திரிகைகளை நடாத்திப் பெற்ற அநுபவத்தையும் பத்திரிகை உலகிலேயே இளமை தொட்டுப் பெற்றிருக்கின்ற நெருங்கிய தொடர்பையும் பயன் படுத்தும் முறையில் வெளிவருகின்ற "பாரதி"யை வளர்த்தல் தமிழ் மக்களின் இன்றியமையாத பெருங் கடமை யென்பதை ஞாபக மூட்டுகின்றோம்.

கமருஸ்ஸமான்

காயற்பட்டணம், 1929-௵ மே௴

'பாரதி.' இஃது ஸ்ரீமான் ரா. நாராயணஸ்வாமி யென்பவரை ஆசிரியராய்க்கொண்டு மதுரை ஜில்லா உத்தமபாளையத்திலிருந்து வெளிவருகிற ஒரு தேசீய மாதப் பத்திரிகையாகும். இதன் 1, 2, மாதப் பிரதிகள் எமது விமர்சனத்திற்கென அதன் ஆபீஸிலிருந்து வரப்பெற்றோம், அவை பெயருக்கேற்ப உயரிய தமிழ் நடையிலும், சிறந்த விஷயதானங்களோடும், அதிகப் பக்கங்களோடும், சுத்தப்பதிப்பிலும், நல்ல காகிதத்திலும், அழகிய உருவத்திலுமிருக்கின்றன. சுத்த சுதேசியமே அதன் பிரதம நோக்கமாகத் தோன்றுகிறது. தேசாபிமானம், பாஷாபிமானம், தமிழர், வீரர், தேசீய ஒற்றுமையாகிய பலதலையங்கங்களை இதன் உயரிய நோக்கங்களை வெளிப்படுத்துகின்றன. இப்பத்திரிகையின் நல்ல முறை இதன் ஆசிரியரின் பெருந்தன்மையைக் காட்டுகிறது. இவ்வாசிரியர், "பாரதி" & "ஏல விவசாயி" என இரு பத்திரிகைகளை நடத்திவருவதோடு "தேவாங்க மித்திரனு"க்கு மாஜி ஆசிரியராயுமிருக்கிறாரெனத் தெரிகிறது.

தேச பந்து

புதுக்கோட்டை, 19—5—29.

தேசியவாதியும், 'ஏலவிவசாயி' என்ற பத்திரிகையின் ஆசிரியருமான ஸ்ரீமான். R. நாராயணஸ்வாமியை ஆசிரியராகக் கொண்டு மாதந்தோறும் சிறந்த விஷயங்களுடனும் அழகிய உருவத்துடனும் வெளிவரும் பாரதியை சந்தோஷத்துடன் வரவேற்கிறோம். தேசவிடுதலைக்காக உழைக்கும் பாரதிக்குத் தமிழ் நாட்டில் சந்தாதார்கள் ஏராளமாகச் சேரவும், அதிக ஆதரவு கிடைக்கவும் விரும்புகிறோம்.

தமிழானந்த போதினி

திருத்தங்கல், சுக்கில௵ சித்திரைமீ

பாரதி:—மதுரை ஜில்லா உத்தமபாளையத்திலிருந்து, R. நாராயணஸ்வாமி அவர்களை, ஆசிரியராகக்கொண்டு தேசியத் தலைவர்களின் திருவுருவப் படங்களுடன் வெளிவரும் சிறந்த செந்தமிழ் தேசியத் திங்கள் வெளியீடு. இதன் முதன் மாலையின் 1, 2-மணிகள் எமது பார்வைக்குக் கிடைத்தன. இதை வாசிப்போர்களுக்கு தேசீய விஷயங்களின் மெய்யறிவை உணர்த்தி உருக்கமாகப் போதிக்கும் விழுப்பமுடையதாகும். தாய்மொழியின் அருமை பெருமைகளையும் விளக்கிக் காட்டுவதான சில கட்டுரைகளும் வேளாண்மை, வியாபாரம், சமய உண்மை, பெரியார்களின் சரித்திரம் முதலியவற்றை விரிவாக எடுத்துரைக்கும் ஏற்றமுடையது. இதன் முதன் மணியில் பத்திரிகையின் வரலாறும் வளர்ச்சியின் பயனும்; இரண்டாவது மணியில் புத்தகத்தால் ஆயபயனும் விரித்துரைத்திருப்பது புகழத்தக்கதே. பொதுவாய் இதுகாறும் நம் தமிழ் நாட்டில் தோன்றிய மாசிகைகளுக்கெல்லாம் பாரதியைச் சிரோன்மணியெனக் கூறலாம். தற்காலம் பத்திரிகைகளின் வளர்ச்சி முற்றிலும் வசைப் புராணத்திலென்பது நமது ஆசிரியர் அறியாததல்ல. பாரதியோவெனில் அதனையகற்றி ஜாதிபேதமின்றி, இந்தியர்களெல்லோரும் ஒரே தாயின் மக்களென்ற கொள்கையோடு, தேச முன்னேற்றத்தையே கருதுவதால் நம் பாரதநாடு முற்றிலும் கைவிடாது ஆதரித்தல் கடமையாம்.

சென்னை வர்த்தமானி

சென்னை, சுக்கில௵ ஆனிமீ 3உ

பாரதி:—ஒரு தேசிய மாதப் பத்திரிகை. ஆசிரியர் திரு. ரா. நாராயணஸ்வாமி. இதன் மாலை 1 மணி 3 ஆசிரியர் தலையங்கத்தில் 'இந்தியாவின் வேலை' என்பதின் கீழ் இலங்கையில் இந்தியர் படும் கஷ்டங்களை யெடுத்துக்கூறி, சிங்களர் இந்தியரிடத்தில் நன்றி விசுவாசம் உள்ளவராயிருத்தல் வேண்டும் என்பதற்குத் தக்க காரணங்களை எடுத்துக் கூறியுள்ளார். பண்டிதர் திரு அ. கிருஷ்ணசாமி நாயுடு 'தமிழர் கலைமகள்' என்ற வியாசத்தில் தமிழின் மேன்மையை எடுத்துக்காட்டி, நம்மவர்களுக்குப் பத்திரிகாபிமானம் வேண்டுமென்பதை எடுத்துக் கூறியிருப்பது பொன்னே போல் போற்றத்தக்கது. இன்னும் பண்டிதை பத்மாசனி அம்மையார் பாரதியாரின் கவிநயத்தைப் பற்றி யெழுதியுள்ள கட்டுரை நன்கு அமைந்துள்ளது. ஸ்ரீ பட்டாபி ராமய்யர், மூட வழக்கமாகிய தீண்டாமையை யொழிக்க எழுதியுள்ள கட்டுரை தீண்டாமை நாட்டிலிருந்து அகலும்வரை தமிழர் ஒவ்வொரு நாளும் படிக்கத் தக்கதாகும். இவர், தீண்டாமையைப் போற்றுபவர்களைக் கொம்பேறி மூர்க்கன் என்ற பாம்பிற்கு ஒப்பிட்டுக் கூறுவதைப் படிக்குந்தோறும் நெஞ்சு திடுக்கிடுகிறது. இதைப் படிப்பவர் யாவரும் தீண்டாமையைக் கைவிடுவாரென்பது உறுதி. மற்ற வியாசங்களாகிய புத்தகாலய இயக்கம், புதிய ஜப்பான், கிராம நிலைமை முதலியவைகளும் சிறந்து விளங்குகின்றன.

மாலை 1 மணி 4 ஆசிரியர் தலையங்கத்தில் மலையாள மாதரின் குண விசேஷங்களை எடுத்துக் காட்டி, தமிழ்நாட்டு மாதரை ஆடவர் எப்படி நடத்த வேண்டுமென்பதைச் சுருங்கக் கூறி விளக்கி வைத்துள்ளார். ஸ்ரீ பட்டாபிராமய்யர் தமது வியாசத்தில் பால்ய விவாஹமும் மூட வழக்கம் என்பதைத் தக்க ஆதாரத்துடன் எடுத்துக் காட்டியுள்ளார். விதவைகளின் துயரத்தை மனமுருகும்படி எழுதியுள்ளார். ஹிந்து விதவைகளில் பலர் வேசைகளாய் மாறிவிடுவதையும் பகிரங்க தாசிகளின் வருட வருமானம் ரூ. 62 கோடி

என்பதையும் காண, படிப்பவர் மனம் உடைந்து போகுமென்பது நிச்சயம். இன்னும் பாரதகண்டத்தின் பெருமை, தமிழ் மொழியின் சிறப்பு, நைட்டிங்கேல் அம்மையாரின் சரிதம், எண்ணும் எழுத்தும் அறிந்த பெண்களை மணக்கும்படி வாலிபர்களுக்குச் செய்யும் எச்சரிக்கை ஆகிய வியாசங்கள் உயர் நடையில் பொலிந்து விளங்குகின்றன. தற்காலம் வெளிவரும் மாதப் பத்திரிகைகளுள் பரந்த நோக்கங் கொண்டதும் இலக்கணப் பிழையின்றி அரிய விஷயங்களைக்கொண்டதுமான பத்திரிகை இஃதொன்றே. தேசாபிமானம், பாஷாபிமானம் முதலியவைகளைப் போதிப்பதில் தலை சிறந்து விளங்குகின்றது.

தெய்வத்தையே நம்பி தேசபக்தியையே ஆபரணமாகப் பூண்டு தேசத்திற்காக உழைப்பவர் தற்காலத்தில் மிகச் சிலரே யாவர். தேசத்தொண்டராகிய திரு. ரா. நாராயணஸ்வாமி பத்திரிகை மூலம் தேசத் தொண்டு செய்யப் புகுந்தது தமிழ்நாடு செய்த பாக்கியமாகும். பாரதியின் கட்டுரைகளைக் காண்பவர் தமிழ் மொழி செய்த பாக்கியமென்றும் கூறுவர். பாரதி நாளும் வளர்ந்தோங்குதற்குத் தமிழ் நாட்டாரின் ஆதரவு இன்றியமையாததாகும். எல்லாம் வல்ல இறைவன் பாரதியைப் பாரினில் ஓங்கி வளர அருள் புரிவானாக.

கலியுக நண்பன்

ஈப்போ, 31—8—29.

பாரதி. இப்பெயர் புனைந்த புத்தக ரூபமான மாதப் பத்திரிகை வரப்பெற்றோம். இதன் ஆசிரியர் திரு. ரா. நாராயணசாமி செட்டியார் என்னும் அன்பர். கல்வி கேள்விகளில் வல்லவர்களான ஆண் பாலாரும் பெண் பாலாரும் இனிய தமிழில் இப் பத்திரிகைக்குக் கட்டுரை வரைந்துள்ளார்கள். தமிழரின் சீர் திருத்தத்திற்கு வேண்டிய பல அரிய விஷயங்களைத் தன்னுள்ளடக்கி வெளிவந்திருப்பது போற்றத் தக்கதாகும்.

கலா நிலயம்

சென்னை, 1929-ஸு மேயீ 16உ.

முழுமையாய் ஒன்றை உணர்தற்கு மற்றைப் புறத்தையும் நன்கு நோக்கி மதித்தல் வேண்டும். அவ்வாறு மதிப்பதற்கு ஏற்ற கருவியாய்ப் 'பாரதி' என்னும் ஓர்தேசிய மாதப் பத்திரிகை, ஸ்ரீமான் ரா. நாராயணசாமி அவர்களை ஆசிரியராகக்கொண்டு மதுரை ஜில்லா உத்தமபாளையத்தில் உதித்திருக்கின்றது. இப் பத்திரிகையின் இவ்வருடத்திய ஜனவரி, பிப்ரவரி மாதத்து இதழ்கள் இரண்டும் வரப்பெற்றோம். அவைகளோடு ஆசிரியர் விடுத்துள்ள நிருபத்தில், "இதுகாறும் வெளிவந்துள்ள தமிழ்ப் பத்திரிகைகள் எவையும் சென்றிராத வேர்நெறியில், தற்காலம் புதிதாய்க் கண் விழித்துள்ள தேசிய உணர்ச்சிபற்றிச் செல்லும் பத்திரிகை இது" என வரைந்திருப்பது வாய்மையே என்பதற்கு ஐயமில்லை. ஸ்ரீமான் நாராயணசாமி அவர்கள் "தேவாங்க மித்திரன்" என்னும் பத்திரிகை ஆசிரியராயிருந்திருக்கின்றார். இப்பொழுதும் "ஏல் விவசாயி" என்னும் பத்திரிகைக்கும் இவரே ஆசிரியர். சென்ற பலவாண்டுகளாகத் தேசிய இயக்கங்களின் முன்னணிநின்று அதனால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாகியிருக்கின்றார். இன்னவகை அறிவும், அநுபவமும், அவைகளைச் செவ்வனே பயன் செய்வதற்குரிய ஆற்றலும், இவ்வறிவு அநுபவ ஆற்றலாதிகளைத் தன் தேசத்தின்பொருட்டு அர்பணஞ் செய்யவேண்டுமென்ற ஆர்வமும் உடையவொருவர், "ஜப்பான், டர்க்கி அனைய தேசங்களைப் பின்பற்றித் தற்கால முறையில் நமது தாய்நாட்டுக்கோர் உயர்நிலை" எய்துவதில் ஈடுபடும் பத்திரிகையொன்றிற்கு ஆசிரியராய் அமைவாராயின், அது அக்கருத்துக்கு இணங்கிய சிறப்போடு விளங்க வேண்டுமென்று ஊகிப்பது மாத்திரமல்லாது, இவ்விரு இதழ்களையும் ஓதினோர் யாவரும், விளங்குகின்றதென்றேயும் ஒருவாயாய்ப் புகன்று பாராட்டுவார். இன்ன நலங்களோடு தமிழ் மொழியில் தக்க பயிற்சியும் பெற்றுள்ள ஆசிரியர், முன்னளிந்தியப் பெருமைகளையும், இக் காலம் புக்கிருக்கும் தாழ்மையையும் உன்னி யுன்னி, மேனாடுகள் எய்தி யிருக்கின்ற முன்னேற்றத்தையும் வியந்து

கொண்டாடுபவராய், அன்புடனும் ஆர்வத்துடனும் இன்று இந்நிலைக்குரிய நன்மையுந் தீமையும் நாடிச்சொல்ல முற்பட்டிருக்கின்றாரெனின், அவர் திறம் இக் கருமம் செய்யவல்லார் வேறுளர் மிகச் சிலரே என்று இயம்பவும் வேண்டுமோ. "பாரதி" முதல் இதழில், தெளிவாகவும் விரிவாகவும் வரைந்துள்ள முகவுரை அவர் கொள்கையை மொழியுந் தன்மையில் எல்லோர்க்கும் நல் விருந்தாகும். முற்கால இந்தியாவையும் தற்கால இந்தியாவையும் ஒப்பு நோக்கி, "சுதந்திர இந்தியா அடிமை இந்தியாவாகவும், செல்வ இந்தியா தரித்திர இந்தியாவாகவும், மணி இந்தியா பிணி இந்தியாவாகவும் மாறிவிட்டது" என நயமுறக் காட்டுகின்றனர். காட்டிப் பின் காங்கிரஸ் மகாசபை இந்நாள் பெற்றுள செல்வாக்கைச் செப்பிப் பிற நாடுகளின் பத்திரிகைப் பெருக்கத்தையும் இந்நாட்டில் குறைவையும் தெளிவுறக் கணக்கிட்டுக் கூறுகின்றனர். பின், ஜோஸப் மாஸீனியின் கட்டுரை யொன்றைத் தழுவித் தேசாபிமானத்தைப் பற்றி இவ் வாசிரியர் எழுதியுள்ளர். இவைகளில் "கல்வி, தொழில் அபிவிர்த்தி, ஓட்டுரிமை" என்னும் முறையில் முன்னேற்றத்தின் கதி மிகவும் திறமையோடு வாதிக்கப்பெற்றிருக்கின்றது. [கலைப் பயிற்சி—மெய் புணர்வு—கடவுள் நிலை, என்றுரைக்குங் கலாநிலயம்.] உலக நடையில் பத்திரிகைகள் மிகவும் அவசியமானவை என வற்புறுத்துகின்றனர், "பாரதி"யின் ஆசிரியர். அமெரிக்காவில் அப் பத்திரிகைகள் கணக்கிறந்தன யாவரும் ஆவலோடு படிக்கின்றதைப் பாராட்டுகின்றனர். அந்நாட்டிலும் மற்றைய நாடுகளிலும் "இவ்வாறு இவ்வளவு அதிகமாய்க் கிராம ஜனங்களும் பத்திரிகைகளை வாங்கிப் படித்து உலக விஷயங்களை யறிந்து வேகத்துடன் முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள்—நம் நாட்டிலோ!" எனப் பாரதியின் ஆசிரியர் இரங்குகின்றார்.

தேசாபிமானம், பாஷாபிமானம், சமயம், ஆசார சீர்திருத்தம், ஜீவிய சரித்திரம், விவசாயம், தொழில் வியாபாரம், கலைவளர்ச்சி யாதியாய இருபத்திரண்டு விடயங்களைத் தன்னுள் பெற்றிருக்கும் "பாரதி." பண்டிதை, அசலாம்பிகை அம்மாள், திரு. சோமசுந்தர

பாரதியார், திரு.வி. கலியாணசுந்தர முதலியார், திரு.R.P. சேதுப் பிள்ளை போன்ற அறிவாளிகள் பற்பலர் அதன்கண் கட்டுரைகள் வரைந்து வருவாரெனத் தெரிகின்றது. அக் கட்டுரைகளும் எவ்விதத்தனவா யிருக்கு மென்பதை இவ் வாசிரியர், இரண்டாவது இதழில், "புஸ்தக ஆசிரியர்களுக்கு" என எழுதியிருக்குந் தலையங்கத்திலிருந்து நன்கு அனுமானிக்கலாம். எல்லாம் இவ் விந்திய தேசத்தின்பால் கொண்ட வொரு ஆசையால் "வீராவேசம்" விளைவிக்கும் நோக்கமுடையனவா யிருக்கும். எல்லாக் கட்டுரைகளும் அவ்வாறு இருக்கவும் இருக்கின்றன. "புத்தக ஆசிரியர்களுக்கு" என்ற தலையங்கமும், திரு. ஆதிமூர்த்தி, என்பவர் எழுதிய "வீர வாழ்வும் பாரத நாடும்" என்னும் கட்டுரையும், திரு. இ. சிவனார், நாடகத்தைப் பற்றி எழுதி யிருப்பதும், திரு. மனோகரனார் எழுதிய "தேசீய ஒற்றுமை" என்பதும் பிறவும் கல்லிற்குமோர் கிளர்ச்சி தரும் மொழிகளால் அழகிய தமிழில் எழுதப்பட் டிருக்கின்றன. தேசீய வாழ்வின் பெருமையை எடுத்துக் காட்டி அதற்கு இந்நாட்டினர் ஆளாகுமாறு தட்டி யெழுப்பும் பத்திரிகை "பாரதி"யின் திறம் நாம் இதுவரையிற் கண்டதில்லை. கலாநிலயம் ஆன்ம வாழ்வின் நன்மையில் ஈடுபட்டிருக்கின்றது. எம்மோடு ஆன்ம வாழ்வின் அதிசயங்களைக் காண்பவர், "பாரதி"யின் சார்பில் தேசீய வாழ்வின் வீராவேசத்தையும் கேட்டல் வேண்டும்.

தன்னுடைய அபிப்பிராயத்தை நாட்டினது நலத்தின்கண் நாட்டமோடு சுய நய சிந்தையின்றித் திறமையாயும் ஆர்வத்தோடும் விளம்புகின்ற வகையில் "பாரதி"யை நாம் மிக மகிழ்ந்து நல்வரவு கூறுகின்றோம். அதற்கு வருட சந்தா இரண்டு ரூபாயே ஆதலால், பொருளீட்டும் நோக்கமுடைத்தன்று என்பது வெளிப்படை. நம் கலாநிலய வாசகர் அனைவரும் "பாரதி"க்குச் சந்தாதாரராக நாம் விரும்புவது மாத்திர மல்லாது வேண்டியுங் கொள்கின்றோம்.

குறிப்பு:— மிகவும் விரிவாக வெளிவந்துள்ள கலா நிலயத்தின் மதிப்புரையில் அவசியமான பகுதியை மட்டும் இங்கு எடுத்துக் கொள்ளப்பட் டிருக்கிறது.

ஆசிரியர், "பாரதி."

இந்து சாதனம்

யாழ்ப்பாணம், சுக்கில௵ சித்திரை௴ 10௳

"பாரதி." இஃதொரு தேசீய மாதப் பத்திரிகை; கல்வி யறிவுடைய பெரியார் பலரின் அழகிய படங்களுடன் வெளிவந்துலாவுவது. மதுரை ஜில்லா உத்தமபாளையம் ரா. நாராயணஸ்வாமி அவர்களை இதன் ஆசிரியர். இப் பத்திரிகை தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு பாஷைகளிலும் வல்லவராய பலர் எழுதிய சிறந்த தமிழ் விஷயங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குவது. இதன் கண் அநுபவித்த "தமிழ் வேதம்" என்னும் விஷயத்தை இன்று எமது பத்திரிகையில் பிறிதோரிடத்தில் வெளியிட்டிருக்கின்றோம். எமக்கனுப்பிய பிரதிகளை நன்றியறிதலோடு பெற்றோம்.

நாடார் குல மித்திரன்

அருப்புக்கோட்டை, சுக்கில௵ சித்திரை௴ 10௳

"பாரதி." இப் பெயர் கொண்ட மாதப் பத்திரிகையின் முதலிரண்டு சஞ்சிகைகள் எமது பார்வைக்கு வரப் பெற்றோம். இது உத்தமபாளையத்தினின்றும் உயர் திருவாளர். ரா. நாராயணஸ்வாமி அவர்களின் பத்திராதிபத்தியத்தின் கீழ், சென்ற ஜனவரி மாதாரம்பமாக வெளியிடப் பெற்று வருகிறது. இவ் வாசிரியர், "ஏல விவசாயி" என்னும் மற்றொரு மாதப் பத்திரிகையும் நடத்தி வருகின்றார். "பாரதி" வெளியாகி வரும் விடயமும், ஆசிரியரவர்களைப் பற்றியும் தமிழுலகில் ஜனங்கள் நன்கே யறிவார்கள் என்பது எமது துணிபு. "பாரதி" பற்றிய விளம்பரத்தை அனேகமாய் எல்லாத் தமிழ்ப் பத்திரிகைகளும் தாங்கி வந்துகொண்டிருக்கின்றன. இதன் ஆசிரியரைப் பற்றி முன்னர் "ஏல விவசாயி" பத்திரிசைக்கு எமது மதிப்புரை தந்த காலத்துக் கூறியிருக்கிறோமெனினும், ஈண்டும் மறு முறை குறிப்பிடாதிருக்க முடியவில்லை. இவரை யாம் நன்கறிவோம். இன்னார் பொறுமையும் விவேகமும் பொருந்தி விளங்கி யாவருடனும் சுமுகமாய்ப் பழகி ஜனப் பிரீதியைக் கொள்ளை கொள்பவராவர். மிகுந்த படிப்பும் சிறந்த ஆராய்ச்சியும் உள்ளவர். இவருக்குள்ள தேசாபிமானப் பெருக்

கால் சிரமத்தை யொரு பொருட்படுத்தாது ஒரு பத்திரிகைக்கிரு பத்திரிகைகள் நடத்த முன் வந்தது பாராட்டத் தக்கதாகும். இப் பத்திரிகை நம் பாரத நாடு அடிமைச் சங்கிலியினின்றும் விடுபட்டு விளங்கப் பாடு கொள்ளும் திறத்தில் ஊழியம் புரிவதற்கு வீர முழக்கம் செய்து நின்கிறது. இது சிறப்பாக வாலிப ரெழுச்சிக்கும், மாதர் முன்னேற்றத்திற்கும் அர்ப்பணஞ் செய்யப் பெற்றிருப்பதாகக் காண்கிறோம். இதில் சிறந்த அறிவாளிகளும், பெரிய பட்டதாரிகளும் எழுதிய கட்டுரைகளும், ஆசிரியர் குறிப்புகளும், சித்திரப் படங்களும், மற்றும் பல விஷயங்களும் வெகு அழகிதே மிளிர்கின்றன. யாவரும் வாசித்துப் பயன் பெறத் தக்கது. அழகிய புஸ்தக ரூபத்தில் 80 பக்க விஷயங்கள் கொண்டிலங்குகிறது. இது நீடு வாழ்வு கூடுவதாகுக.

இந்து நேசன்

சென்னை, 1929௵ ஏப்ரல்௴ 27௳

"பாரதி." இப் பெயர் கொண்ட மாதாந்தரப் பத்திரிகையின் முதலிரண்டு சஞ்சிகைகள் வரப் பெற்றோம். இது மதுரையம்பதியைச் சார்ந்த உத்தமபாளையத்திலிருந்து பிரசுரமாவது. ஸ்ரீமான் திரு. ரா. நாராயணஸ்வாமி அவர்கள் இதனாசிரியரா யிருந்து நடத்தி வருவதைக் கவனிக்குங்கால், இது பெரிதும் சுதந்திரதாகத்திற்காக உழைக்கும் தேசீயப் பத்திரிகை யென்பது எவர்க்கும் இனிது புலப்படும். இதனாசிரியர் உலக இயலையும் உலகப் போக்கையும் உணர்ந்த உத்தமராதலின், அவரது பெரு முயற்சியால் இது தமிழுலகில் சீரும் சிறப்புமாகச் செழித்துப் பலனளிக்குமாறு எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

ஸ்வராஜ்யா

சென்னை, சுக்கில௵ சித்திரை௴ 14௳

வெகு நாளாக எதிர் பார்க்கப்பட்ட "பாரதி" வெளிவந்துலவத் தொடங்கி விட்டதென நாம் சந்தோஷத்துடன் நமது வாசகர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இது

பிரசுரிக்கப் படுமிடம் மதுரை ஜில்லாவைச் சேர்ந்த உத்தமபாளையம். ஜனவரி மணியில் மகாத்மா காந்தியின் படமும், பிப்ரவரி மணியில் மன்னர் அமானுல்லா தமது மனைவியுடன் இருக்கும் படமும் பிரசுரிக்கப்பட் டிருக்கின்றன. "பாரதி"யைப் பற்றிய விளம்பரங்களில் உள்ளவாறே தேசாபிமானம் பாஷாபிமானம், தேசீய ஒற்றுமை, நாடகம் முதலிய அநேக விஷயங்களைப் பற்றி பல அரிய வியாசங்கள் இதில் வெளியாகி யிருக்கின்றன. இதைப் படிக்கும் ஒவ்வொரு தமிழரும் அறிவுப் பெருக்க மடைவா ரென்பது திண்ணம். ஒவ்வொரு மணியிலும் 80 பக்கங்களுக்கு மேல் இருக்கின்றன. கிளேஸ் காகிதமும், புதிய எழுத்துக்களும் "பாரதி"யின் சிறப்பைத் தூக்கிக் காட்டுகின்றன. தற்பொழுதுள்ள பல மாதச் சஞ்சிகைகளுடன் ஒப்பிடுகையில் "பாரதி"க்கு வருஷமொன்றுக்கு ரூ. 2 கொடுப்பது அதிகமென நாம் நினைக்கவில்லை. "பாரதி" நீடூழி வாழ்க.

தமிழ் நாடு

சென்னை, 1929௵ ஏப்ரல்௴ 24௳

"பாரதி" என்ற பெயர் கொண்ட சிறந்த மாதப் பத்திரிகையின் முதல் மலர் வரப் பெற்றோம். "தேவாங்க மித்திர"னின் மாஜி ஆசிரியரும் "ஏல விவசாயி" ஆசிரியருமாகிய ஸ்ரீமான். ஆர். நாராயணஸ்வாமியே இப் பத்திரிகையின் ஆசிரியருமாகும். மத ஜாதி கட்சிபேத மற்று, இந்திய மக்களனைவரும் பாரத மாதாவின் மக்களென்ற உயர் நோக்கத்தோடு சமூக விடுதலைக்காகவும் தேச சுதந்திரத்திற்காகவும் உழைப்பதையே "பாரதி"யின் கொள்கையாகக்கொண் டிருப்பதை யறிந்து அதிக சந்தோஷ மடைகிறோம். இப் பத்திரிகை நல்ல காகிதத்தில் நேர்த்தியாக அச்சிடப்பட் டிருக்கிறது. உள்ளே ஆங்காங்கு பல தேச பக்தர்களின் படங்களும் விளங்குகின்றன. முதலிதழில் ஸ்ரீ. திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் பாடிய "பாரத நாடு" என்ற செய்யுளும் பண்டிதை. பத்மாசனி அம்மாள் எழுதிய "பாஷாபிமானம்," ஸ்ரீமான். ஆர். பி. சேதுப் பிள்ளை, பி. ஏ., பி. எல். எழுதிய "தமிழ் வேதம்,"

பண்டிதை. அசலாம்பிகை அம்மையார் எழுதிய "பண்டை இந்திய மாதர்கள்," ஸ்ரீமான். சோமசுந்தர பாரதியார் எழுதிய "சுப்பிரமணிய பாரதியார்," ஸ்ரீமான். என். வேங்கடரமணன் எழுதிய "இராஜாராம் மோகனராய்," ஸ்ரீமான். சூரிய நாராயண சாஸ்திரியார் எழுதிய "நமது நந்தவனம்" முதலிய பல ருசிகரமான கட்டுரைகளும் "பாரதி"யில் விளங்குகின்றன. ஆசிரியர் எழுதியுள்ள முகவுரையில் மற்ற வெளி நாடுகளுடன் இந்தியாவை ஒப்பிட்டு இதன் க்ஷீண நிலையைப் பற்றி தெளிவாக எடுத்துக் காட்டி யிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். ஆசிரியர் ஸ்ரீமான். ரா. நாராயணஸ்வாமி நன் முயற்சி யெடுத்து இத்தகைய சிறந்த மாதாந்தப் பத்திரிகையை வெளியிட் டிருப்பதைக் குறித்து அவரைப் பாராட்டுகிறோம். ஆசிரியரின் முயற்சி தக்க பயனை யளித்து "பாரதி" தீவிர முன்னேற்றத்தை யடைய வேண்டுமெனப் பிரார்த்திக்கிறோம்.

தென் நாடு

சென்னை, சுக்கில௵ சித்திரை௴ 9௳

பாரதி:—இது வடமொழிப் பதம். பாரதி எனின், சரஸ்வதிக்குள்ள பல நாமங்களுள் ஒன்றாகும். சரஸ்வதி, அறிவு தெய்வம் கல்வி தெய்வம் என்று கூறிவருகின்றோம். தற்போது பாரதி என்ற பெயருடன் வெளிவந்துள்ள மாதச் சஞ்சிகையைப் பற்றியே நாம் எழுதப்புகுந்தது. இச்சஞ்சிகை தேவாரம், திரு நாராயணசாமி அவர்களின் முயற்சியால் வெளியிடப் பெறுவது. அதன் ஆசிரியரும் அவரே. முதன்மையாய் ஒரு நூலைப்பற்றியோ பத்திரிகையைப் பற்றியோ மதிப்பிடுங்காலையில், அதன் ஆசிரியர் மனப்போக்கையும், அவரது அறிவு நுட்பத்தையும் ஆதாரமாகக் கொள்வது வழக்கம். அதற்கிணங்க பாரதியில் பொதிந்து கிடக்கும் பொன்மொழிகளைப்பற்றி ஆராயப்புகுமுன் அதன் தலைவரைப்பற்றிச் சிறிது அறிந்த அளவில் வரையு மெண்ணமாகின்றது. இதன் ஆசிரியர், சுதந்திர வெறி கொண்டவர். பலநூல் கற்றறிந்த அறிவாளி. அனுபவ ஞானம் பெற்ற பெரியார். தர்மத்தில் தலையிட்

198537

உழைக்க வேண்டும், தியாகம் செய்து சாதிக்க வேண்டும் என்று திடங்கொண்ட வீரர். அத்துடன் உலகப் போக்கும், காலப் போக்கும் தன் அனுபவ ஞானத்தால் அளவிடக் கூடிய பண்டிதர். இதனாலேயே இப்படி எல்லாம் அமைந்து இருக்கும் ஒரு பெரியார் பேனாவினின்றும் வெளியாகும் உயர் எழுத்துக்கள், பொன் போன்றதாகும் என்பது சொல்லாமலே விளங்கும். மற்றும் அளவு கடந்த பிரயத்தனம் கொண்டு ஆசிரியர் உலகெங்கும் நிறைந்துள்ள அறிவாளிகள் கட்டுரைகளை பாரதியினிடத்தே பொதிந்திருப்பது போற்றத் தக்கது.

நிற்க, தமிழ் நாட்டிற்கு இது காறும் ஆங்கிலத்தில் திரு. ராமானந்த சாட்டர்ஜியால் வெளியிடப் பெறும் மாடர்ன் ரெவியூ போன்ற சஞ்சிகை ஜீவாதாரமாகும், அவசியமாகும் என்று அடிக்கடி யாம் சிந்தித்ததுண்டு. அந்த ஏக்கத்தைப் "பாரதி" பூர்த்தி செய்யக்கூடியது என்பது அதனில் நிறைந்திருக்கும் கட்டுரைகளைக் கொண்டு விளங்குகின்றன. பாரதியினிடத்து அதன் இனத்தவராகிய பெண்மணிகள் பலர் ஆர்வங் கொண்டு எழுதியுள்ள வியாசங்கள் இருந்து நிறைந்து காலத்திற்கேற்றதாக உளது. மற்றும் தமிழ் நடை அழகு நிறைந்ததாயும் சுலபமாய் உணரக்கூடியதாகவும் இருக்கிறது. இதனைத் தமிழ் மக்கள் அதிலும் பெண்மணிகள் பலரும் தங்கள் நாடும் இனமும் தழைத்தோங்க வேண்டுமாயின், தங்கள் உயிர்த் துணை போன்று பாரதியைப் படித்தறிவது நன்மை. மற்றும் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற உயர் கொள்கைகள் கொண்டு வெளிவருவதால், எவ்வித ஜாதி மத பாகு பாடுகளுக்கும் பூசல்களுக்கும், அதீதப்பட்டு நிற்கும் என்று தெரிகிறது. அத்துடன் தமிழ் நாட்டில் பத்திரிகைகளின் உயர் வறிந்த அன்பர் பலர் பாரதியைக் கை சோரவிடார் என்பது திண்ணம். மேலும், ஆசிரியர், திரு முயற்சி கொண்டு நிற்பதை இறைவி அருள் சுரந்து பாலிக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றனம். எப்பொழுதும் நம் மனம் போல் எழும் சகோதர பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் கண்டு பரவசமடைவது எமது போக்காதலின் இதனைப் பற்றி விரிவாக எழுதத் துணிந்தோம்.

THE "SCHOLAR," Vol. IV. August, 1929.
Palghat.

"பாரதி" Ed. R. Narayanaswami, Uthamapalayam.

"The Bharati" is a nationalist monthly. Its editor has already the journal "ஏல விவசாயி" the organ of the cardamom planters to his credit. The number we have received contains, chiefly, an editorial on present day Indian universities, a good Tamil version of a moving composition of self-dedication to the Motherland written by Lala Lajpat Rai in a far-off land and articles on interesting subjects like the *Kural*, Prof. S. Radhakrishnan's career, American industries etc. and a portrait of the poet Bharati. The monthly is very neatly printed and is a creditable addition to Tamil journalism.

THE "STUDENT," April, 1929. Vol. II. No. 4.
Chingleput.

"Bharati," a Tamil Monthly edited and published by Mr. R. Narayanaswami, Uthamapalayam, Madura Dt.

We welcome this new monthly in the field of vernacular journalism. It is a national monthly devoted to the uplift of the Motherland along modern lines.

The editor, Mr. R. Narayanaswami, has vast experience in editing various Monthlies Tamil, chief of them being the "Devanga Mitran," and the "Cardamom Planter." He is also a zealous worker for the national causes and we sincerely hope that he would infuse the right sort of spirit among the Magazine reading youth and the public.

The language of the articles throughout is chaste and simple.

We wish our contemporary every success.

THE "INDIAN EDUCATOR,"

Madura. June, 1929. Vol. V. No. 6.

The "Bharati," a Tamil Monthly edited by Mr. R. Narayanaswami (Editor of the *Cardamom Planter*). Uthamapalayam, Madura Dt.

We welcome the *"Bharati"* into the ranks of Tamil journalism in this Presidency, as an organ devoted to the laudable object of uplifting the motherland. The magazine has manifold aims ranging from the promotion of the love of God, Crown and Country to the discussion of subjects intimately connected with the daily life, education, history, civilization and Government of the people. The two numbers before us, January and February bid fair to amply fulfil the aims set forth above, and in the accomplishment of these ideals, the co-operation of able writers ladies and gentlemen, is markedly evident. The contributions are of a varied kind, all written in chaste Tamil and printed, neatly. Lives of great men and women from some of the topics and they are interesting Pictures add to the attractiveness.

* * * * *

THE "HERALD," April, 1930. Vol. III. No, 4

Trivandrum.

The "Bharati," an unique Tamil Monthly illustrated Magazine, devoted to the cause of culture and up-lift, political, social and intellectual. 'BHARATI' is the leading and most widely circulated Tamil Journal, run on the most up-to-date lines. The 'BHARATI,' has already won the hearty appreciation of eminent men and women, and influential Journals. Every issue contains instructive and edifying articles, besides a number of beautiful illustrations. Advertising in Bharati sanest, surest and safest.

THE "REVOLT," Wednesday the 1st March, 1929.

Erode. Vol. I. No. 6.

The "Bharati," a monthly Tamil journal of about 80 pages edited by Mr. R. Narayanaswami, and published from Uthamapalayam.

We have received the first issue of the above journal. It contains the Photo of Messrs. Gandhi, Raja Ram Mohan Roy and Pandit Motilal Nehru. The long but enlightening perface written by the editor gives an execellent idea of the history of journalism, with statistical figures. There are learned contributions in prose as well as poetry, written in clear, lucid Tamil. The journal, as we understand from its objects, will devote great attention to social reform also. We hope the journal will serve the purposes required by modern conditions.

THE "FEDERATED INDIA,"

Madras. Wednesday the 12th June, 1929.

Vol. III. No. 24

The "Bharati,"—We welcome into the ranks of Tamil journalism the "Bharati," a Tamil Monthly edited by Mr. R. Narayanaswami and pulished at Uthamapalayam, in Madura District. The articles appearing in the monthly are of a high order and the editor's comments are interesting and noteworthy. The issues bear the impress of careful and able editorship. The journal is also attractively got up. The annual subscription is only two rupees. The itellectual fare given by Mr. Narayanaswami is out of all proportion to this trivial amount. we trust, the Tamil public will accord solid support to this magazine and place it on an enduring basis.

ஆங்கில ஆட்சிக்கு அடிகோலியது எப்படி?

திரு. முனகால எஸ். பட்டாபிராம அய்யர் அவர்கள்.

இற்றைக்குச் சற்றேறக் குறைய, இரு நூறு ஆண்டுகளுக்கு முன்னர், மதுரைமா நகரை நாயக்கர் வம்சத்தினர் ஆண்டு வந்தனர். இவ்விதம் ஆண்டவர்களில், கடைசி யரசர் விஜயரங்க சொக்கநாதரே. இவர் மரண மடையவே இவருக்குப் பின் சந்ததி யில்லாததால், அவருடைய பட்ட மஹிஷியான மீனாக்ஷி தேவியே இராஜ்யத்தை நடத்திக் கொண்டு வரலானாள். சில நாளைக்குப் பின்னர், தனது தாயாதிப் பையன் ஒருவனை, தனக்குத் தத்துப் புத்திரனாக ஸ்வீகாரஞ் செய்து கொண்டாள். அதற்குப் பின்னர் சில வருடங்கள் சுகமாக நாட்டை யாண்டு வந்தாள்.

ஸ்வீகாரப் புத்திரனுடைய தகப்பன் பெயர் பங்காரு நாயக்கன். அவனுடைய மனதில் ஓர் துர் எண்ணம் புகுந்தது. தானே இராஜ்ய போகத்தை யனுபவிக்க வேண்டு மென்ற பேராசை யெனும் பேய் அவனைப் பிடித்தாட்டிற்று. தனக்கே இராஜ்யங் கிடைக்க வேண்டு மெனவும், விஜயரங்க சொக்கநாதருக்குப் பின் அவருடைய நேரான வரிசை தானே யென்றும் வழக்காடலானான். இவ் வழக்கை நாட்டி லுள்ளார் யாரும் ஏற்றுக் கொள்ளாது போகவே பங்காரு நாயக்கன் நாட்டை விட்டு ஓடும்படி நேர்ந்தது.

அவன் தன் னாட்டை விட்டு ஓடி அவ் வமயம் ஆற்காடு நவாப்பா யிருந்த, அன்வர் உத்தீனிடம் சரண் புகுந்தான். ஆற்காடு நவாப்பும் பங்காருவை மதுரை யரசனாக்குவதாய் ஒப்புக் கொண்டு, அவ் வமயம் மதுரை நாயக்கர் சமஸ்தானத்திற்குத் தலை நகரா யிருந்த திருச்சிக்

கோட்டையைப் பிடித்துக் கொடுப்பதற்காகப் பங்காருவுடன் ஓர் பெருஞ் சேனையை சந்தா ஸாகிப் தலைமையின் கீழ் அனுப்பி வைத்தான்.

அச் சேனையோ பாண்டிய நாட்டுக்குள் நுழையவாவது, திருச்சிக் கோட்டையைக் கைப்பற்றவாவது முடியாது போயிற்று. உடனே அச் சேனைத் தலைவனான சந்தா ஸாகிப் ஓர் உபாயஞ் செய்து அரசியான மீனாக்ஷி தேவிக்குத் தூதொன் றனுப்பினான். "தனது சேனையின் ஓர் பகுதியோடு மீனாக்ஷியுடன் சேர்ந்து கொள்வதாகவும், எதிரியான பங்காருவையும், அவனுக்காக வந்திருக்கும் மற்றைய ஆற்காட்டுச் சேனையையும் எதிர்த்துப் போர் புரிவதாகவும் அத் தூதில் குறிப்பிட் டிருந்தான்." திடீரென்று தகுந்த காரண மில்லாமல் சந்தா ஸாகிப் தன் பக்கம் சேருகின்றேன் என்று தூதனுப்பிய செய்தி கேட்டதும் மீனாக்ஷி தேவி திடுக்கிட்டுப் பெருஞ் சந்தேக மடைந்தாள். எனினும் கடைசியாய் ஒரு முடிவுக்கு வந்து "தங்களுடைய புண்ணிய நூலாகிய குர்ஆன் ஷெரீப்பை வைத்துச் சத்தியஞ் செய்து கொடுத்தால்தான் தான் நம்ப முடியும்" எனப் பதிலனுப்பினாள். அவனும் அவ்வாறே செய்து கொடுப்பதாய் உறுதி கூறினான். திருச்சியில் காவிரி நதிக்கரையி னருகிலுள்ள சிந்தாமணிக் கட்டிடத்தின் மண்டபத்திற்கு வந்து, துணியினாலும் பட்டினாலும் ஓர் செங்கல்லை மூடி "இதுதான் குர்ஆன்" என்று கூறிச் சத்தியமுஞ் செய்து கொடுத்தான்.

இவ்விதஞ் சத்தியஞ் செய்து கொடுத்த பின்னர், சந்தா ஸாகிப்புக்கும் அவனது சகாயப் படைக்கும், கோட்டை வாயிலைத் திறந்து விட்டு உள்ளே வரும்படி அனுமதி யளிக்கப்பட்டது. அவனும் அவனது படையும் உள் நுழைந்த வுடன் மற்றைய வாயிலையும் சந்தா ஸாகிப் தானே திறந்து விடலானான். எஞ்சி யிருந்த சேனையும் உள் நுழைந்து கொண்டது. பின்னர் மீனாக்ஷியின் மாளிகையை வளைத்துக் கொண்டு, நாடு தன்ன தென்றும் சந்தா ஸாகிப் பறை யறைவித்தான். மீனாக்ஷி தேவியோ எதிர் பாராத இப் பேராபத்தைக் கண்ணுற்று ஒன்றுந் தோன்றாது திகைத்தாள் கடைசியாய்த் தனது

மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள நஞ்சை யுண்டு அரண்மனையிலேயே உயிர் துறந்தாள்.

கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது போல் பங்காரு நாயக்கன் உதவி கேட்கப் போய் அவனுயிருக்கும் ஆபத்தைத் தேடிக் கொள்ளலானான். சந்தா ஸாகிப் திருச்சிக் கோட்டையைக் கைப்பற்றியதோடு நில்லாது, பங்காருவையுந் தொலைக்கக் கருதினான். பங்காருவோ தன்னுயிர் தப்பினால் போது மெனக் கருதி ஓட்ட மெடுத்து ஹைதராபாத் நைஜாமிடம் சரண் புகுந்தான். அந்த நைஜாமோ அவ் வமயம் ஆற்காட்டு நவாப்புக்கு மேலதிகாரியா யிருந்தான். நைஜா மிடம் பங்காரு சரண் புகுவதற்கு முன்னரே சந்தா ஸாகிப்பின் தூதனொருவன், ஆசை லோபம் நிறைந்த செய்திகளை நைஜா மிடங் கூறி அவன் மனத்தை மாற்றி வைத்திருந்தான். ஆகையால் நியாயப் பிரிய மில்லாத அக் காலத்து நைஜாமும், பங்காருவுக்குச் சாக்குப் போக்குக் கூறி அவனை அனுப்பி விட்டார். பங்காருவோ அங்கிருந்து புறப்பட்டு புனாவிற்குச் சென்று அங்குள்ள பேஷ்வாவிடம் முறையிட்டான். இவன் இவ்வித மிருக்க,

திருச்சியில் நவாப்பின் சேனையோடு கூட விருந்த—நவாப்பின் மகனான முகமது அலிக்கும், சந்தா ஸாகிப்பிற்கும் மனஸ்தாபம் ஏற்பட்டு விட்டது. அதன் பயனாய் முகமது அலி கோபித்துக் கொண்டு ஆற்காட்டுக்குத் திரும்பி விட்டான். அம் மனஸ்தாபத்திற்குக் காரணம் சந்தா ஸாகிப் திருச்சியைத் தனக்குச் சொந்த மென்று கூறியதே யாகும். சந்தா ஸாகிப்போ, நவாப் அன்வர் உத்தீனுடைய மாப்பிள்ளை. இக் காரணத்தால்தான் நவாப்பும் அது பற்றி உபேக்ஷையா யிருந்து விட்டான். இவ்விதம் ஆற்காட்டு நவாப்பின் சேனையி லொரு பெரும் பகுதியைச் சுவாதீனஞ் செய்து கொண்டதோடு, பாண்டிய நாட்டிற்குள் நுழைந்து உள் நாடுகளையுங் கைப்பற்ற முயன்றான். ஆனால் அம் முயற்சியோ கிஞ்சிற்றும் பலியாது போயிற்று. அவ் வமயம் பாண்டிய நாடு அரசற்ற நாடாக விருந்தும், ஆங்குள்ள நாயக்கர் சமஸ்தானத்துப் பாளையக்காரர்கள் மிகுந்த வீராவேசத்துடன், சந்தா ஸாகிப்பின் சேனையோடு போர் புரிந்து அச் சேனையை விரட்டி

யடித்தார்கள். ஆங்கு தோல்வியுற்ற சந்தா ஸாகிப் மறுபடியும் படையெடுக்க ஆலோசித்தான். அதற்கு நவாப்பான அன்வர் உத்தீனிடம் நேரான உதவியை அவன் எதிர் பார்ப்பதற்கில்லை. ஆகவே அவன் புதுச்சேரியி லிருக்கும் பிரஞ்சுக்காரர்களின் உதவியை நாடினான்.

அதற்கு முன்னமேயே ஒரு நூறு வருடங்களுக்கு மேலாக, நமது பரத கண்டத்தில் வியாபாரஞ் செய்வதற்கென வந்து ஆங்காங்குள்ள சமுத்திரக்கரை யோரங்களில், தங்கள் தங்கள் வியாபார ஸ்தலங்களை யுண்டாக்கிக் கொண்ட ஐரோப்பிய ஜாதியார்களில் அப் பிரஞ்சுக்காரர்களும் ஒருவர் ஆவர். இவர்கள் நாளடைவில் தங்கள் வியாபாரங்களைக் காப்பாற்றுவதற்கென்று, தங்கள் தங்கள் மண்டிகள், கிட்டங்கிகள் முதலியவைகளைச் சுற்றி கோட்டைகளையும், அக் கோட்டைகளைப் பாதுகாப்பதற் கெனப் பட்டாளங்களையும் வைத்துக் கொண்டார்கள். அவ் வமயம் அப் பிரஞ்சுக்காரர்களுக்குத் தலைவனா யிருந்த டூப்ளே என்பான் "இந்தியர்களுக்கு ஐரோப்பியப் போர் பயிற்சி முறையைக் கற்றுக் கொடுப்பின், நம்மை எவரும் வெல்வதற்கரிய சேனையைத் தயாரித்து விடலாம்" எனக் கருதி அம்மாதிரியே சிறிது படையையுஞ் சேர்த்து வைத்திருந்தான். இவனிடந்தான் சந்தா ஸாகிப் உதவியை நாடினான். டூப்ளேயும் அதற் கிணங்கினான்.

முன்னர் பீஷ்வாவிடம் பங்காரு உதவி கேட்டதற் கிணங்க, புனாவின் பேஷ்வாவானவர், நாகப்பூரில் அரசாண்டு வந்த ராகோஜி பான்ஸ்லேயைப் பங்காருவுக்குத் துணையாக அனுப்பி வைத்தார். ராகோஜி பான்ஸ்லேயும் ஓர் பெருங் குதிரைப் படையுடன் வெகு வேகமாய் நவாப்பின் நாட்டிற்குள் உள் நுழைந்து நாட்டைப் பாழாக்கிக் கொண்டே தெற்கு நோக்கிச் சென்று திருச்சியைப் பிடித்துக் கொண்டார். அதற்குப் பின்னர் சந்தா ஸாகிப் தன் சேனையை ஒன்று திரட்டி இம் மகாராஷ்டிரக் குதிரைப் படையுடன், மணப்பாறைக் கருகில் போர் புரிந்து, தோற்கடிக்கப் பட்டு தானும் பான்ஸ்லே கையில் சிக்கிக் கொண்டான். இதற்குள், குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக் காம்பான பங்காருவும் இறந்தான். வட நாட்டில் இதற்கு மத்தியில் ஏதோ அல்லல்கள் ஏற்பட்டதால் நாகப்பூர் அரசரான

ராகோஜி, ஒரு சிறு படையை மதுரையில் வைத்து விட்டு சந்தா ஸாகிப்பையும் புனாவிற் கனுப்பி தானும் தன்னோடு சென்றான்.

அதன் பின்னர் சந்தா ஸாகிப்பின் குடும்ப மெல்லாம் புதுச்சேரியில் சரண் புகுந்தன. அவ் வமயம் டூப்ளேயும் சும்மா விருக்க வில்லை. நைஜாமிற்குத் தூதனுப்பி, நைஜாமையும் சந்தா ஸாகிப்பிற் கனுசரணையாக வசப்படுத்திக் கொண்டான். நைஜாமோ ஓர் லக்ஷம் சேனையுடன் தெற்கே வந்து திருச்சியைப் பிடித்து விட்டான். புனாவின் சிறையி லிருக்கும் சந்தா ஸாகிப்பை விடுவிப்பதற்காக டூப்ளேயின் மூலம் ஒரு பெருந் தொகை பீஷ்வாவுக்குக் கொடுக்கப்பட்டதுடன், அவ் வமயம் மகாராஷ்டிர சேனாதிபதி குடிகாரனாக விருந்ததால் அவனுக்குப் பிரான்சு தேசத்தின் உயர் தரமான விஸ்கி, ஒயின் முதலிய லாகிரி வஸ்துக்களை லஞ்சமாகக் கொடுத்துச் சந்தா ஸாகிப்பை விடுவித்தனர். சந்தா ஸாகிப் விடுதலை பெற்று ஆற்காடடைந்து, அன்வர் உத்தீன் இறந்ததும், அவருக்குப் பின் நைஜாம் ஆதரவினால் தானே ஆற்காட்டுக்கு நவாப்பாயினான். முகமது அலியோ தன் சேனையுடன் திருச்சிக் கோட்டையுள் நுழைந்து கதவைத் தாளிட்டுக் கொண்டான்.

பின்னர் பிரஞ்சுக்காரரின் உதவியைக் கொண்டு சந்தா ஸாகிப், திருச்சியை முற்றுகை யிட்டுக் கோட்டையைக் கைப்பற்ற முயன்றான். அப்பொழுதுதான் ஆற்காட்டு நவாப்பின் மகனான அம் முகமதலி அவ் வமயம் சென்னையி லிருந்த ஆங்கிலேய வர்த்தகர்களிடம் உதவியை வேண்டினான். ஆங்கிலேயர்களோ தங்களுக்கு இவ்வித சந்தர்ப்பம் எப்பொழுது கிட்டுமோ வென எதிர் பார்த்து நின்றார்கள். ஆதலால் முகமது அலியின் வேண்டுகோளை ஆவலுடன் வரவேற்று, அவருக்கு உதவி செய்து, பின்னர் ஆங்கிலேயர்கள் பல வஞ்சனைகளாலும், பேதங்களாலும் ஜெயமடைந்து, முகமதலியின் வம்சத்தினரைச் சென்னையில் வைத்துக் கொண்டே நம் நாட்டைப் பாழாக்கியது வெளிப்படையாய்ச் சரித்திரத்தில் காண்கின்றோம். முகமதலிக்கு உதவி செய்ய வந்த ஆங்கிலேயர்கள் அவ் வமயம் தஞ்சாவூர் அரசனுக்கும், மைசூர் அரசனுக்கும் ஆசை வார்த்தைகள் கூறி அவர்களுடைய உதவியையும் அடைந்தார்கள். பின்னர் பாண்டிய நாட்டுச் சேனாதி

பதியான புதுக்கோட்டை ராஜாவையும் தன் வசப்படுத்தினார்கள். மதுரை நாயக்கர் சமஸ்தானத்துச் சேனை, தஞ்சாவூர் சேனை இம் மூன்று சேனையைக் கொண்டே சந்தா ஸாகிப்பையும், பிரஞ்சுக்காரர்களையுந் தோற்கடித்தார்கள். பேரளவில் நவாப்பை வைத்துக்கொண்டு ஆங்கிலேய வியாபாரிகள் அரசாணார்கள்.

கடைசியாய் சந்தா ஸாகிப் தோல்வி யடைந்து தஞ்சைக்குத் தளகர்த்தனான ஓர் முகமதியனிடம் ஒப்புவிக்கப்பட்டான். பின்னர் திருச்சியின் சிந்தாமணிக் கட்டிடத்தில், தான் பொய்ச் சத்தியஞ் செய்து கொடுத்த மண்டபத்திலேயே நடுநிசியில் கொலை செய்யப்பட்டான்.

துரோகியான புதுக்கோட்டை ராஜாவுக்கு அவன் பாளையப்பட்டைச் சுயராஜ்யமாகக் கொடுக்கப்பட்டது. மற்றைய யாண்டிய நாட்டுக்களில், ஆங்கிலேயர்கள் வரி வசூல் செய்து கொள்ளும்படியாயும், நவாப்பின் கையால் உத்தரவும் அளிக்கப்பட்டது. ஆனால் அதிலிருந்து சுமார் ஐம்பதாண்டுகள் வரை மதுரை மட்டும் ஆங்கிலேயர் கைக்கு வசமாகவில்லை. அங்கிருந்த பாளையக்காரர்களும், ஆங்கிலேயர்களை யெதிர்த்துப் போராடினார்கள். கால வசத்தால் சுமார் கி. பி. 1790ஐ ஒட்டிய காலத்தில் ஒரு விதமாய்ச் சிறிது வசத்திற்கு வந்தது. கி. பி. 1757 லிருந்து 1790 வரையுள்ள மத்திய காலத்தில் எத்தனையோ முறை ஆங்கிலேயப் படை மதுரையைப் பிடிக்க முயன்றும் முடியாது போயிற்று. எவ்வெப்பொழுது மதுரைக் கோட்டையைப் பிடிக்க ஆங்கிலப் படைகள் ஆங்கு வந்தனவோ, அவ் வப்பொழுது திரும்பிச் செல்லுங் காலத்தில், நாட்டை நெடுகக் கொள்ளை யடித்துக் கொண்டே போயின. இவ்வாறு முதன் முதலில் பங்காரு நாயக்கனும் சந்தா ஸாகிப்பும் சேர்ந்து, நம் நாட்டை ஆங்கிலேயர்களுக்கு அடிகோலிக் கொடுத்தார்கள்.

கள்ளரக்கன்.

திரு. கா. மு. ரெத்தினம் அவர்கள்.

நவநாகரீகத்தில் ஈடுபட்டுள்ள பழக்க வழக்கங்கள் சிலவற்றை நம்மவர்கள் கையாள்வதால் உண்டாகும் நன்மை தீமைகளைப் பற்றி எவ்வெவ்விதம் பேசிக்கொள்ளினும் மற்ற தேசத்தவர்கள் பெரிதும் விரும்பியுள்ள பொருள் நமக்குத் தீமையைத் தருமென உணர்ந் திருப்போமானால், உடனே அதனை அகற்றுவதற்கு ஆவல் கொள்ளுதல் அவரவர்களின் அகற்ற முடியாக் கடமையாகும். தற்போது ஈண்டு பிரபலப் படுத்தப் புகுந்த விஷயத்தில் அவ்விதம் தீமையைக் கொடுக்க வல்ல, முரட்டுத் தன்மை வாய்ந்த, மக்களை மாக்களாக்கும் "மது" ஆம்! கள் என்னும் கொடிய அரக்கனைப் பற்றியதாகும். இந்திய மக்களின் இணையற்ற தியாகத்தால் இந்திய நாடு சுய ஆட்சி பெற்றுவிடினும், திங்கள் மூன்று மாரி பொழியினும், வருட மூன்று போகம் விளையினும் "கள்" என்னும் கொடிய இராக்கதன் நந் தேயத்திலிருந்து கொண்டிருக்கும் வரை இந்தியர்களுக்குப் பல இன்னல்களை விளைவித்துக் கொண்டிருக்கு மென்பதில் ஓரளவும் ஐயமின்று.

இது போழ்து குடியால் மடியும் மக்களும், குடியால் நலியுங் குடும்பங்களும், குடியால் மலியும் நோய்களும் இத்துணைதாமெனக் கணக் கெடுத்தல் எளிதன்று. நியாயங் கடைப் பிடித்த அரசாங்கம் நம் நாட்டினின்றும் அகன்று காலம் அதிகமாகி விட்டமையால், குடி மிகுதியும் அதனாற் கொள்ளையும், கொள்ளையால் வறுமையும், வறுமையாற் பிணியும், பிணியால் மக்களழிவும் அதிகரித்து விட்டது. "குடி மக்கட்குத் தெய்வம் கொற்றவ"னென நீதி நூற்கள் பகர்கின்றன. எனினும் இக் காலத்து அதிலும், இந்தியர்களுக்கு அம் மொழி முற்றிலும் முரண்பட்டதாகவே இருக்கிறது. பலவற்றும் மக்கட்கு

நன்மை பயக்கத்தக்க ஆட்சி முறை ஏற்பட வேண்டுவதிருக்க இந்தியர் என்ற அளவில் தன்னலம் நிறைம்பிய அரச அமைப்பே அமைந்துளது. அவ்வித மல்லவாயின், வெள்ளை ஆட்சி இந்தியாவில் ஏற்படுவதற்கு முன் பாத கண்டத்துள் ஏழு லட்சங் கிராமத்துள்ளும் ஏழு லட்சம் பள்ளிக்கூடங்களும், சத்திரங்களும் இருந்ததாக அறிவாளிகள் சொல்கிறார்களே! இன்று அவை முற்றும் எங்கு சென்றன? பள்ளிக்கூடங்களும், சத்திரங்களும் இருந்த விடத்தில் இது போழ்து யாதுளது? கள்ளுக் கடைகளும், சாராயக் கிடங்குகளும், பிராந்தி ஷாப்புகளுமே நிறையக் காணப்படுகிறது. இவ் வாட்சியில் பண்டை இந்தியாவைப் பின்பற்றுவ தென்ற கொள்கை இருக்குமாயின், இன்று சென்னை அரசாங்கத்துக்கு மட்டும் கள், சாராயம் என்னும் போதைப் பொருள்களின் மூலம் வருட மொன்றுக்கு ஏழரைக் கோடி ரூபாய் எங்ஙனம் கிடைக்கும்? எவ் வகையிலாயினும் அரசாங்கத்தினர் தங்கட்குப் பணத்தைச் சேகரம் செய்து கொள்கிறார்கள். அதனாற் சோற்றுக்குந் துணிக்குந் துயருறுபவர்கள் நம் போன்ற ஏழை மக்களே. நாளெல்லாம் நெற்றி வியர்வை நிலத்தில் விழக் கூலி வேலை செய்பவனுக்குப் பிரதி பலனாக அணா எட்டுக் கிடைக்கிற தெனில், அவ் வேழை மகன் கண்டிப்பாகக் கள்ளுக் கடைக்கு ஆறு அணா அளித்து விடுகிறான். மீதமாவது இரண்டணா. சில போழ்து அதுவு மில்லாமற் போய்விடும். இவனுக்கு ஒரு மனைவி யுண்டு; குழந்தைகளு மூண்டு. இவன் கையை எதிர் நோக்கி நிற்கும் இவனது மனைவியும், மக்களும் எக் கெதி யாவதென்பதை இறைவனே அறிதல் வேண்டும். தேச நலனைக் கோருபவர்கள்—மக்களின் சுக வாழ்க்கையைக் கோருபவர்கள் பயங்கர ரூபந் தாங்கிய, கோர வடிவங் கொண்ட இக் கள்ளை நாட்டினின்றும் அகற்ற முன்வரின் அவை அரசாங்க ஆக்கினைக்கு அடங்கியதல்லவென "144" என்னும் ஒரு அரசாங்கச் சேவகன் தடுத்து விடுகிறான். மீறினால் மாதக் கணக்கிலோ, வருடக் கணக்கிலோ சிறைக் கூடமேக வேண்டு மென்பது நிச்சயம். உண்மை ஆவேசங் கொண்டவர்கள் எவ் வகையினும் முடிவெய்த வழியின்றித் திணர்கின்றனர். கள்ளுக் கடிமையான நம் நாட்டவர்களோ வெனில் கட் குடித்தலே தமது ஜெனனப் பலனென அதன் தீமையை யுணராது மோசம் போகின்றனர்.

அம்மம்ம! நா னறிந்தமட்டில் கள்ளின் றன்மையை நினைக்குந் தோறும் அங்கம் பதறுகிறது. இக் கள்ளால் கிடைத்தற்கரிய மானிட உருவந் தாங்கியவன் எத்தகைய நட்டத்துக் காளாகிறான் என்பதை விரிக்கின் பெரிதும் பரிதாபத்துக் குரியதாகும். கள்ளானது, பயங்கர மான நெருப்பு, கொடிய வியாதி, எரிதழல் நிரம்பிய ஏரி. கள்ளால் ஒருவரும் தங்களது தாகத்தைத் தீர்த்துக் கொள்ள முடியாது. கள்ளானது, இருதயம், நுரையீரல், தசை நரம்பு, அறிவு, தன்னடக்கம் ஆகிய இவைகளுக்கு ஆதீன கர்த்தாவாக விளங்குகிறது. குடிப்பவன் தனது அறிவைக் கள்ளுக்கு அடிமை கொடுத்து விடுவதால் இடம், பொருள், ஏவல் என்பதை அறிய முடியாமற் போகிறான் என்பதை நாம் பார்க்கிறோம். அவன் பாரங்களைத் தூக்கிக் கொண்டு போகும் பொழுது வீதிகளில் நேரும் ஆபத்துக்களுக்குத் தப்பித்துக் கொள்ள முடியாது. ஏனெனில் இவனின் தசை நரம்புகள் திடனற்று விடுகின்றமையால் திடுமென விலகுவதற்கு முடியாமற் போகிறது. சுருக்கமாகக் கூறுமிடத்து அதிகக் குடியுள்ள ஒருவனுக்கு அகால மரணமே சம்பவிக்கும். மதுபானம், மற்ற அங்கங்களுக்குச் செய்யும் தீமையை விட மூளைக்குப் பேராபத்தை விளைவித்து விடுகிறது. மதுபானத்துக் கிரையான மனிதன் நாளடைவில் வார்த்தையிலும், நடக்கையிலும் நிலை தவறிவிடுகிறான். மேலும், அவன் இரத்தம் சுத்தமற்று துர்நாற்ற மிகுந்துள்ள நீரென மாறி விடுகிறது. அதனால் தேகத்தில் நுழையும் வியாதிகளுடைய விஷக் கிருமிகளையும், தேகத்திலேயே உற்பத்தி யாகும் விஷத்தையும் கொல்வதற்கு சக்தியற்று விடுகின்றமையால் இரத்த மூலமாகவே விஷக் கிருமிகள் உட் சென்று பலவீனமான இடத்தைத் தாக்குகிறது. அஃதன்றி நரம்புகளில் ஓர் விதக் கிளர்ச்சியை உண்டாக்குவதும், நமைச்சலைக் கொடுக்குந் தன்மையும் மதுபானத்துக்கு உண்டு. கள்ளைக் குடிப்பவன் ஆரம்பத்தில் மூர்க்கத்துடன் காணப்படுகிறான் எனினும் முடிவில் தளர்ச்சியும், சோர்வும், பலவீனமு முற்று பிணம் போற் பூமியிற் சாய்ந்து விடுவான். "கள்" அதிகமான மயக்கத்தைக் கொடுக்கும் ஓர் பானமே யன்றி நீடித்த உற்சாகத்தைக் கொடுப்பன வன்று. கற்ப உற்பத்தி காலத்தில் பெற்றோர்களின் மனோ நிலை எவ்வா றிருக்கின்றனவோ அவ்வாறே

அப் பிள்ளையின் நிலைமையு மிருக்கு மென்பது நிச்சயம். எத் தன்மையுள்ள பிள்ளையைப் பெற வேண்டு மென்று ஆடவர், பெண்டிர் தீர்மானிக்கின்றனரோ அவ் விதமாகவே பெறலா மென்பது தற்கால சரித்திர ஆராய்ச்சியாளரின் கூற்று. மதுபானத்தை உபயோகிக்கும் பெற்றோர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் அநேகமாய் மனோ திடனற்றவர்களாயும், சுறுசுறுப் பில்லாதவர்களாயும், பலவீனர்களாயும், விசேடத் துர்க்குண முடையவர்களாயும் இருப்பதற்கு அநந்த அத்தாட்சிகள் உண்டென ஆராய்ச்சியாளர் கூறுகிறார்கள். கட் குடிப்பவர்களுக்கு உற்பத்தியான குழந்தைகள் பிற் காலத்தில் காக்கை வலியால் வருந்துதலும், பைத்தியம் பிடித்தலைதலும் சகஜம். மேலும் அப் பிள்ளைகள் சிறு பிராயத்திலேயே மரணமாகி விடுகிறார்க ளென்பதை அநுபவத்திற் காணலாம். மதுபானமானது வியாதிகள் வரவொட்டாமல் தடுக்கும் தேக வலிமையைக் குறைப்பது மன்றி வியாதியினின்றும் குணம் பெறும் தேகத்தையும் கெடுத்து விடுகிறது.

எனவே மேற் கூறிய அபாயங்களி னின்றும் நாம் தப்பித்துக் கொள்ள வேண்டுமானால், மதுபானத்தை அடியோடு மறுத்து விடுதல் வேண்டும். தன் கையே தனக் குதவி என்பது போல் நாமே நமக்கு விமோசனத்தைத் தேடிக் கொள்ள வேண்டுமே யல்லாது பிறரை எதிர் பார்த்தலால் திருப்தியான பலனைப் பெற்று விட முடியாது. அரசாங்கத்தினிடம் சம்பளம் பெறுபவர்களாலோ அல்லது அரசாங்கத்தின் தயவைப் பெற ஆவல் கொள்பவர்களாலோ அல்லது அரசாங்கத்தினிடம் எம் முறையிலாயினும் கட்டுப்பட்டவர்களாலோ மது மறுப்புப் பிரசாரம் செய்தல் முடியாது. ஓர் சிலர் அரசாங்கத்துக்கு வேறு வகையில் வருமானத்தைக் காட்டி மதுபானத்தை நிறுத்தி விடலா மெனப் புகல்வர். நமது வெள்ளையர் அரசாங்கத்துக்கு இமயகிரி போன்று பல பர்வதங்களத்தனை பொற் குவியல்களைச் சேமித்துக் கொடுத்தாலும் செலவுக்குப் போத வில்லை என்றுதான் சொல்லுமே யன்றி போது மென்ற சொல் இந்தியாவில் அவர்களது ஆட்சி இருந்து கொண் டிருக்கும் வரை பிறக்கு மென்று எதிர் பார்த்தல் மலடியினிடம் மக்கட் பேறை எதிர் பார்த்தலையே ஒக்கும்.

ஏகாதிபத்தியமும் அடிமை வாழ்க்கையும்.

திரு. என். வேங்கடரமணன் அவர்கள்.

ஒரு காலத்தில் ஐரோப்பிய (மேல்) நாடுகள் மிகத் தாழ்வுற்றிருக்கையில் ஆசியாவின் (கீழ்) நாடுகள் செல்வத்திலும், நாகரீகத்திலும் சிறப்புற்று அவ்வைரோப்பிய நாடுகளை ஆதரித்து வந்திருக்கின்றன. ஆயினும் காலச் சக்கிரத்தின் சுழற்சியால் கடந்த நூற்றாண்டினிடையில் ஐரோப்பிய நாடுகள் உயர்வடைந்து கீழ் நாடுகளை அடக்கி அடிமை கொண்டு அவற்றின் மீது அதிகாரம் செலுத்த ஆரம்பித்தன. காலத்தின் மாறுபாடுகளால் அவ்வாறு தன் சுதந்திரத்தை யிழந்து, தனது பண்டைப் பெருமைகளை மறந்து ஐரோப்பிய நாடுகளின் ஏகாதிபத்தியத்தின் கீழ் அடிமை வாழ்க்கை யெய்தி, வறுமைக் கிலக்காகி வருந்தி வரும் கீழ் நாடுகளுள் இந்தியா முதன்மையானதாகும்.

இந்தியா

சரித்திரம் காணாத மிக மிகப் பழமையான காலத்திலே, ஏன்? உலகத்தில் முதன் முதலிலே அறிவும், நீதியும், ஒழுங்கும் கலை ஞானமும் பெற்று, சமூக வாழ்வின் முறைகளும், அரசியல் அமைப்புகளும் வகுத்துக் கொண்டு செல்வத்திற் செழித்து, இன்பத்தில் திளைத்து, நாகரீகமுடன் உலகத்தில் நடு நாயகமாய் விளங்கியது நம் பிந்திய நாடென்பதை யாரால் மறுக்க முடியும்? அத்தனைப் பெருமை தங்கிய பாரத தேசம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கீழ்ப்பட்டு ஒரு நூற்றாண்டுக்கு மேலாகவே அல்லல் பலவுற்று, அடிமை வாழ்க்கையில் மெலிந்து, வருந்தி வந்ததன் பயனாக, இன்று தன் அடிமைத் தளைகளை யறுத் தெறிந்து, உலகில்

சரி நிகர் சமானமாகத் தானும் வாழ வேண்டுமென்று விரும்பி முயன்றுகொண் டிருக்கிறது. இன்று இந்திய மக்களிடையில் கொழுந்து விட்டெரியும் தேசாபிமானத்தை யாரால் அளவிட முடியும்? முப்பத்து மூன்று கோடி பாரத ஜன சமூகத்தின் உள்ளத்தில் எழுந்த சுதந்திர தாகத்தை யாரால் தணிக்க முடியும்? நவீனமும் வலிமையும் வாய்ந்த ஆயுதங்களின் பலத்தைக் கொண்டு எத்தனை நாட்களுக்கு ஒரு நாடு முழுவதையும் அடக்கி வைத்திருக்க முடியும்? உலகமே இன்று கண் விழித்துக் கொண்டது. இனி ஒரு நாடு மற்றொரு நாட்டை அடக்கி யாளுவதென்பது முடியாத காரியம். எனவே இந்தியா விடுதலை பெறுவதென்பது நிச்சயம். அவ் விடுதலைக்குப் பிரிட்டிஷ் மக்கள் துணை புரிந்து இந்தியரின் நன்றியைப் பெற முயல வேண்டுவது மிக மிக அவசியம். இந்தியாவைப் போலவே மற்றுஞ் சில கீழ் நாடுகள் ஐரோப்பிய வல்லரசுகளின் ஆதிக்கத்தின் கீழ் அடிமையாகி இன்று வருந்திக்கொண் டிருக்கின்றன. அவற்றுள் சீனாவு மொன்று.

சீன தேசம்

ஆசியாக் கண்டத்தில் பழமையான பெருமை பெற்ற இச் சீன தேசம் கடந்த நூற்றாண்டில் பல காரணங்களாலும் ஐரோப்பிய தேசங்களின் வியாபார—அரசியல் சூழ்ச்சிகளுக்குட் பட்டுத் தன் சுதந்திரத்தைப் பெரும்பாக மிழந்து, ஏழ்மை நாடாகி, அயல் நாட்டினரின் அடிகளின் கீழ் அகப்பட்டு நசுங்கிக்கொண் டிருந்தது. அதற்குத் துணையாக ஜப்பானியரும் சீனாவை வருத்த முற்பட்டனர். ஆயினும் சுதந்திர யுகமாகிய இவ் விருபதாவது நூற்றாண்டின் உதயத்தால் சீனர்களும் கண் விழித்துக் கொண்டனர். சீனாவில் தற்போது பாலிய சுதந்திர வீரர்கள் ஒருங்கு சேர்ந்துத் தம் நாட்டின் மீது அதிகாரம் செலுத்தி வரும் அயல் நாட்டாரின் ஆதிக்கத்தைப் படிப்படியாக ஒழித்து வருகின்றனர். சீன தேசமெங்கும் தேசாபிமானம் பொங்கி வழிந்துகொண் டிருக்கின்றது. அவ் வெள்ளத்தின் முன் அயல் நாட்டார்கள் நிற்க மாட்டாமல் ஒதுங்கிச் செல்ல முற்பட்டு விட்டனர். அநேகமாகத் தற்போது சீனாவில் ஐரோப்பியரின் ஆதிக்கத்தை யொழித்துச் சீனர்களின் சுய ஆட்சியை ஸ்திரமாக நிலை நிறுத்துவான் வேண்டி கோமின்

டாங்கு கட்சியார்கள் தீவிரமாக வேலை செய்து வருகின்றனர். எனவே இதனால் ஆசியாக் கண்டத்தில் ஐரோப்பியர்களின் ஆட்சி வீழ்ச்சி யடைய ஆரம்பித்த தென்பதற்குத் தடை யில்லை. ஆசியாவின் நாடுகளி லெங்கும் சுதந்திரத் தீ பற்றிப் பரவிச் சுடர்விட்டெரியத் தலைப்பட்டு விட்டது. இனி அதன் வேகத்தைத் தடுக்கவோ அன்றித் தணிக்கவோ யாரால் முடியும்? இந்தியாவைப் போல் அயல் நாட்டு அரசாங்கத்தின் அடிகளின் கீழ் அடிமையாகி அவதியுற்று வரும் மற்றொரு நாடு கொரியா என்பதாம்.

கொரியா நாடு

ஜப்பானியர்கள் 1901-ம் ஆண்டில் கொரியா நாட்டைப் பலவந்தமாக அடிமை கொண்டனர். இன்று முதல் கொரியா நாட்டின் தேசாபிமானம் படைத்த வீரர்கள் தம் நாட்டின் அரசியல் சுதந்திரத்தை மீண்டும் பெற வேண்டி உழைத்து வருகின்றனர். அவ்வாறு கொரியாவின் சுதந்திரத்தை நாடிச் செய்து வரும் கிளர்ச்சியை ஜப்பானியர்கள் பல வகைகளில் அடக்க முயன்றனர். ஆயுத பலத்தை உபயோகித்தனர். கொரியா நாட்டு வீர மக்கள் பலரைத் தூக்கி லிட்டுக் கொன்றனர். அநேகரைச் சிறையிலிட்டு வருத்தினர். ஜப்பானிய ரகசியப் போலீஸ் படையினர், கொரியா நாட்டுச் சுதந்திர வாதிகளை மறைந்து நின்று மாய்த்தனர். மற்றும் பலரை வெளி யுலக மறியாதவாறு எவ் வகையிலோ மறைத்தனர். அவ்வாறு ஜப்பானியர்கள் செய்த முயற்சிகள் பலவும் கொரியர்களின் சுதந்திராவேசத்தை மென் மேலும் கிளப்பவே செய்தன. நாடெங்கும் சுதந்திரக் கிளர்ச்சி வீறு கொண்டு எழும்பி நிற்கிறது. அந் நாட்டு இளைஞர்கள் "ஒன்று தாங்கள் சுதந்திரம் பெற்று வாழ வேண்டும்; இன்றேல் சுதந்திரம் பெறும் முயற்சியில் தங்கள் கொரியா சமூகமே அழிந்துபட வேண்டும்" என்று சபத மிட்டு உழைத்து வருகின்றனர். இன்று கொரிய நாட்டுச் சிறுவர் சிறுமிகளும் சுதந்திரக் கிளர்ச்சியில் தலையிட்டு வேலை செய்து வருகிறார்க ளெனின் அந் நாட்டாரின் ஊக்கத்தையும், நாட்டுப் பற்றையும் என்னென்று புகழ்வது? தங்களுக்கு அருகாமையி லுள்ள சைனா தேசத்தில் புரட்சி இயக்கம் வலுவடைந்து தேசிய அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டு வருவது கொரியா தேசத்தாரின்

உற்சாகத்திற்கு ஊன்றுகோலாயிற்று. ஜப்பானியர்களும் கொரியா நாட்டின் சமாதானத்தை நாட வேண்டிய நிலைக்கு உள்ளாகி வருகின்றனர். ஆகவே விரைவில் கொரியா நாடு சுதந்திரம் பெறு மென்பதற் கையமில்லை. நிற்க,

பிலிப்பைன் தீவுகள்

இந்தியாவைப் போல் பிலிப்பைன் தீவுகளும் தம் சுதந்திரத்தை 1899-ம் ஆண்டில் இழந்து அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஏகாதிபத்தியத்தின் கீழ் அடிமை வாழ்க்கை நடத்தி வருகிறது. எனினும் பிலிப்பைன் தீவார் என்று தங்கள் சுதந்திரத்தை இழந்தார்களோ அன்று முதலே தங்கள் சுதந்திரத்தை மீண்டும் பெற முயன்றுகொண் டிருக்கின்றனர். பிலிப்பைன்காரரும் இந்தியரைப் போலவே முதன் முதலில் அமெரிக்க அரசாங்கத்திற்குப் பல பல விண்ணப்பங்கள் செய்து கொண்டு தங்கள் சுதந்திரத்தைப் பெற விரும்பினர். ஆயினும் உலகில் குடியரசாட்சிக்குப் பெயர்போன அமெரிக்க நாடு அவ் விண்ணப்பங்களைப் புறக்கணித்ததோடு, பிலிப்பைன்காரர்களுக்குத் தம் நாட்டை ஆளும் திறமை போதாதென்றும், அவர்கள் அத் திறமையை யெய்தியவுடனே சுதந்திரத்தை வழங்குவோமெனவும் பல்லவி பாட ஆரம்பித்தனர். எனவே பிலிப்பைன் நாட்டார் அச் சாக்குப் போக்குகளைக் கண்டித்துத் தம் நாட்டிற்கு உடனே விடுதலை யளிக்கப்பட வேண்டுமென அஹிம்சா மார்க்கத்தில் கிளர்ச்சி செய்து வருகிறார்கள். அமெரிக்காவும் தனது பெருமையை உலகில் காத்துக் கொள்ள வேண்டுமாயின் பிலிப்பைன் தீவுகளுக்கு விடுதலை வழங்கியே தீர வேண்டும். இப்படியே பிரான்சு அரசாங்கத்தின் அதிகாரத்தின் கீழ் அடிமை நிலை யெய்தியுள்ளது. அன்னம் தேசமாம்.

அன்னம் தேசம்

இத் தேசமும் பிரான்சு ஏகாதிபத்திய ஆதிக்கத்தி னின்றும் விடுதலை பெறக் கிளர்ச்சி செய்து வருகிறது. பிரான்சு அதிகாரிகள் அந் நாட்டுச் சுதந்திர இயக்கத் தலைவர்களைச் சிறையி லிட்டும், தூக்கி லிட்டும் பலவாறு துன்புறுத்தி அவ் வியக்கத்தை யடக்கத்

தலைப்பட்டனர். அதினின்றும் அவ் வியக்கம் புதிய சக்தி கொண்டு மேலெழும்பி வருகிறது. எனவே விரைவில் அன்னும் தேசத்தாரின் கிளர்ச்சிப் பலப்படு மென்பதால் பிரான்சு நாட்டார் அதற்கு இணங்கியே யாக வேண்டும்.

கிழக் கிந்தியத் தீவுகள் (ஈஸ்டு இண்டீஸ்)

இனி டச்சுக்காரரின் ஏகாதிபத்தியத்தின் கீழ் அடிமையாக விருக்கும் கிழக் கிந்தியத் தீவுகளிலும் சுதந்திரத் தாகம் தோன்றி யிருக்கிறது. சென்ற பத்து ஆண்டுகளுக் கிடையில் சுமார் பத்துத் தடவைகள் அத் தீவுகளில் புரட்சி (கலகம்) காணப்பட் டிருக்கிறது. டச்சுக் கவர்ன்மெண்டார் அப் புரட்சிகளை அவ் வப்போது அடக்கிக் கொண்டு வருகிறார்களாயினும், அந் நாட்டாரிடையில் தோன்றிய தேசாபிமானம் நாளடைவில் வளர்ந்து உருவாகிக் கொண்டே வருகிற தென்னலாம். ஆகவே விரைவில் அந் நாடும் சுதந்திரக் கிளர்ச்சியில் முதன்மை யடைந்து பயன் பெறக் கூடு மென்பதை எவரும் எதிர் பார்க்கலாம்.

இவ்வாறு கீழ் நாடுகள் பல வற்றிலும் தோன்றியுள்ள புரட்சி இயக்கங்க ளனைத்தும் அந் நாட்டினருக்கு மேல் நாட்டு ஏகாதிபத்திய ஆட்சிகளி னிடத்தில் ஏற்பட்டுள்ள வெறுப்பை விளக்குகின்றன வன்றோ? கீழ் நாட்டாருக்கு மேல் நாட்டாரின் ஏகாதிபத்திய எதேச்சாதிகாரத்தின் கீழ் தம் நாடு அவதியுறுவது சகிக்க ஒண்ணாததா யிருக்கிறது. ஆகவே இனி ஆசியாக் கண்டத்தில் ஐரோப்பிய வல்லரசுகளின் அதிகாரம் அஸ்தமிக்க ஆரம்பித்து விட்ட தென்பதில் தடையில்லை. எனவே உலகில் ஏகாதிபத்திய ஆட்சி வீழ்ச்சி யடைந்து எங்கும் சுதந்திர வொளி வீசப் போவது நிச்சயம். அதற் கறிகுறியாக இன்று இந்தியா, சைனா, கொரியா, பிலிப்பைன் முதலிய நாடுகளில் ஏற்பட்டு வரும் மாறுதல்கள் அனைத்தும் ஏகாதிபத்திய அரசாங்கங்களுக்குச் சாவு மணிகளாக ஒலித்து வருகின்றன வெனலே நேரிதாம்.

பாரத நாட்டுப் பாட்டு.

பண்டித. K. அப்துல் சுகூர் சாகிப் அவர்கள்.

(பாம்பாட்டிச் சித்தர் பாடல் மெட்டு)

பாடு தமிழா நீ பாடு தமிழா—பண்டைப்
பாரத நாடெனப் பாடு தமிழா!

1. சீர்பல மல்கிய நாடெங்கள் நாடு—செழுஞ்
செம்மை பொருந்திய நாடெங்கள் நாடு
பார்பல நல்கிய நாடெங்கள் நாடு—பண்டைப்
பாரத நாடெனப் பாடு தமிழா. (பாடு தமிழா)

2. செல்வம் பொருந்திய நாடெங்கள் நாடு—உயர்
சீலம் நிறைந்த நாடெங்கள் நாடு
பல்வளம் பழுனிய தெங்கள் நாடு—பண்டைப்
பாரத நாடெனப் பாடு தமிழா. (பாடு தமிழா)

3. வீரஞ் செறிந்த நாடெங்கள் நாடு—போர்
வினைகள் புரிந்ததுவு மெங்கள் நாடு
பார கலைகளுள தெங்கள் நாடு—பண்டைப்
பாரத நாடெனப் பாடு தமிழா. (பாடு தமிழா)

4. கல்வி சிறந்ததுவு மெங்கள் நாடு—நங்
காரிகையார்கள் கற்ற தெங்கள் நாடு
பல் விதமான பலனுற்ற நாடு—பண்டைப்
பாரத நாடெனப் பாடு தமிழா. (பாடு தமிழா)

5. துலையில் தசைநிறுத்த தெங்கள் நாடு—தேரிற்
துணைமகனைத் துகைத்த தெங்கள் நாடு
பலபுகழ் தாங்கிய நாடெங்கள் நாடு—பண்டைப்
பாரத நாடெனப் பாடு தமிழா. (பாடு தமிழா)

6. திண்மை செறிந்த நாடெங்கள் நாடு—நற்
தியாகம் புரிந்த நாடெங்கள் நாடு
பண்ணி லுயர்ந்த நாடெங்கள் நாடு—பண்டைப்
பாரத நாடெனப் பாடு தமிழா. (பாடு தமிழா)

7. கொடிய தீண்டாமையின்றி வாழ்ந்த நாடு—ஓர்
குலமென மக்கண்மனங் கொண்ட நாடு
படியினிற் றாழ்வுயர்வை யோட்டு நாடு—பண்டைப்
பாரத நாடெனப் பாடு தமிழா. (பாடு தமிழா)

8. சங்கஞ் சிறந்த நாடெங்கள் நாடு—கைத்
தறிக ளிலங்கு நாடெங்கள் நாடு
பங்க மிலாத நாடெங்கள் நாடு—பண்டைப்
பாரத நாடெனப் பாடு தமிழா. (பாடு தமிழா)

9. நீலக் கடல்களுள தெங்கள் நாடு—விண்
ணிமிரு மிமயமுள தெங்கள் நாடு
பால்வளை பாடு நாடெங்கள் நாடு—பண்டைப்
பாரத நாடெனப் பாடு தமிழா.

10. நார மிருந்த நாடெங்கள் நாடு—பூவின்
நாயக மான நாடெங்கள் நாடு
"பாரதி" வாழு நாடெங்கள் நாடு—பண்டைப்
பாரத நாடெனப் பாடு தமிழா. (பாடு தமிழா)

சுயராஜ்ய மகிமை.

திரு P. கந்தநரசிம்மன் அவர்கள், B. A., B. L.

நல்ல வேளை. தேச மெங்கும் "சுயராஜ்யம்" என்ற நாதம் ஒலிக்கிறது. நம் தேச மக்களுக் கெல்லாம் சுயராஜ்யப் பசி—சுயராஜ்ய தாகம் உண்டாகி விட்டது. ஏன்? சுயராஜ்யமே மனிதனுடைய லக்ஷியம். ஆகையால் எப்பொழுதேனும் அதை மக்கள் பெற்றே தீர வேண்டும். சுயராஜ்ய ஆசை மக்களுக்கு உண்டாகி விட்டால், தீவிரமாய் வளர்ந் தோங்குவதே அதன் குணம்.

அதைத் தணிக்கச் "சுயராஜ்யம்" ஒன்றால் தான் முடியும். வேறெவராலும், வேறெதனாலும் முடியாது. ஆராய்ந்து பார்த்தாலும், அறிவு நூல்களைப் பார்த்துப் படித்தாலும், அநுபவம் நிறைந்த தேச சரித்திரங்களின் படிப்பினைகளை ஓர்ந்தாலும் இவ் வுண்மையே புலப்படும். ஏனெனில், மனிதன் சுயராஜ்யத்தில் வாழ வேண்டு மென்பதே இயற்கையின் நியதி. இந்த இயற்கையின் நியதியே இறைவனின் சட்டம். இந்தச் சட்டத்தை அநுசரிப்பதே உண்மைச் சட்டப்படி ஒழுகுவதாகும். இதற்கு மாறுபட்டவைகளை எதிர்ப்பதே உண்மைச் சட்ட மறுப்பு. இந்த இயற்கைச் சட்டத்திற்கு உட்பட்டு, இதற்கு விரோதமானவைகளை எதிர்ப்பதே உண்மையான—வீரமான மனிதனுடைய உரிமை. ஆகையால்தான் லோகமான்ய திலகர் "சுயராஜ்யம் என் பிறப்புரிமை" என்று கர்ஜித்தார். சுயராஜ்யமே சுதந்திர ராஜ்யம்; சுதந்திர ராஜ்யமே சுக ராஜ்யம். சுகத்தை விரும்புவதே இயற்கை. எனவே, சுகம் தரும் ராஜ்யமாகிய சுய ராஜ்யமே எல்லோரும் விரும்புவது.

சுயராஜ்ய மென்றால் அன்பு ராஜ்யம்—சுறு சுறுப்பான மக்கள் நிறைந்த ராஜ்யம்—சுதந்திர வீரர்கள் ராஜ்யம்—பிற தேசங்களையும், பிற தேசங்கள், பிற மக்கள் பொருட்டு தம் தேச நலத்தையும் தியாகம் செய்யும் ராஜ்யம். சுயராஜ்ய மெனில் காரியத்தில் கண்ணும், கருத்தும், கண்ணியமும் உள்ளவர்கள் ராஜ்யம்—செல்வம் ததும்பிப் பொங்கும் ராஜ்யம். எவ்விதமேனும் எல்லா வழிகளிலும் மங்களம் விளைக்கும் ராஜ்யம். சுயராஜ்யத்தில் வீரருக்கும், தீரருக்கும், தியாகிகளுக்கும், காரியவான்களுக்கும், கண்ணியவான்களுக்குமே இடமுண்டு, மதிப்புண்டு.

தேசம் சுயராஜ்ய மடைந்து விட்டால், எங்கும் வேலை, எங்கும் தொழில், எங்கும் வாணிபம், எங்கும் வர்த்தகம், எங்கும் வேளாண்மை, எங்கும் ஊக்கம், எங்கும் செல்வம், எங்கும் அறிவு, எங்கும் ஆராய்ச்சி, எங்கும் கலைப்பயிற்சி, எங்கும் சிலப்பயிற்சி, எங்கும் காவியம் போற்றல், ஓவியம் தீட்டல், எங்கும் சிற்பம், எங்கும் சித்ரம், எங்கும் வீரம், தீரம், த்யாகம், எங்கும் அன்பு,

எங்கும் அருள், எங்கும் அறம்; ஆனால் பஞ்சம் பறந்து, பயம் தொலைந்து, பிணிகள் ஒழிந்து, மறம் மடிந்து, க்ஷேமம் வளர்ந்து, தீரம் மிகுந்து, ஆரோக்யம் நிறைந்து, அறம் தாண்டவமாடி நிற்கும். சுயராஜ்யத்திலேயே துன்பம் நீங்கவும், இன்பம் ஓங்கவும், அன்பு என்னும் பெண்ணும், வீரம் என்னும் ஆணும் கைகள் கோத்து த்யாகமென்னும் ஆடல் புரியக் காணலாம். சுயராஜ்யத்தினால் மக்களுக்கென்ன நன்மை? அது கொண்டு வரும் பாக்யம்தான் யாது? ஆரோக்கியமும் பலமும் தவழும் உடல், நீடித்த ஆயுள், பரந்த அறிவு, விரிந்த நோக்கம், தத்தம் திறமைப்படி உவகையோடு உழைத்துண்டு வாழ்வதில் ஆசை, அதற்கேற்ற சுதந்திரம், அதற்கேற்ற வாய்ப்பு அல்லது சந்தர்ப்பங்கள், உலக வாழ்வில் சந்தோஷம், உண்மையில் விருப்பு, பொய்ம்மையில் வெறுப்பு, நாட்டின் பொருட்டு அல்லது பிறர் நலங்களின் பொருட்டுத் தம் நலங்களையும் த்யாகம் செய்யும் துணிவு. இவை படைத்த நாடே உண்மை சுயராஜ்ய நாடு—வீர சுதந்திர நாடு. தம் நாட்டுக்கு இந்த வீர சுதந்திரம் வேண்டி அல்லும் பகலும் உழைத்து நிற்பவரே மகாத்மா காந்தியடிகள். இந்த வீர சுதந்திரம் பெற்ற போதுதான் நம் பாரதமாதா "நவீன பாரதி" எனப்படுவாள்.

நம் தாய் நாடு அந்தப் பதவி பெற நாம் ஒவ்வொருவரும், அப்பணியில் இறங்கியுள்ள காந்தியடிகளுக்கும், தொண்டர்களுக்கும், பத்திரிகைகளுக்கும் நம்மாலான உதவியை உடலாலோ, பொருளாலோ, சொல்லாலோ, எழுத்தாலோ அல்லது எண்ணமாகிய பிரார்த்தனையாலோ புரிய வேண்டும். மகரிஷிகள், மகான்கள் உதித்த ஒரு (பாரத) தேசம் க்ஷீணமுற்றிருக்கும் போது, மீண்டும் நல்ல ஸ்திதி அடையும்படி அதற்கு நாம் நம்மாலான மட்டும் உதவுவதைவிட வேறு பாக்யமுண்டோ? இல்லவே இல்லை. வந்தே மாதரம்.

வட்டமேஜையில் சுதேச மன்னர் சூழ்ச்சியா?

திரு. K. G. கிருஷ்ணன் அவர்கள், (B. Sc Hons.)

நாம் முன்பு 'சுதேச அரசர்களும் அவர்கள் இராஜ்யங்களும்' என்ற விஷயத்தை ஆராய்ந்தோம். இப்பொழுது 'சுதேச அரசர்களும் வட்டமேஜையும்' என்ற விஷயத்தை இவண் சுருக்கமாக ஆராய்வோம். இந்தியப் பிரதிநிதிகளான வட்டமேஜைக்குச் சென்றவர்கள் இந்தியாவுக்கு எப்படியாவது குடியேற்ற நாட்டு அந்தஸ்து கொண்டு வரப் போவதாக வெகு கெம்பீரத்துடன் கூறிச் சென்றனர். இங்கிலாந்து சென்றவுடன் இந்திய அரசர்களின் சூழ்ச்சியில் மயங்கி கட்டுப்பாடான ("பெடரல்") ஆட்சியைப் பெற முயன்று வருவது யாவருமறிந்த விஷயம். சர். சாப்ரூ, ரைட் ஆனரபில் சாஸ்திரி, டாக்டர். மோன்ஜே, ஜெயக்கார் முதலிய குடியேற்ற நாட்டு அந்தஸ்திற்குக் குட்டிக்கரணம் போடப் போவதாகக் கூறியவர்கள் இன்று மதி மயங்கிப் பெடரல் ஆட்சிக்குக் கூக்குரல் விடுவதைக் கேட்க ஒரு பக்கம் வியப்பு நகைப்பையும் மறு பக்கம் மன வருத்தத்தையும் தருகிறது.

'பெடரல்' யோசனை

பெடரல் யோசனையைச் சுதேச அரசர் மந்திரிகள் மூவர் (குவாலியர் நாட்டைச் சேர்ந்த கனல் ஹக்சார், ஹைதராபாத் இராஜ்யத்தைச் சேர்ந்த சர். அக்பர் ஹைதாரி, மைசூர் மாகாணத்தைச் சேர்ந்த சர். மகமத் இஸ்மேய்ல்) வட்டமேஜைக்குத் தெரியப்படுத்தினர். அவர்கள் பெடரல் யோசனையில் சிற்சில விடங்களில் மாறுபட்டாலும் பொதுவாக ஒரே விதமாகவே இருக்கின்றனர். பெடரல் யோசனையில் சுதேச மன்னர் இராஜ்யங்களின் பிரதிநிதி

களும் மற்ற இந்திய பாகங்களின் பிரதிநிதிகளும் சேர்ந்து பெடரல் சபை யொன்று ஏற்பட வேண்டும். இச் சபை இவ் விரு பகுதியினர்களின் பொதுவான விஷயங்களை மாத்திரம் கவனித்து வர வேண்டும். அவைகளாவன: பாதுகாப்பு, தூர நாட்டு சம்பந்தம், பிரிட்டிஷ் சம்பந்தம், புகை வண்டி, தபால், கப்பல் சரக்கு வரி, நாணயம் முதலியவை. மற்ற ஆட்சி விஷயங்களில் சுதேச அரசர் இராஜ்யங்களும், இதர இந்திய பாகமும் தங்களிஷ்டம் போல் நடந்து கொள்ளலாம். பொதுவாக ஓர் உயர்தர நியாயஸ்தல மேற்பட வெண்டும். அது இரு தரப்பிலும் ஏற்படும் சட்ட விரோதமான விஷயங்களைக் கண்டிக்கவும், சாதாரண நியாயஸ்தலங்களால் முடியாத வியாஜ்யங்களை விசாரிக்கவும் போதிய சக்தியுடையது. பெடரல் சபையில் 150 அங்கத்தினர்கள் ஏற்பட்டு அதில் 50 சுதேச மன்னர் பிரதிநிதிகளும், 100 மற்ற பாகத்துப் பிரதிநிதிகளும் சேர்ந்திருக்க வேண்டும். சுதேச மன்னர் இராஜ்யங்களல்லாத மற்ற பாகங்களுக்குப் பிரதிநிதிகளா யேற்படும் 100 பேர்களும் இந்திய சட்ட சபையி லிருந்தும், கவர்னர் ஜெனரல் மந்திரி சபையி லிருந்தும் தேர்ந்தெடுக்கப்படும். இப்படி ஏற்பட்ட பெடரல் சபையின் வேலைகளை [illegible] சபை உண்டாக்கும் கமிட்டிகள் கவனித்து வர வேண்டும். இப்படியான சில கமிட்டிகளில் சுதேச மன்னர் பிரதிநிதிகளுக்குச் சாசுவத ஸ்தா[illegible] ஏற்[illegible]ண்டு மாம். இந்திய அரசர் சம்பந்தப்பட்ட அள[illegible] யோசனையின் (Federal Scheme) சுருக்கமான கருத்து.

அரசர்கள் ஆதரவேன்?

இந்தியாவில் என்று மில்லாத் தேசாபிமானம் பொங்கி ஜ்வலித்து இந்தியாவின் விடுதலைக்கு இந்திய மக்கள் ஆண் பெண் இருபாலாரும் தங்கள் உடல் பொருளாவி மூன்றையும் அர்ப்பணஞ் செய்து உழை உழை யென்று சதா உழைத்து அச்சமின்றி அரசாங்கத்தை எதிர்த்துச் சத்யாகிரகப் போர் செய்ததில் சிறைக் கோட்டங்களைத் தவக் கோட்டங்களாக (திரு. "பாரதி"யின் ஆசிரியர் உள்பட) ஏற்று துன்புற்று வந்த சில மாதங்களுக்கு முன் இன்று, "நாங்கள் முதலாவது இந்தியர்கள், இரண்டாவது சுதேச

மன்னர்கள்," என்று, அன்று வட்டமேஜையில் கூறின அரச பெருமான்கள் "இந்தியாவுக்குப் பூரண சுதந்திரம் ஏற்படக் கூடாது. அப்படி ஏற்பட்டால் நாங்கள் எப்பொழுதும் போல் காருண்ணிய பிரிட்டிஷாரின் கடாட்சத்தின் கீழ் ஆளப்பட்டு வர வேண்டும்" என்று கூக்குரலிட்டு வந்ததை நாம் மறந்து விட்டோமா? இல்லை! இல்லை!! வட்டமேஜை செல்லும் வரை இப்படி முட்டுக் கட்டைகளா யிருந்து விட்டு வட்டமேஜை சென்றவுடன் இதர இந்திய பிரதிநிதிகளோடு சேர்ந்து உழைப்பதின் காரணம் யாது?

சுதேச அரசர்களை பிரிட்டிஷ் அரசருக்காக இந்திய வைசிராய் மேல்ப் பார்த்து வருகிறார். வைசிராய் தனக்குப் பிரதிநிதியாக ஒவ்வொரு ராஜ்யத்திலும் ஒரு ஏஜெண்டு ஏற்படுத்தி அரசர்களை மேல்ப் பார்த்து வரக் கட்டளையிட் டிருக்கிறார். இந்த பிரிட்டிஷ் ஏஜெண்டுகளுக்குப் பிடித்த மற்ற விஷயங்களை அரசர்கள் செய்து கொள்ள முடியாது. அப்படி மீறி நடக்கும் அரசரை வைசிராய் அரசர் பதவியினின்றும் நீக்கிவிட அதிகாரம் பெற்றிருக்கிறார். ஆகவே ஏஜெண்டுகளின் நல்லெண்ணத்தையும் நன் மதிப்பையும் சுதேச மன்னர்கள் பெற்று வருவது அவசியமா யிருப்பது போலவே, சில மாதங்களுக்குமுன் செய்ண்ட் ஜேம்ஸ் அரண்மனையில் (இன்று மதி மயங்[illegible]த்தில்) வெகு சாதுரியமாகவும், கெம்பீரமாகவும் சொற்[illegible] நடாத்திய அரச குமாரர்கள், தங்கள் இராஜ்யங்களில் ஏஜெண்டுகள் முன் நடுக்கமுற்று நிற்கவேண்டி யிருக்கிறது. ஏஜெண்டுகள் சில அரசர்களின் ஆபாச விஷயங்களைத் தெரிந்திருக்கக் கூடுமாகையால் அரசர்கள் அவர்கள் முன்னிலையில் எப்பொழுதும் குற்றமுள்ள நெஞ்சத்தினராய் உள்ளம் நடுங்குவார்கள். இப்படியாக தங்கள் இஷ்டமான உள் நாட்டு ஆட்சிகளில் தலையிடுதலும், அடக்குமுறைகளு மேற்பட் டிருப்பதைக் கண்டு மனம் பொருமல் 'சுதேச மன்னர் சங்கம்' தங்களுக்கு ஏற்பட்டிருக்குங் குறைவுகளை நீக்க வேண்டுமென்று வைசிராயிடம்

முறையிட்டது. அதற்கிணங்கி லார்டு இர்வின் இந்திய அரசர்களின் இராஜ்யங்களை நன்றாய்ப் பரிசோதித்து அவர்கள் குறைவுகளை நீக்க வழிகாட்டும்படி பட்லர் கமிட்டி (Butler's Committee) யொன்றை ஏற்படுத்தினார். இந்தக் கமிட்டியில் சர். லெஸ்லி ஸ்காட் என்ற பெரியாரைச் சேர்க்க ஏராளமான செலவேற்பட்டது. அன்றியும் இக் கமிட்டி சென்ற இராஜ்யங்களி லெல்லாம் ஆடல், பாடல், விருந்து முதலிய சுய நல ஆடம்பரங்களில் கணக்கற்ற திரவியங்கள் செலவாயின. இப்படி பட்லர் கமிட்டியை ஏமாற்றி, தங்கள் காரியங்கள் சித்தி பெறுமெனப் பின்பு இங்கிலாந்துக்கு ஓடோடியுஞ் சென்று அக் கமிட்டியின் முன் வாக்குமூலங் கொடுத்தனர். கடைசியாக முடிவென்ன? பட்லர் கமிட்டி கொஞ்சமும் இரக்கமில்லாமல் பழைய முக்கிய ஏற்பாடுகளில் எதையுங் குறைக்காமல் நாபா, இந்தூர், பாரத்பூர் அரசர்களின் நடக்கை பிடியாமல் அவர்கள் ஆட்சியினின்றும் நீக்கப்பட்டது போலவே வைசிராய் தன் அபிப்பிராய பேதமாய் நடந்து கொண்ட அரசர்களை நீக்கி விட முடியுமென்று முடிவு செய்ததைக் கண்டு அரசர்கள் மனந் திடுக்கிட்டு ஒன்றுந் தோன்றாது "இலவு காத்த கிள்ளை" போலாயினர்.

கடந்த 30-௳ மார்ச்சு௴ டில்லியில் வைசிராயின் தலைமையின் கீழ் கூடிய மன்னர் கூட்டத்தில் ஆள்வார் [illegible] ராஜா, தான் பட்லர் கமிட்டிக்கு "சாம்பேன்" என்ற மதுபான[illegible]த்திரம் ஆயிரக் கணக்காய்ச் செலவிட்டதாக முறையிட்டார். போப்பல் நவாப், ஏஜெண்டுகள் அடிக்கடி தங்கள் ஆட்சிகளில் தலையிடுவது கூடாதென முறையிட்டார். அங்கு அநேக தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டன. அவைகளில் பிக்கானீர் மகா ராஜா, பட்லர் கமிட்டியின் முடிவைக் கண்டிக்குந் தீர்மான மொன்றைக் கொண்டு வந்தார். இத் தீர்மானங்கள் நிறைவேறியதைக் கண்டு லார்டு இர்வின் "நீங்கள் கேட்டபடி உங்கள் குறைவுகளை நீக்கும்படி ஓர் கமிட்டி ஏற்படுத்தினேன். உங்களுக்காக சர். லெஸ்லி ஸ்காட் என்ற மேதாவியைக் கமிட்டியில் சேர்த்துக் கொண்டீர்கள். இப்பொழுது அக் கமிட்டியின் முடிவின் பிரகாரம் நடந்துகொள்ள வேண்டுமே யன்றி

வேறுவழி யில்லை" என்று கூறும் விதமாய் புன் சிறிப்புடன் அமர்ந்திருந்தார்.

இச் சமயத்தில் இந்தியாவுக்குப் பூரண சுதந்திரம் கிடைக்கக் கூடாதென்றும் அப்படிக் கிடைத்தால் தாங்கள் பிரிட்டிஷாரின் கீழே இராஜ பக்தியுடனிருக்கப் போவதாகவும் பறைசாற்றி பட்லர் கமிட்டியிடம் தங்கள் குறைவுகளை நீக்கிக் கொள்ள முயன்றனர். தங்கள் ஏமாற்றம் சித்தி பெறாமல் போனதைக் கண்ட மன்னர்களுக்கு வேறு வழி யில்லாமல் தயங்கினர்.

கடைசி நம்பிக்கை

தற்போது, மூளையில் சிறந்த அரசர்களில் சிலர் வட்டமேஜை ஏற்படுவதைக் கண்டு தங்கள் குறைவுகளைக் கடைசியாக வட்ட மேஜையின் மூலமாவது நீக்கிக்கொள்ள வேண்டு மென்று சதியாலோசனை செய்தனர். ஆதலால் தாங்கள் முதலாவது இந்தியர்கள், இரண்டாவது அரசர்களாதலால் இந்தியாவின் முன்னேற்றத்தை முதலாவதாகக் கருதுவதாகவும் ஆசையினால் எல்லாரும் சேர்ந்து 'பெடரல்' ஆட்சியைத் தழுவ வேண்டு மென்று வெகு ருசிகரமாய்ப் பேசி கனம். சாஸ்திரி, சர். சாப்ரூ முதலியவர்களை ஏமாற்றி அவர்க[illegible] தங்கள் நோக்கத்திற் கிணங்கும்படி செய்து வ[illegible]டார்கள். அர[illegible] பிரிட்டிஷ் சம்பந்தத்தால் தங்களுக் கேற்பட்ட சங்க[illegible]ளினின்றுந் தப்பித்துக் கொள்ள இதுவே தகுந்த சமயமென்று சதியாலோசனை செய்து இந்தியாவின் பிரதிநிதிகளென்றும் மூளையில் சிறந்தவர்களென்றுஞ் சொல்லப்படாநின்ற அநேகர்கள் மனதைக் கலக்கிவிட்டனர். இப்பொழுது அவர்கள் (மன்னர்கள்) என்ன கேட்கிறார்களென்று நினைக்கிறீர்கள்? அவர்கள் பெடரல் சபையில் சேருமுன் தங்கள் உள் நாட்டு சுதந்திரமான ஆட்சி சம்பந்தமாய்த் தங்களுக்கும் பிரிட்டிஷாருக்கும் இதுகாலவரை ஏற்பட்டுள்ள உடன்படிக்கை எப்பொழுதும் உரிமையாகு வண்ணம் சட்ட திட்டங்களுடன் பகிரங்கமாய்க் குறிப்பிட வேண்டுமாம். அதாவது அவர்கள் முன் காலத்தில் நடந்து கொண்டது போல் இராஜ்யங்களைத் தங்களிஷ்டம் போல் கேள்வி

யின்றி ஆண்டு வரச் சுதந்திரம் வேண்டுமாம். இந்தியாவில் ஒற்றுமை ஏற்பட்டுவிட வேண்டுமென்று வட்டமேஜையில் பெடரல் ஆட்சிக்குப் பாடுபடுவோர்கள், சுதேச மன்னர் இராஜ்யங்களில் வசிப்போர் பிற் காலத்தில் அடையும் கஷ்டங்களைக் கவனிக்க வேண்டாமா? பெடரல் ஆட்சி ஏற்பட்டுவிட்டால் இந்தியா வெகு காலமாய் அடைய முயன்று வரும் குடியேற்ற நாட்டு அந்தஸ்து வெகு தூரத்திற்கப்பால் சென்று விடுமென்பது புலனாகவில்லையா? இந்தியா எப்பொழுதும் பிரிட்டிஷ் அரசரின் கீழிருந்து வர வேண்டுமென்று சுதேச அரசர்கள் அழுத்தமாய்க் கூறுகின்றனர். இதனால் அவர்கள் முக்கியமாய் தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்ள சிரத்தை கொண்டு திரிகிறார்களென்பது தெரியவில்லையா? அவர்கள் இராணுவங்களை எவ்வளவு காலம் வைத்துக் கொள்ளப் போகிறார்களோ தெரியவில்லை. பெடரல் ஆட்சி ஏற்படு முன் சுமார் 108 முக்கிய இராஜ்யங்களில் ஏற்பட்ட உடன்படிக்கைகளைப் பரிசோதிக்க எத்தனை பேர் வேண்டுமோ, எவ்வளவு காலஞ் செல்லுமோ? இதற்காக வட்டமேஜை ஒத்தி வைக்க ஏற்படும். இந்தியாவுக்கு குடியேற்ற நாட்டு அந்தஸ்து உடனே கிடைக்க வேண்டுமென்று தொடை தட்டிச் சென்றவர்களின் கெதி என்னவாகுமோ தெரியவில்லை. வட்டமேஜை ஒத்திவைக்கப் பட்டால்—முறிவடைந்தால்—இந்தியாவின் விரோதிகளான லார்டு ரீடிங், சர்ச்சில் முதலியவர்கள் தங்கள் எண்ணம் முடிவடைந்ததற்கு எவ்வளவோ குதூகலத்துடன் கொக்கரித்துக் கூவுவார்களென்பதையும், அதனால் தாங்களடையும் கேவலத்தையும் இந்தியப் பிரதிநிதிகள் என்று சொல்லப்படுவோர்கள் அறிவார்களா? இந்தியாவுக்கு எவ்வித அரசுரிமை வேண்டுமென்று அதிகாரம் பொருந்தி கேட்பவர், கட்டளையிட்டு ஜெயக் கொடி நாட்டிய மகாத்மா காந்தியே யன்றி வேறொருவரும் அருகரல்லவென்றுவது உணர்வார்களா?

ஆசிரியக் குறிப்புகள்

அறிக்கை

"பாரதி"யை மற்றப் பத்திரிகைகள் எவ்வாறு மதித்திருக்கின்றன என்பதைப் பற்றி அறிவிக்கும் பொருட்டுச் சில பத்திரிகைகளின் அபிப்பிராயங்களை மட்டும் முதலில் வெளியிட்டிருக்கிறோம். சில பத்திரிகைகளின் அபிப்பிராயங்கள் சார்யாலத்திலிருந்து தவறிவிட்டன. "பாரதி"யைப் பற்றி அறிஞர்களுடைய அபிப்பிராயங்களையெல்லாம் திரட்டி அறிவிப்பதென்றால் ஒரு புஸ்தகமாகி விடும் என்று பயப்படுகிறோம். இவ்வளவு உயர்ந்த பத்திரிகையாயிருந்தும் தமிழ் நாடு இதைத் தக்கபடி ஆதரிக்கவில்லையென்று வருந்தாதிருக்க முடியவில்லை.

ஸ்வாமி சிரத்தானந்தர்

ஸ்வாமி சிரத்தானந்தரவர்களைப் பற்றிக் கேட்டிராத இந்தியர்களே இருக்க மாட்டார்கள். அவரது முன் பெயர் மகாத்மா முன்ஷிராம். அவர் ஒரு சிறந்த வக்கீலாயிருந்தும், தேசியக் கல்வியில் அக் காலத்தில் ஆசை கொண்டதால், லாகூரில் டி. எ. வி. காலேஜ் ஸ்தாபிக்க முயற்சியில் உழைக்க முற்பட்டார். நோக்கத்திலிருந்து டி கலாசாலை சற்று விலகுவதைக் கண்டு தன்னந்தனியே யோசித்து ஹிமயமலை அடிவாரத்தில் ஹரித்துவாரத்தில் ஒரு குருகுலம் பண்டைக்கால முறையைத் தழுவி நிருவினார். அது இன்று எவ்வளவோ வளர்ச்சி பெற்று விளங்குகிறது. இந்தியாவில் சிரத்தானந்த ஸ்வாமியாரது ஹரித்துவார குருகுலமும் தாகூர் கவிச் சக்கிரவர்த்தியின் சாந்தி நிகேதனமும் முதன்மை பெற்று உலகம் மதிக்கும்படியாக இருக்கின்றன.

கவிஞர் தாகூரது ஜென்ம தினச் செய்தி

இந்தியாவில் ரசாயன சாஸ்திரத்திற்கு டாக்டர், பி. ஸி. ராய் எப்படியோ, சாஸ்திரீயத்திற்கு அறிஞர் ராமன் எப்படியோ,

தாவர சாஸ்திரத்திற்கு போஸ் எப்படியோ, தத்துவ சாஸ்திரத்திற்குப் பண்டிதர். ராதா கிருஷ்ணன் எப்படியோ, கணித்திற்குக் காலஞ் சென்ற விற்பன்னர் ராமானுஜம் எப்படியோ, அப்படியே கவிதையில் பேரறிஞர் ரவீந்திர நாத தாகூர் அண்டப் புலமைப் பரிசு பெற்று, ஆசியாக் கண்டத்தின் ஆஸ்தான வித்துவானாய் விளங்கிக் கவி உலகின் சிரோன்மணியாய்ப் போற்றப் படுகிறார். காந்தி அடிகளாலும் அடுத்த படியாகத் தாகூர் அவர்களாலும் இந்தியாவுக்கு அயல் நாடுகள் இப்பொழுது இவ்வளவு மரியாதை செய்கிற தென்பதை எவர் மறுக்க முடியும்? சில நாட்களுக்கு முன்னால் கவிப் பிரபுவின் 70-வது ஜயந்தி சாந்தி நிகேதனத்தில் டாம்பீக மின்றி அமைதியாக, அழகாக, ரம்மியமாக, போற்றத் தக்க விதமாகக் கொண்டாடப்பட்ட தென்று கேட்டு அளப்பரிய ஆனந்தம் அடைகிறோம். அவருக்கு உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் ஆசிகள் வந்திருந்தன. அழகைக் கண்டு ஆனந்தித்து தனது தீவிர உணர்ச்சிகளைக் கவிகளாக வெளியிடும் பாவலர் பெருமான் தனது 70-வது ஜென்ம தினத்தின் வைபவத்தில் "என் வாழ்வின் முக்கிய கருத்து யாதெனில், இயற்கை வனப்பிலும் இயற்கைப் பாங்கிலும் காணப்படும் ஆண்டவனது ஆதியந்தமற்ற திருவிளையாட்டைச் சுய வாழ்வில் வெளிப்படுத்த முயல்வதே யாகும்" என்று தெரிவித்தார். அவர் அப்பொழுது தம் தேசத்தாருக்கு அனுப்பிய செய்தியாவது:— "வெறும் கூக்குரல் போட்டு உங்கள் சக்தியைச் செலவு செய்து விடாது, அதைச் செயலில் உபயோகியுங்கள். வந்தே மாதரத்திற்குப் பதிலாக இனி 'வந்தே பாரதம்' என்று இருக்கட்டும். தேசீயக் கொடியை வேகமாய்ப் பறக்க விடுவதாலோ, நீங்கள் கட்டாயம் நூற்க வேண்டிய நூலைச் சர்க்காவில் நூற்பதாலோ, சுயராஜ்யம் கிடைத்துவிடப் போவதில்லை. பாமர மக்களினிடையில் நிர்மாண வேலை செய்வதாலும் நாட்டினர்க்கு நற்றொண்டு புரிவதாலுமே நீங்கள் அதை எய்தலாம்."

இவ்வாறு இவர் கூறுவதை வேறு வகையாய் நினைக்கக் கூடாது. உணர்ச்சிகளை வீணாகச் செலவளிக்காதிருக்கப் புத்தி புகட்டுகிறார். மகாத்மா அழகில் உண்மையைக் காண்கிறார்;

கவிஞரோ உண்மையில் அழகைக் காண்கிறார். மனிதர் இக் காலத்தில் இயற்கையை மறந்து இன்பமிழந்து நிலை தடுமாறித் துன்ப வாழ்வு வாழ்கின்றார்கள். "எந் நாளும் இன்பமே யன்றித் துன்பமில்லை" என்ற நமது தமிழ் ஞானியின் வாக்கைக் கவனியுங்கள்.

கவிஞர் சிகாமணி தாகூரது சரித்திரத்தை விரைவில் தனிக் கட்டுரையாக எழுதி "பாரதி"யின் வாசகர்களுக்கு ஒரு விருந்தளிக்கப் போகின்றோம்.

சமூக மகா நாடுகள்

ஒவ்வொரு குலத்தார்கள் ஆண்டு தோறும் மகாநாடு கூட்டுகிறார்கள். இது நல்ல காரியமே; ஒற்றுமைக்கு நல்ல வழியே. தங்கள் தங்கள் ஜாதிகளிலிருக்கும் குற்றங் குறைகளைக் கண்டறிந்து அவைகளை நீக்க வழி தேடல் வேண்டும். சில்லரையான வித்தியாசங்களை யெல்லாம் அகற்றி சமூகத்தைப் பலப்படுத்தச் சமூகத் தலைவர்கள் தீவிரமாக முயற்சிக்க வேண்டும். இலட்சக் கணக்கான பேர்கள் ஒரு சமூகத்தில் கல்வி யில்லாதிருக்கும் பொழுது, அச் சாதித் தலைவர்கள் குலப் பெருமையைப் பேசுவதில் பயனென்ன? கல்வி, கைத்தொழில், பொருளாதாரம் முதலிய அபிவிருத்திகளைப் பற்றிச் சமூகப் பெரியார்கள் கவனித்து விருத்தி செய்ய வேண்டும். காலத்திற்குத் தக்கவாறு நடக்க வேண்டும். குலாபிமானிகள் தேசாபிமானத்தை மறந்து விடக் கூடாது. மரபு முன்னேற்றத்தை மட்டும் கவனித்துக் கொண்டு தேசிய வளர்ச்சிக்குத் தடை செய்யக் கூடாது. ஜாதியைக் காட்டிலும் தேசமே பெரிது. தேசாபி விருத்திக்காகவே ஜாதி என்பதை நாம் நன்கு அறிந்து கொள்ள வேண்டும்.

பாரியின் ஜயந்தி

தமிழ்த் தாயின் உண்மைப் புதல்வன்—தர்ம வீரன்—ஈரத் தமிழன்—அளவற்ற கொடையால் தமிழை வளர்த்த வள்ளல்—தாவரங்களுக்கும் இரங்கும் கருணையின் வடிவு—புலவர் பெருமான் கபிலரது நேசன்—பாரி என்பவரைத் தமிழகம் நன்கு போற்றல் வேண்டும். ஆங்கிலர்கள் ஷேக்ஸ்பியரை எவ்வாறு கொண்டாடுகிறார்கள்.

மற்றுமுள்ள கவிகளையும் போராசிரியர்களையும் எவ்வாறு பதியைப் படுத்துகிறார்கள். தமிழ் நாடு, பாரதியாரை ஆதரிக்காது அவரைக் கொன்றது. திருவள்ளுவர் திருநாளைக் கவனிக்கிறோமா? பாரதி யாரது பெருநாளைப் போற்றுகிறோமா? இது தமிழருக்குத் தருமமா?

இனிமேலேனும் தமிழர்கள் விழிக்க வேண்டும். இந்த வைகாசி 18உ (31—5—31) யன்று பாரித் திருநாள் வருகின்றது. அப் பெருநாளை ஒவ்வொரு கிராமத்திலும் பட்டினத்திலும் இந் நன் நாளைக் கொண்டாட வேண்டுகிறோம். இன்று தமிழ் மக்கள் பாரியை நினைக்க வேண்டும்; பாரியின் கொடையைச் சிந்திக்க வேண்டும்; பாரியின் இரக்கத்தை நோக்க வேண்டும்; தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த பாரியின் வாழ்க்கையைக் கவனிக்க வேண்டும். தமிழன் ஒருவன் உலகத்தில் இருக்கும் பரியந்தம் பாரி நாமம் பிரகாசித்துக் கொண்டே யிருக்கும். பாரி யின் நினைவு தமிழகத்தில் வளர்வதாக!

ரிக்ஷா வண்டி இழுப்பவர்கள்

ரிக்ஷா வண்டி வேண்டுமா, வேண்டாமா என்று இங்கு நாம் ஆராய்வதற்கு முன் வரவில்லை. படித்த இரு பங்காள வாலிபர்கள் ரிக்ஷா வண்டி இழுப்பதைத் தங்கள் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள் என்று அறிகிறோம். இவர்களின் சுய நம்பிக்கையும் சுய தைரியமும் போற்றற்குரியது. குமஸ்தா வேலைகளுக்காகக் காரியாலயங்களின் வாயிற்படிகளில் வீணாகக் காத்துக் கொண்டிருப்பதற்குப் பதிலாக இவர்கள் இவ்வாறு தேகப் பிரயாசைப்பட்டுப் பிழைக்க ஆரம்பித்திருக்கிறதைப் போற்றுகிறோம். தேகத்தினால் வேலை செய்வது கேவலம் என்ற பைத்தியம் நமது நாட்டை விட்டு அகல வேண்டும். குமஸ்தா வேலைகளுக்காகத் திண்டாடித் தெருவில் நின்று சீரழியும் கல்வி கற்ற வாலிபர்கள், இந்த ரிக்ஷா வண்டி யுவர்களைப் பின்பற்ற வேண்டும். உழைப்பு தெய்வீகத் தன்மை பொருந்தியது என்ற உணர்ச்சி இந்தியாவில் ஓங்கி வளர வேண்டும். அமெரிக்காவின் ஜனாதிபதிகளான ஆப்ரகாம் லிங்கன், ஜெனரல் கார்பீல்ட், இன்னும் அறிஞர் பெஞ்சமின்



ரவீந்திரநாத் தாகூர்

அவசரமான வேண்டுகோளை நமது சர்க்காரும் தனவந்தர்களும் கவனித்து வேண்டியவைகளைச் செய்ய வேண்டுகிறோம். பங்களூர் டாடா ஆராய்ச்சி நிலயத்தில் அறிஞர் ஸர். ஸி. வி. ராமன் அவர்களும் சமீப காலத்தில் ஒரு டைரெக்டராக நியமிக்கப்பட்டிருப்பதை அறிந்து மகிழ்ச்சி யடைகிறோம்.

நோபெல் வெகுமதி

உலகத்தின் ஜனத் தொகையில் இந்தியா 5ல் ஒரு பங்கு. கடந்த பல வருடங்களாகப் பிரகிருதி சாஸ்திர ஆராய்ச்சிக்காக அளிக்கப்பட்ட 30 நோபெல் வெகுமதிகளில் இந்தியாவுக்கு 6 கிடைத்திருக்க வேண்டும். நமது நாடு சாஸ்திரத்தில் பின்னடைந்திருப்பதே இதற்குக் காரணம். தாவர சாஸ்திரத்தில் நிபுணரா யிருக்கும் ஸர். ஜகதீச சந்திர போஸுக்கும், ரசாயன சாஸ்திரத்தில் விற்பன்னரா யிருக்கும் பண்டிதர். பி. ஸி. ராய் அவர்களுக்கும் கொடுத்திருக்க வேண்டும். இவற்றிற் கெல்லாம் மேலாக, உலக சமாதானத்தை நிலை நிறுத்தும் விஷயத்தில் அற்புத சாதனத்தைக் கண்டு பிடித்திருக்கும் மகாத்மா காந்தி அடிகளுக்கு ஒரு நோபெல் பரிசு கிடைத்திருக்க வேண்டும். இதில் நோபெல் பரிசு சபையார் தவறி விட்டார்க ளென்றே சொல்ல வேண்டும். இனியேனும் கவனிப்பார்களாக. நமக்குச் சுயராஜ்யமிருந்தால் இப்படி இருக்காது. சரித்திரம் வேறு விதமாக இருக்கும்.

கே. டி. பால்

ஸ்ரீமான். கனகராயன் பால் ஒரு இந்தியக் கிறிஸ்தவர். உபாத்தியாயராய் இருந்தவர். தமிழிலும் இவருக்கு ஆர்வம் அதிகம் உண்டு. வாலிபக் கிறிஸ்தவர்களின் (Y. M. C. A.) சங்கத்திற்காக இவர் அதிகமாக வேலை செய்ததால், இவர் இலங்கை, பர்மா, இந்தியா ஆகிய இடங்களிலுள்ள கிறிஸ்தவ வாலிப சங்கங்களுக் கெல்லாம் பொதுக் காரியதரிசியாக விளங்கினார். இந்தியக் கிறிஸ்தவர்களுடைய முன்னேற்றத்திற்காகவும் அதிகமாய்ப் பாடுபட்டார். கிறிஸ்து மதத்தை நிலை நாட்டிய கிறிஸ்துநாதரும் ஆசியாக் கண்டத்தவரே யென்று நினைத்து, இந்தியக் கலைகளும் கிறிஸ்தவர்களுடைய வளர்ச்சிக்கு அவசியம் வேண்டு மெனப் போற்றினார். வட்டமேஜை மகா நாட்டிற்கு இந்தியக் கிறிஸ்தவர்களின் பிரதி நிதியாக லண்டன் சென்றார். அங்கிருந்து வந்த பிறகு வியாதி யுற்று அவர் காலங் கடந்து விட்டாரென்று அறிந்து விசனிக்கிறோம். இந்தியா வெங்கும் புகழ் பெற்ற ஒரு தமிழக் கிறிஸ்தவர் மறைந்தார். அவருடைய ஆத்மா சாந்தி அடைவதாக.

காங்கிரஸ் நிர்வாக சபை

கராச்சியில் சமீபத்தில் கூடிய அகில இந்திய தேசீய மகா நாட்டில் இந்த வருடம் காங்கிரஸ் நிர்வாகத்தில் தமிழர் ஒருவரையுமே அங்கத்தினராகத் தெரிந்தெடுக்க வில்லை. தமிழ் நாட்டில் பற்றியெரியும் ஜாதிப் பிணக்கால் தமிழர் அங்கு மதிக்கப்பட வில்லையோ என்று சந்தேகப்பட வேண்டி யிருக்கிறது. சென்னை மாகாணம் கவனிக்காமல் விடப்பட்டது. மகாத்மாவுக்குத் தளகர்த்தர்கள் போன்றிருக்கும் அநேகம் தலைவர்கள் வேலைக் கமிட்டியில் சேர்க்கப்பட வில்லை. இது மிகவும் தென்னிந்தியாவுக்கு அவமானந் தருவதாயிருக்கிறது. தமிழ் மக்கள் இதை நன்கு உணர்ந்து சீக்கிரத்தில் இதைத் திருத்த வேண்டியது மிக மிக அவஸ்யமாகும்.

தலைவர்களுக்கு ஒரு வார்த்தை. பம்பாயும் கல்கத்தாவும் தனி மாகாணமாக வைத்துக் கொண்டால் காங்கிரஸில் 21 மாகாணங்கள் இருக்கின்றன. இந்த மாகாணங்கள் ஒவ்வொன்றுக்கும் பிரதிநிதி வேண்டாமா? இந்த 21 மாகாணங்களுக்கும் 15 அங்கத்தினர்கள் மட்டும் எடுத்தால் போதுமா? பிரதிநிதித்வம் கிடைக்காத மாகாணங்களின் நிலைமை என்ன? சில மாகாணங்களுக்கு மட்டும் இரண்டு அங்கத்தினர்கள் கொடுப்பதேன்? 12 மாகாணங்களுக்கு என் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வில்லை. இதில் ஸ்ரீமான்கள் இராஜகோபாலாச்சாரியார், பட்டாபி சீதாராமய்யா, பண்டித மாளவியா, சுபாஸ் சந்திரவசு போன்றவர்கள் சேர்க்கப்பட வில்லை. இவைகளை யெல்லாம் காங்கிரஸ் இனிமேலேனும் கவனித்து நடக்குமா?

மணியின் மறைவு

பச்சையப்பன் காலேஜ் பண்டிதரும் "திராவிடன்" கௌரவ ஆசிரியருமான மணிமங்கலம் திருநாவுக்கரசு முதலியார் ஆண்டவன் அடியை அடைந்தா ரென்று அறிந்து துக்கமடைகிறோம். அவர் தமிழை ஒழுங்காய்க் கற்றவர். நல்ல தமிழ்ப் பண்டிதர். தமிழில் உயர்தரப் பிரசங்கி. நாவன்மையுடன் கைவன்மையிலும் தேர்ந்தவர். சீர்திருத்தங்களில் அதிக ஆவலுள்ளவர். தமிழரியக்கம் ஒன்று தோற்றுவிக்க வேண்டுமென பாடுபட்டவர். தமிழ் மொழி வளர்ச்சிக்காக அதிகம் உழைத்தவர். அவரது பிரிவால் தமிழ் மக்கள் ஒரு நல்ல மொழித் தொண்டரையும் மாணவர்கள் ஒரு பெரும் ஆசிரியரையும் பச்சையப்பன் கல்லூரியார்கள் ஒரு மணியையும் சென்னைமாநகர் வாசிகள் ஒரு பிரசங்கியையும் தமிழ்ப் பத்திராதிப உலகம் ஒரு பத்திரிகாசிரியரையும் இழந்து விட்டது. அவரது ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

உருது பாஷை

உருது பாஷை ஒரு ஜாதியார்களுக்கோ, ஒரு மதத்தினர்களுக்கோ சொந்தமன்று. இதன் அபிவிருத்திக்கு இந்துக்களும் எவ்வளவோ உழைத்திருக்கிறார்கள்; உதவி யிருக்கிறார்கள். உருது பாஷையை இந்துக்களும் ஆவலுடன் படிக்கிறார்கள்; போற்றுகிறார்கள். இந்திய நாட்டிலுள்ளவைகளெல்லாம் இந்தியரனைவருக்கும் சொந்தமே.

தேசபக்தர் சிதம்பரம் பிள்ளை

இவரைப் பற்றித் தமிழ்நாடு நன்கறியும். அறிமுகம் செய்யத் தேவையில்லை. சுதேசி இயக்கம் நமது நாட்டில் கொழுந்து விட்டெரியும் காலத்தில், தமிழ் நாட்டின் முன்னின்று இந்த இயக்கத்திற்கு ஆதரவு அளித்தவர் ஸ்ரீமான். சிதம்பரம் பிள்ளை அவர்களே. தேசாபிவிருத்திக்காகக் கப்பல் தொழிலில் தலைப்பட்டு, சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியைத் தூத்துக்குடியில் ஸ்தாபித்து வேலை செய்தார். இக் காலத்தில் பலவித பலத்துடனிருக்கும் இந்தியாது "சிந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி"யே மிகுந்த கஷ்டத்திற்கும் போட்டிக்குமுள்ளா யிருக்கும் பொழுது, அக் காலத்தில் "சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி"க்கு என்ன எவ்வளவு கஷ்டமோ நஷ்டமோ? அதிகார வர்க்கத்தின் கோபத்திற்கு ஆளாகி அளவற்ற துன்பங்களை அடைந்தார் நமது பிள்ளை யவர்கள். தேசம் சரியானபடி ஆதரிக்காத படியால் அவருடைய மனமே தேசீயத்தில் ஒடிந்து விட்டது.

நெடுங்காலமாக அவர் திருக்குறளுக்குப் புதிய உரை எழுதிக் கொண்டிருந்ததை இதுபோது அவர் வெளிக்குக் கொண்டு வந்திருக்கிறார். சந்தோஷம். தமிழ் நாடு அவரின் உயரிய உழைப்பை—மொழித் தொண்டை அதிகம் ஆதரிக்குமாக. தமிழ் வேதம் என்னும் திருக்குறள், தமிழ் நாடெங்கும் வீடுகள் தோறும் மணக்க விரும்புகிறோம். ஒவ்வொரு மாணவர் கையிலும் இது கைப் புஸ்தகமாய்—தினசரி வாசிப்பு நூலாக இருக்கப் பிரியப்படுகிறோம். கிறிஸ்தவர்கள் பைபிளை எப்படி வினியோகிக்கிறார்களோ, அப்படியே இதைத் தமிழபிமானிகள் செய்ய வேண்டுகிறோம். இதைத் தனவைசியமணிகள் கவனிக்க வேண்டும். தமிழ்நாடு இவருக்கு ஆதரவு அளித்தால், இவரது உயரிய பேனா முனையிலிருந்து அநேக அரிய நூல்கள் வெளியே புறப்படும்.

பாதிரிகளின் சீற்றம்

காந்தி அடிகளின் கருத்தை பாதிரிமார்கள் மீண்டும் கவனிக்க வேண்டுகிறோம். கிறிஸ்துநாதரைப் பின்பற்றி அவரது மலைப்

பிரசங்கத்தைப் போற்றிக் கிறிஸ்து போல் வாழும் மகாத்மா காந்தி மீது, பாதிரிகள் கோபம் கொள்ளக் காரணமே யில்லை. குற்றங்களின் மீது அவருக்கு வெறுப்பே யன்றி, எந்த மானிடர் மீதும் வெறுப்பில்லை. "இந்தியா கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டுமானால், நாங்கள் என்ன செய்ய வேண்டும்" என்று சில கிறிஸ்தவ ஊழியர்கள் இலங்கையில் ஒரு கூட்டத்தில் காந்தி யடிகளைக் கேட்க, "கிறிஸ்துவைப் போல ஜீவியுங்கள்; மலைப் பிரசங்கத்தின் படி நடவுங்கள்" என்று பதில் அளித்தார். நமது நாட்டுக்கு வந்து கிறிஸ்து மதப் பிரச்சார வேலை செய்ய விரும்பிய ஒரு ஆங்கில வாலிபனுக்கு ரவீந்திரநாத் தாகூர் எழுதியதாவது:— எங்கள் தேசத்தில் கிறிஸ்து போல் ஜீவிக்க உமக்கு ஆசையுண்டானால், சந்தோஷமாய் வரலாம். ஆனால் எங்களுக்குப் போதிக்க மட்டும் வருவதா யிருந்தால், வரவேண்டாம்" என்ற உயர்ந்த கருத்துக்கள் நிரம்பிய சுருங்கிய மணிவாசகத்தைக் கவனிப்பார்களாக. வீணாகக் கோபமடைந்த பாதிரிகள், காந்தி அடிகளின் கருத்துக்களை அறிந்து அவர் மீது கொண்ட தங்களுடைய தவறுதலான அபிப்பிராயங்களை மாற்றிக் கொள்வார்களாக.

அடுத்த போருக்குத் தயாரா யிருக்க வேண்டும்

காந்தி அடிகள் லண்டன் சென்று ஜெயத்துடன் திரும்பி வருவாரென்பது என்ன நிட்சயம்? நம்முடைய ஒற்றுமையால் தான், கிளர்ச்சியால்தான் காந்தி யடிகள் தைரியத்துடன் வேலை செய்வார். அடுத்த போருக்குத் தேசீயத் தொண்டர்கள் இப்பொழுதிருந்து தயாரா யிருக்க வேண்டுகிறோம்.

நீகிரோவர்களுக்கு அநீதி

அமெரிக்காவில் அடிமையா யிருந்த நீகிரோவர்களுக்கு ஆப்ரகாம் லிங்கனுடைய ஜனாதிபத்திய காலத்தில்தான் சுதந்திரம் கிடைத்தது. தோலுரித்தும், சுட்டும், வெட்டியும், சித்திரவதை செய்தும், எரித்தும், கொள்ளையடித்தும் இன்னும் எத்தனையோ வழிகளில் கணக்கற்ற துன்பங்களை அமெரிக்கர்கள் செய்திருக்கிறார்கள். ஐக்கிய மாகாணத்தில் 10ல் 1 பங்கு இருந்தும் அவர்கள் கல்வி கற்றிருந்தும், இந்த நீகிரோவர்களை வெள்ளையர்கள் தாழ்த்தியே நடத்துகிறார்கள். அச் சர்க்காரும் பார்த்துக் கொண்டே மௌனமாக இருக்கிறது. கருப்பு நிறத்தவர்களை வேரறுக்க அங்கே ஒரு சங்கம் தோன்றி யிருக்கிறது. அமெரிக்கா வெள்ளையர்கள் நாகரிகமுற்றவர்களா? மனிதர்களை மனிதர்கள் எரித்து அந்தக் கொடுமையைப் பார்த்து மகிழ்பவர்கள் மக்கள்தாமோ? சமீப காலத்தில் அமெரிக்கா மிஸ்ஸோரியில் ஒரு நீகிரோவனை உயிருடன் கட்டித் தீயிட்டு

எரித்துக் கொன்று மகிழ்ந்ததை அறிய எமது உள்ளம் ஆடுகிறது. இதுதான் அமெரிக்க நாகரீகம் போலும். இதுதான் கிறிஸ்து மதத்தாரின் செயல் போலும். என்ன நிறவேற்றுமை! ஜன நாயகத்தில் ஞானம் நிரம்பிய அமெரிக்கா இவ்வாறு நிற பேதத்திற்குக் கொடுமை செய்யுமானால், உலகத்தில் மற்றவர்களைப் பற்றிக் கூற அமெரிக்காவுக்கு வாய் ஏது? நீகிரோவர்கள் அமெரிக்காவையே தாய் நாடாகக் கொண்டவர்கள். ஆர்ம்ஸட்ராங், புக்கர் வாஷிங்டன் ஆகிய இருவர்களால் நிறுவப் பெற்ற கலாசாலைகளில் கணக்கற்ற நீகிரோவர்கள் படித்து முன்னேறி யிருக்கிறார்கள். கல்வியாலோ நாகரீகத்தாலோ குறைந்தவர்களென்று அவர்களைத் தாழ்த்தி நடத்துவது பாதகமாகும். நீகிரோவர்களுக்கு பிரஜா உரிமைகளைச் சரியாய் அளித்து சமத்துவமாய் நீதி வழங்க வேண்டும். வெள்ளையருக்கும் கருப்பருக்கும் வெவ்வேறு விதமான சட்டம், நீதி கூடவே கூடாது. பிரஞ்சு அரசாங்க சபையில் ஒரு நீகிரோ மந்திரியாக நியமிக்கப்பட் டிருக்கிறார். நீகிரோ வாலிபர்கள் இனி விழித்துக் கொண்டார்கள். அவர்களை அநியாயமாய் அமெரிக்கா அடக்கி யாள முடியாது. நாகரீக உலகமும் அமெரிக்கரின் அநீதத்தைப் பொருத்துக் கொண்டிருக்க மாட்டாது. இவ் விஷயம் இப்படி நடந்து கொண்டு போனால் உலகில் நிறப் போர் பெரிதாய் நடக்குமென்று எச்சரிக்கிறோம்.

ஏன் அனுமதி மறுப்பு?

அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் தேசப் பிரஷ்டர்களாக வாழும் ஸ்ரீமான். சைலேந்திரநாத கோஷ் போன்றார்களுக்கு இந்தியாவுக்கு வர இந்தியச் சர்க்கார் அனுமதி கொடுக்க மறுக்கிறது. காந்தி—இர்வின் சமரசத்தால் சர்க்காரின் மனம் மாறவே யில்லை. ஐயோ! என்ன பாடுபட்டு டாக்டர். சுதீந்திர போஸ் அமெரிக்காவிலிருந்து இங்கு வந்தார். தேச பக்தியின் காரணமாக எத்தனையோ இந்திய வாலிபர்கள் அயல் நாடுகளில் அலைந்து திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சர்க்காருக்கு என்றுதான் மனம் வருமோ? இந்தியாவுக்கு என்றுதான் சுதந்திரமோ? அவர்களுக்கு என்றுதான் விமோசனமோ?

பண்டித ஜவஹரிலால் நேரு

இலங்கைக்குத் தமது குடும்பத்துடன் விஜயம் செய்து இலங்கை வாசிகளுக்குத் தீவிர உணர்ச்சியை உண்டாக்கியிருக்கிறார். ஆங்கில ஆட்சியில் அடிமைபட்டு உறங்கிக் கிடக்கும் அந் நாட்டாருடைய சக்திகளைத் தட்டித் தட்டி எழுப்பியிருக்கிறார். இலங்கையின் போக்கும் மனமும் இனி வேறு விதமா யிருக்கும். இப்

பொழுது பண்டிதர்— ஜனத் தலைவர் நமது தமிழ் நாட்டில் பிரயாணம் செய்துகொண் டிருக்கிறார். அவருக்கு அன்புடன் நல் வரவு கூறுகின்றோம். இளங்கோ— இளஞ் சிங்கம்— நேரு பெருமகனார் தமிழர்களுக்குத் தக்கபடி புத்தி புகட்டி, சாதிச் சண்டைகளை அறவே அகற்றி, அடிமைப் புத்தியைத் தொலைத்து, தேசாபிமானத்தை நிறைத்துத் தமிழரைப் பண்டை வீரத் தமிழராக்கிச் செல்வாரென்றே நினைக்கிறோம். தமிழ் நாட்டில் சாதிக் கொடுமைகள் மிகுந்து தணல்விட்டு எரிகிறது. பண்டிதர் இதைக் கவனித்து இதை அகற்ற வேண்டுகிறோம். தமிழருக்குப் புத்துணர்ச்சியை அளிப்பாரென்பதே நமது நம்பிக்கை. பண்டிதர் வாழ்க வாழ்க!

வெற்றி பெறுவது ஆத்ம சக்தியா? விஷப் புகைகளா?

சைனியங்களையும் ஆயுதங்களையும் குறைத்துச் சகல நாடுகளிலும் யுத்தங்களை ஒழிக்க வேண்டுமெனச் சர்வ தேச சங்கத்தில் தீர்மானமாகி யிருக்கிற தென்றாலும், இதைப் பற்றிப் பிரச்சாரம் நடந்துகொண் டிருக்கிற தென்றாலும், வல்லரசுகள் மண்ணாசை கொண்டு ஆயுதங்களையும், ஆராய்ச்சிகளினால் ஆயிரக் கணக்கான கொடிய விஷப் புகைகளையும், யுத்த டாங்கிகளையும் (தரையிலும் யுத்தம் நடத்தும் கப்பல்), தானாகப் பறக்கும் விமானங்களையும், விஷப் புகை வாணங்களையும், விஷக் கதிர்களையும் கண்டு பிடித்துச் சேகரித்துக் கொண் டிருக்கின்றன. வருங் காலத்தில் யுத்தம் நடக்குமாயின். எத்தனையோ மக்கள் மாளுவது திண்ணம். மகா யுத்தத்திற்குப் பிறகு ராணுவங்களும் ஆயுதங்களும் குறைந்தும், ரசாயன ஆராய்ச்சி மட்டும் தீய வழிக்கு வளர்ந்து கொண்டே வருகிறது.

ஐரோப்பிய நாகரீகம் பல கோடி மக்களுக்கு மரணத்தையே கொடுத்தது. போரில் மாண்டவர்களின் சமாதிகள் மற்றவர்களுக்கு எச்சரிக்கை செய்துகொண் டிருக்கின்றன. சென்ற மகா யுத்தத்திற்குப் பின்னாவது ஐரோப்பாவிற்குப் புத்தி வந்திருக்க வேண்டும். இந்த ஐரோப்பிய அமெரிக்க யுத்தக் கருவிகளுக்கு முன்னால் ஏழை இந்தியா என்ன செய்யப் போகிறது? அரை நிர்வாணத்துட னிருக்கும் ஒரு சிறு மனிதராம் காந்தி அடிகளால் உபதேசிக்கப்பட்டு, 35 கோடி மக்களின் இருதயத்திலிருந்து எழும் ஆத்மீக சக்தி, மிருக பலங் கொண்டு உலகத்தாரெல்லோரும் கிளம்பி வந்தாலும் அடக்கி விடும். அன்பை— சத்தியத்தை—உறுதியை—தியாகத்தை, மிருக சக்தி ஜெயிக்கவே ஜெயிக்காது. வருங்கால உலகப் போராட்டத்தில் இந்தியாவே உலகத்தாருக்கு உண்மை வழி காட்டப் போகிறது. இப்படிச் செய்வது இந்தியாவின் கடமையாகும்.

பிரதிநிதி வேணுகோபாலின் படு மோசம்

சென்ற 1930 வரு மேமீ மலேயா முதலிய வெளி நாடுகளுக்கு "பாரதி"க்குச் சந்தா சேர்ப்பதற்காகச் சென்ற நமது "பாரதி"யின் பிரதிநிதி R. வேணுகோபாலைப் பற்றி இங்கு இவ்விதம் எழுதச் சந்தர்ப்பம் நேரிட்டிருக்கிறது பற்றி மிக மிக வருந்துகின்றோம். இவ்விதம் நேரிடு மென்பதை அறியாது நம்பிக்கை கொண்டனுப்பிய நமக்கு, அன்னவர் செய்தவற்றை வாசகர் தெரிந்து கொள்ள நாம் அறிவிப்பது கடமையும் மற்றப் பத்திரிகாசிரியர்களுக்கும் பொது ஜனங்களுக்கும் ஓர் நலமு மாகுமென வெண்ணி எழுதுகின்றோம்.

தமிழ் நாட்டிலே வர்த்தமானப் பத்திரிகைகளின் வளர்ச்சியைப் பற்றிச் சொல்ல வேண்டியதே யில்லை. அதனைப் பற்றி ஒவ்வொருவரும் நன்கறிந்ததே. அதிலும் தேசியப் பத்திரிகை யென்றாலோ சொல்லத் தேவையில்லை. எத்தனையோ துன்பம், கஷ்டம், நஷ்டம் ஆகிய இவைகளைப் பொறுமையுடன் தாங்கித் தப்பித் தவறி வீரிட்டெழும் பத்திரிகையைக் குப்பையிற் கிடந்த குண்டுமணி யென மதித்துப் போற்றி வளர்ப்பார் ஒரு சிலரே. இவர்களின் உதவியாலேயே நிலைமையை ஒவ்வொரு சமயமும் கடத்தித் தனது நோக்கத்தையும் தொண்டையும் சாதித்து வருகின்றது. கொண்ட கொள்கையில் மாற்ற மில்லாது தொண்டில் உறுதியுள்ள பத்திரிகையை ஆங்காங்கு நாட்டில் அன்பும் ஆதரவும் காட்டுவது போலவே வெளி நாட்டிலுள்ள சகோதரர்களும் ஆவலுடனும் ஆர்வத்துடனும் வரவேற்பதாயிருக்கின்றனர். நமது பிரதிநிதி சிங்கப்பூர் மலேயா நாட்டில் சென்ற காலையில், அச் சகோதரர்கள் "பாரதி"யினிடம் காட்டிய அன்பை, நாம் தேசியப் போரில் அதுகாலை அதி தீவிரமாக ஈடுபட்டிருந்தேமாயினும் அறியக் கூடாமலில்லை. அவர்கள் "பாரதி"க்குக் காட்டிய அன்பைப் பூரணமாக, அப் பிரதிநிதியால் அறியு முன்பே நமக்குச் சிறைச்சாலைக்குச் செல்ல அழைப்பு வந்து, சென்று விட்டோமாகையினால், முழுதும் தெரிந்து கொள்ள முடியாமற் போனதிற்குச் சிறிது வருந்தியது முண்டு. நிற்க.

பிரதிநிதி வேணுகோபால் இங்கிருந்து சென்ற சில நாட்களில் 300-க்கு மேலான சந்தா நேயர்களைச் சேர்த்திருக்கிறதாகத் தெரிந்தது. இவ்வளவு விரைவில் இத்தனைச் சந்தாதார்களைச் சேர்த்ததிற்கு அங்குள்ள அன்பர்களின் துணைவலி யென்பதை நன்கு அறிய முடிகிறது. நாம் இதுசமயம் சிறைக்குச் செல்லாம லிருந்திருப்பின், ஆயிரக் கணக்கான அன்பர்கள் "பாரதி"யின் சந்தாதார்களா யிருந்திருப்பார்கள் என்றே சொல்லத் துணிகின்றோம். ஆனால், தேசத் தொண்டே பத்திரிகைத் தொண்டென மதித்த நாம், நாமிருந்தாலும் இல்லாவிட்

டாலும் பத்திரிகைக்குத் தடையில்லை யென்று எண்ணியதாலேயே அவ்விதம் செல்ல நேர்ந்தது. அதன் பயனாகவே பத்திரிகைக்குக் கஷ்டமும் பிற துன்பங்களும் நஷ்டமும் ஒருங்கே சம்பவிக்கலாயிற்று. போதாக்குறைக்கு, நம்பிக்கையுள்ள ஏஜெண்டுகளும் பிரதிநிதிகளும் மோசம் செய்யத் தலைப்பட்டுப் பணத்திற்கு அடிமையாகித் துரோகஞ் செய்ததை நினைக்குங்கால் நமது வருத்தம் எல்லையற்றுப் போகின்றது.

சிங்கப்பூரிலும் மலேயாவிலும் சந்தா சேர்த்த பிரதிநிதி வேணுகோபால், நாம் சிறை சென்றவுடன் எவ்விதக் கருத்துக் கொண்டு வசூலித்த பணத்தை அனுப்பாது சாக்குப் போக்குச் சொல்லி வந்தாரென்பதைச் சிறையிலிருந்து வந்தபின் அறிந்து மனம் மிக மிக நொந்தோம். இங்கிருந்து செலவுக்குக் கொண்டு சென்ற தொகையை மட்டும் கௌரவமாக அனுப்பி விட்டாரென்றே தெரிகிறது. வசூலித்த சந்தாத் தொகையை அனுப்பாததுடன், சென்ற அக்டோபர் மாதமிருந்து கடித மெழுதுவதைக் கூட விட்டுவிட்டாரென்றறிகிறோம். கடைசியாக சிரம்பானி லிருந்து நோயா யிருக்கிறதாக 1930 அக்டோபரி லெழுதிய கடிதத்திற்கு, இங்கு உடனே புறப்பட்டு வருமாறு கடிதம் விடுத்ததிற்கும் பதிலில்லை. பின்னர் ரெஜிஸ்டர் செய்து அனுப்பிய கடிதத்திற்கும் அவ்விதமே. பணம் போனதிற்கு மட்டும் நாம் இங்குக் குறை கூறுவதாகவோ வருந்துவதாகவோ வாசகர்கள் எண்ணிவிடக் கூடாது. அநேக சந்தாதார்களிடம் பணம் வாங்கிக் கொண்டு அவர்களின் பெயரைத் தெரிவிக்காது, "பாரதி"யை இவ்வளவு கஷ்டத்திற்கும் இலக்காக்கியதுமன்றிப் பணங் கொடுத்தாரையும் ஏமாற்றி விட்டதிற்கே மிக மிக வருந்துகின்றோம். ஒரு வாலிபன் ஒரு துறையில் மோசமோ நாசமோ செய்து விடின், மறு நாள் அத்துறை பற்றிச் செல்லும் பிறனுக்கு அங்கு என்ன கிடைக்கும்? சிறிது யோசித்துப் பாருங்கள். நாட்டிலே வசதிகளை விட்டுவிட்டு மானமே பெரிதாகக் கடல் கடந்து, மரியாதையாக வாழ்க்கை நடத்தச் சென்றுள்ளாரிடத்தில், தன் தாய் நாட்டான்—அதிலும் ஓர் தமிழ் மகன்—அதுவன்றி தேசியமே கொள்கையாக விருக்கும் பத்திரிகையின் பிரதிநிதி, தன்னாட்டாரை மோசம் செய்வதாயின் என்ன எண்ணுவது? எப்படி நம்புவது? கூடாத செயல்களையும் நம்பிக்கைத் துரோகத்தையும் மோச எண்ணத்தையும் நாளும் வளர்க்கும் இவ்விதமானவர்களைத் தமிழ்த் தாய் பெற்று வாடாத நன்னாளே வேண்டும்; வேண்டும்.

தேசியத்தி லீடுபட்ட நாம், இப் பிரதிநிதியின் தவறுதலைப் பற்றி என்ன செய்வதென்ப தறியா திருக்கின்றோம். என்றாலும் அப் பிரதிநிதியினிடம் பணம் செலுத்திப் பத்திரிகை பெறாம லிருந்து வரு

நண்பர்களெல்லாம் தயவு செய்து தாங்கள் பெற்றிருக்கும் ரசீதையும் தமது விலாசத்தையும் தெளிவாக எழுதி அனுப்புமாறு விரும்புகின்றோம். கூடிய சீக்கிரம் இவர்களுக்குச் செல்ல வேண்டிய பத்திரிகைகளுக்கு முறை செய்யப்படும். அதற்குள் அப் பிரதிநிதியின் விஷயம் ஒருவாறு தெரிந்து விடலாம். தற்போது அப் பிரதிநிதி சிரம்பானில் முன்பு வசித்திருந்த தெமியாங் ரோடிலுள்ள 57 நிர். இல்லத்தில் தானிருப்பா ரென்று சொல்வதற்கில்லை. எங்கேனும் ஓர் வேலையில் அவ்வூரிலோ சமீபத்திலோ இருப்பா ரென்றே எண்ண வேண்டி யிருக்கிறது. அவரின் நடத்தையை மேலும் கண்டறிந்த பின்னரே மற்ற நடபடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகையினால் சில காலம் வாசகர்கள் முடிவான விஷயமறிய பொருத்திருப்பது அவஸ்யமாகும். மேலும் அப் பிரதிநிதியிடம் "பாரதி" சம்பந்தமான எவ்விதமான விஷயங்களும் நடத்தாதிருக்குமாறு வேண்டிக் கொள்கிறோம்.

ஸ்பெயின் குடியரசு

பண்டைப் பெருமை வாய்ந்த ஸ்பெயின் தேசம் குடி அரசாக இப்பொழுது விளங்குகிறது. முடி ஆட்சி ஒழிந்து முறையான குடி ஆட்சி உலக மெங்கும் நிலை நிற்கவேண்டு மென்பதே நமது பேரவா. அரசர் அல்பான்சோவைத் துறத்திவிட்டார்கள். திடீரென்று ஒரு நாட்டில் குடி அரசு ஏற்பட்டால், எவ்வளவோ குழப்பங்களும் குறைகளும் இருக்கும் நிலையைச் சரி செய்துகொண்டு தேசிய அறிஞர்கள் வேலை செய்யவேண்டும். ஸ்பெயின் சரித்திரத்தைக் கவனித்துப் பார்த்தால், இந்தக் குடி அரசு நிலைத்திருக்குமென்று சொல்வதற்கில்லை. சிறிது காலம் இக் குடி ஆட்சி நடக்கட்டும்.

இங்கிலாந்தில் ஜாதி அகம்பாவம்

ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் முதலிய உலகப் பிரசித்தமான சர்வ கலாசாலைகளிலுங் கூடச், சில வருடங்களுக்கு முன்பு இந்திய மாணவர்கள் சரியாய் நடத்தப்படவில்லை யென்று கேள்விப்பட்டோம். இப்பொழுது இரு இந்திய மாணவர்களை எடின்பரோவிலுள்ள ஒரு சாப்பாட்டு விடுதிக்குள் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள். அப்பால் அவர்கள் 20 வெள்ளை மாணவர்களுடன் ஒரு ஹோட்டலுக்குச் செல்ல, வெள்ளை மாணவர்களை மட்டும் உள்ளே போக அனுமதித்து இந்திய மாணவர்களைத் தடை செய்துவிட்டார்கள். வெள்ளை மாணவர்கள் உள்ளே சென்று இந்திய மாணவர்களுக்குச் செய்திருக்கும் அநீதியைப் பற்றிப் பிரசங்கம் செய்யவே, அங்கே சாப்பிட வந்திருந்தவர்கள் வெளியேறிவிட்டார்கள். இந்தியரைப் பஹிஷ்கரிக்கும் ஹோட்டல்களுக்கு எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். பெரியகுளம் தாலுகாவிலிருந்து இரு மாணவர்கள் இங்கிலாந்து சென்று கேம்பிரிட்ஜில் வாசித்துக்கொண் டிருக்கிறார்கள். அவர்களுக்கும் இம் மாதிரியான ஹோட்டல் சங்கடங்கள் ஏற்பட் டிருப்பதாக அவர்கள் வீட்டிற்கு வந்த கடிதங்கள் மூலமாய் அறிகிறோம்.

இந்திய மாணவர்களுக்கு உதவி செய்வதற்காக ஒரு உத்தியோகஸ்தர் லண்டனில் சர்க்காரால் ஏற்படுத்தப்பட் டிருக்கிறாரே, அவர் ஏன் மௌனமாக இருக்கிறார்? இந்திய வித்தியார்த்திகளுக்கு ஒத்தாசை செய்வதற்காக அங்கு இந்திய தேசிய சங்கம் (**Indian National Association**) என்று ஒரு சபை இருக்கிறதே. அது இப்பொழுது என்ன செய்து கொண் டிருக்கிறது? கல்வி கற்கப்போன மாணவர்களுக்கு இவ்விதக் கஷ்டமு மென்றால் என்ன சொல்வது?

இலங்கையில் பரீட்சைகள்

இந்தியாவி லிருக்கும் ஹைஸ்கூல் போன்ற பள்ளிகளெல்லாம் இலங்கையில் காலேஜ் என்று சொல்லப்படுகின்றன. லண்டன் மெட்ரிகுலேஷன் (**London Matric**), காம்பிரிட்ஜ் லோகல் (**Cambridge Local**) முதலிய பரீட்சைகள் இலங்கையில் நடக்கின்றன. இங்கிலாந்தில் நடைபெறும் பரீட்சைகளுக்கு இலங்கை மாணவர்கள் ஏன் தயாரிக்கப்பட வேண்டும்? இந்தப் பரீட்சைகளில் மாணாக்கர்கள் அதிகமாகத் தவறுகிறார்கள். இலங்கையாரின் நிலைமைக்கும் இங்கிலீஷ்காரரின் நிலைமைக்கும் மிகுந்த வித்தியாசம். இலங்கைக்கென தனியாகச் சர்வ கலாசாலை ஏற்பட வேண்டும் அல்லது இலங்கைக்கெனப் பள்ளிப் பரீட்சைகள் உண்டாக்க வேண்டும். தேசத்தைத் தழுவிய முறையில் குறைந்த செலவில் மாணவர்களுக்குக் கல்வி புகட்ட வேண்டுகிறோம். கேவலம் பரீட்சைகளுக்குக் கூட அயல் நாட்டாரிடம் எதிர் பார்ப்பது எவ்வளவு கேவலம்!

தாயகத்திற்கு வரும் நமது சகோதரர்கள்

ஆப்பிரிக்கா, பீஜி, டிரினிடாட், பிரிட்டிஷ் கயானா முதலிய தேசங்களிலிருந்து தாய் நாட்டுக்கு அந் நாட்டுச் சர்க்காரால் திருப்பி யனுப்பப்படும் இந்தியரின் நிலை மிக மிகப் பரிதாபம். அந் நாடுகளிலேயே பிறந்தவர்கள் அநேகர் இருக்கிறார்கள். அவர்கள் இந்தியாவை தேசப் படத்தில்தான் பார்த்திருப்பார்கள். அவர்கள் இந்தியப் பூர்வீகப் பழக்க வழக்கங்களைப் பின் பற்றுவதில் மிகவும் கஷ்டம் அடைகிறார்கள். இந்தியாவில் இனியும் வர்ணாச்சிரம தர்மம் சக்தியுட னிருப்பதால், ஒரு சமூகத்தாரோடு சேர்ந்து வாழ முடியாமல் மிகுந்த சங்கடப்படுகிறார்கள். அவர்களின் தேர்ச்சிக்குத் தகுந்த தொழில் இங்கு கிடைப்பது மிகுந்த கஷ்டமா யிருக்கிறது. அயல் நாடுகளில் விவாகம் முதலிய சம்பந்தங்கள் வைத்துக்கொண்டு இங்கு வரும் குடும்பத்தினருக்குப் பெண் கொடுக்கல் வாங்கல் முதலிய அதிகமான துன்பங்கள் இருக்கின்றன. இன்னும் பலவிதச் சிக்கல்களும் துயரங்களும் இருக்கின்றன.

இங்கிருந்து அந்த நாடுகளுக்கு அந்தந்த அரசாங்கங்களின் வேண்டுகோளின்படி சென்று, அங்கு சலியாது உழைத்து அத் தேசங்களைப் பண்படுத்தி அபார வரும்படி கொடுக்கும்படி செய்து வசித்துக்கொண் டிருக்கிறார்கள். அங்கிருக்கும் வெள்ளையர்கள் இந்தியரின் முன்னேற்றத்தைக் கண்டு மனம் பொறாமல் நன்றி யறிதல் சிறிதுகூடக் காட்டாமல் இந்தியர்களை வெறுத்துத் தள்ளுகிறார்கள். போதாக் குறைக்கு அந் நாட்டிலிருந்து இந்தியாவிற்கு விரட்டியும் விடுகிறார்கள். நமது நாட்டிற்குச்

சுதந்திரமில்லாத வரையில் நாம் இவர்களுக்குத் தக்கபடி உதவி செய்ய முடியாது. இந்தியத் தலைவர்கள் இங்கு இதற்காகக் கிளர்ச்சி செய்ய வேண்டும். ஐரோப்பியர்களும் அமெரிக்கர்களும் இன்னும் எத்தனையோ தேசத்தார்களும் இந்தியாவில் ஏக போகமாய் வாழ்கிறார்கள். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் இந்தியா ஒரு அங்கம் பெற்றிருந்தும், இதற்கு ஒரு உரிமையு மில்லை. இந்தியர்கள் மதிக்கப்பட வேண்டுமானால், நாம் விரைவில் சுயராஜ்யம் பெற வேண்டும். இதற்கு நாம் எல்லா வகைத் தியாகங்களும் செய்யத் தயாரா யிருக்க வேண்டும்.

மதுக் கடை மறியல்

காந்தி—இர்வின் ராஜிப் பேச்சினால் கள்ளு, சாராயக் கடைகளை சாத்வீக முறையில் மறியல் செய்ய இடம் கிடைத்திருக்கிறது. நமது சகோதரர்கள் பலர் குடித்துக் கெட்டுப் போகிறார்கள். இதனால் எத்தனையோ குடும்பங்கள் நாசமாய்ப் போகின்றன. இதனால் தேசத்திற்கு எவ்வளவோ கெடுதிகள். குடிகளைக் குடிக்கச் செய்து, குடி கெடுத்து அதன் மூலம் பல கோடி ரூபாய் சம்பாதித்துப் படோடோபம் செய்யும் சர்க்கார், நம்மை ஆள்கின்றது. நமது சகோதரர்களைக் காப்பது நமது வேலையாகும். மதுபானத்தைக் குடிக்கச் செய்யும் சர்க்கார் நமக்கு வேண்டாம். சாராயக் குடி வகைகளை நமது தேசத்தி லிருந்து அகற்ற வேண்டும். இப்பொழுது தேசத் தொண்டு செய்ய நல்ல தருணம். இக் காரியத்தில் போலீஸார் கிட்ட வரமாட்டார்கள். வந்தாலும் ஒன்றும் செய்யமாட்டார்கள். சாத்வீக முறையில் நாம் மறியல் வேலை நடத்த வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் மறியல் வேலை செய்ய வேண்டும். உற்சாகமுள்ள பெண்மணிகளும் அவசியம் இதில் கலந்து கொள்ள வேண்டும். வெற்றி நமது பக்கமே. நமது ஜெயத்தை உலகமே கண்டு ஆச்சர்யப்படப் போகிறது.

இலங்கையின் எழுச்சி

இலங்கை இந்தியாவுடன் சேர்க்கப்பட வேண்டிய தீவா யிருந்தாலும், இது ஆட்சியில் வேறுபட்டு இங்கிலாந்தின் நேரான ஆதீனத்தி லிருக்கிறது. இதனால், இந்தியாவின் நேசப் பான்மை இலங்கையில் குறைந்து கொண்டு வருகிறது. இலங்கை இப்பொழுது ஆங்கிலத் தோட்டக்காரர்கள் ராஜ்யமாகவே வளர்ந்துகொண் டிருக்கிறது. அரசாங்கமும் இந்தியர் மீது துவேஷத்தைப் பெருக்கிக்கொண்டே வருகிறது. டொனமூர் கமிஷன் சிபார்சுப்படி அரசினரால் இலங்கைக்கு வழங்கப்பட்டிருக்கும் சீர்திருத்தங்கள் இலங்கை வாசிகளுக்குப் பிடிக்கவில்லை. சில பாகத்தில் ஒத்துழையாமையை அனுசரித் திருக்கிறார்கள். இலங்கை வாசிகள் யாவரும் சுய நலம் காட்டாது இதனை அனுசரிக்க வேண்டுகின்றோம். நல்லதொரு சமயத்தில் தலைவர் பண்டித நேரு அவர்களும் இந்திய மாதரசி கமலா தேவி அவர்களும் அத் தீவிற்கு விஜயம் செய்து பிரசங்கமாரி பொழிந்து இலங்கையைப் பண்படுத்தி விட்டார்கள். இலங்கை யுவர்கள் பரபரப்பா யிருக்கிறார்கள். இந்தியா விடுதலை வேலையின் வாசனை இலங்கையிலும் பரிமளித்துக்கொண் டிருக்கிறது. இலங்கையின் விடுதலைப் போரில் இந்தியாவும் சகாயம் செய்யக்கூடும். இலங்கை இந்தியாவுடன் இணைக்கப்பட வேண்டும். இதற்கான வேலைகளும் செய்ய வேண்டும். இந்தியாவின் அபிவிருத்தி இலங்கையின் அபிவிருத்தி என்று இலங்கை வாசிகள் கருத வேண்டும். பாரதியின் மகளல்லவா இலங்கா தேவி.

விதேசத் துணி பகிஷ்காரம்

இந்தியாவின் செல்வம் 60 கோடி ரூபாய்க்கு மேலாய் துணிகளுக்காக அயல் நாடுகள் சென்றுகொண் டிருக்கிறது. இப் பணம் இங்கு தங்கினால், இந் நாடு எவ்வளவு செழிப்படையும்! கைத் தொழில்கள் எவ்வளவு விருத்தியாகும்! ஒரு உதாரணம் கூறுகின்றோம். கள்ளு சாராயம் குடிக்க வேண்டாமென்றும் பிராந்தி, வைன், விஸ்கி முதலியவைகளை வாங்கிக் குடியுங்கள் என்றும் திருவாங்கூர் மலைப் பக்கங்களிலிருக்கும் தோட்டக்கார ஆங்கிலர்கள் அங்கிருக்கும் இந்தியத் தொழிலாளிகளிடம் சொல்லுகிறார்கள் என்பதை அறிந்திருக்கிறோம். தங்கள் நாட்டு மதுபானங்களைக் குடிப்பதனால், தங்கள் நாட்டுக்குப் பணம் போய்ச் சேருகிற தென்பதையே கருதி ஷை தோட்டக்கார வெள்ளையர் கூறுகிறார்கள். இதைக் கவனியுங்கள்.

அவர்களின் தேசாபிமானத்தைக் கவனியுங்கள். இந்தியாவில் பலஜாதி வெள்ளையர் இருப்பினும், ஆங்கிலன் ஆங்கில சாமான்களையும், பிரஞ்சுக்காரன் பிரஞ்சுச் சாமான்களையும், ஜெர்மன் ஜெர்மனியப் பொருள்களையும், அமெரிக்கன் அமெரிக்கப் பொருள்களையும் ஆவலுடன் தேடி வாங்குகிறான். இங்கு இந்தியருடைய போக்கு வேறா யிருக்கிறது. அயல் நாட்டு நாகரீகத்தில் இந்தியா மூழ்கி விட்டது. அன்னிய சாமான் பைத்தியம் அதிகம். நமது நாடு சுதந்திரமடைய, நமது தேசம் விருத்தியடைய, நாம் நமது தேசத்தில் நம்மால் செய்யப்பட்ட பொருள்களையே வாங்க வேண்டும். இப்படிச் செய்வதே தேச பக்தி. நமது நாட்டில் விதம் விதமான ஆடைகள் இருக்கின்றன; ஏன், இந்தியர்கள் அன்னிய தேசத்து ஆடைகளை வாங்குகிறார்கள்?

தேசத் தலைவர்கள் சொல்லுவதைக் கேளுங்கள். அயல் நாட்டுத் துணிகளைப் பகிஷ்காரம் செய்யுங்கள். சாதாரண ஜனங்கள் வழக்கத்தால் மோகத்தில் அயல் நாட்டு வஸ்திரங்களை வாங்குகிறார்கள். அவர்களுக்குப் போதியுங்கள். அவர்கள் வாங்குவதை மறியுங்கள். அயல் நாட்டு ஜவுளிகளை விற்கும் கடைகளைச் சமாதானமான முறையில் அஹிம்ஸா வழியில் மறியல் செய்யுங்கள். கிராமங்கள் தோறும் பட்டினங்கள் தோறும் இந்த வேலையைச் செய்ய உடனே முற்படுங்கள்.

தொண்டர்களே! உங்களுக்கு நல்ல வேலை கிடைத்து விட்டது. தொண்டர் கூட்டத்தைத் திரட்டுங்கள். அவர்களைப் பழக்குங்கள். இந்த மறியல் வேலையைச் செய்யுங்கள். இதில் சங்கடம் ஒன்று மில்லை. இதுவே தேசியத் தர்மம்—தேச சேவை—பொது ஜனத் தொண்டு. பெண்மக்களும் இதில் ஊக்கத்துடன் உழைக்க வேண்டுகிறோம்

தாலுகா போர்டுகளின் கவனிப்பு

தாலுகா போர்டுகள் பொது நன்மைக்காக உண்டாக்கப்பட்டிருக்கின்றன. வைத்திய வசதி, கல்வி வசதி, சுகாதார வசதி முதலியவைகளை ஒருவாறு கவனித்துக் கொண்டிருக்கின்றன. புஸ்தக சாலைகள் வருங்காலத்தில் முக்கிய கல்விச் சாலைகளாகப் போகின்றன. அயல் நாட்டார்கள் இது விஷயத்தில் பிரத்தியேகமாய்க் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆரம்பப் பாடசாலைகள் ஏற்படுத்துவது போல, தாலுகா போர்டுகள் பற்பல கிராமங்களிலும் பட்டினங்களிலும் புஸ்தகசாலைகள் ஸ்தாபிக்க வேண்டும். இந் நாட்டில் புஸ்தகசாலைகளின் பெருமைகளை அறியவில்லை. தனவந்தர்கள் புஸ்தகசாலை விஷயத்தில் அதிகமாகக் கொடுத்து உதவ வேண்டுகிறோம். புதிய கோவில்கள் கட்டுவது அவவியமின்று. சரஸ்வதி வசிக்கும் கோவில்களாகிய புஸ்தகாலயங்களைத் திறவுங்கள். வயது வந்தவர்கள், கொஞ்சம் படித்தவர்கள், தொழிலாளர்கள் ஆகிய இவர்களுக் கெல்லாம் புஸ்தகசாலைகள் மூளைக்கு உணவு கொடுக்கும் அன்ன சத்திரங்களல்லவா? உலகத்திற்கு அறிவுப் பசி உண்டாகி யிருக்கிறது. இதை கவனியுங்கள். அநேக விஷயங்களுக்குப் பணத்தை நீர் போல் இறைக்கும் தாலுகா போர்டுகள் புஸ்தகசாலை விஷயத்தை அவசியம் கவனிக்க வேண்டும்.

நீகிரோ காந்தி வேண்டும்

நீகிரோவர்கள் வெள்ளையர்களைப் பின் பற்றுவது தகாதென்றும், சுதந்திரமாய் நடப்பதற்கு நீகிரோத் தலைவர்களுக்குச் சரியானபடி திறமை இல்லாததே காரண மென்றும் அறிவிப்பதோடு, நீகிரோவர்கள் சீர்திருத்தம் அடைய வேண்டுமானால், அவர்கள் காந்தி மஹானைப் பின்பற்றி நடக்க வேண்டு மென்றும் "நீகரோ வொர்ல்ட்" பத்திரிகையில், கார்டன் ஹரான் காக் தெரிவிக்கிறார். நீகிரோவர்களுக்குப் புத்தி புகட்டி, அவர்களை நல்ல வழியில் நடத்த, நீகிரோவர்களில் காந்தியைப் போன்ற ஒரு பெரியார் வேண்டும் என்றும் வேண்டுகிறார். காந்தியின் மார்க்கத்தை மிகவும் புகழ்ந்து கூறி, ஆத்ம விசாரணையிலும் சாத்வீகத்திலும் கவனத்தைச் செலுத்திக் காந்தி அடிகள் போல் சாதாரண வாழ்வு வாழ வேண்டு மென்றுங் கூறுகிறார் அந்த நீகிரோ அறிஞர்.

பர்மாவில் கலகம்

பர்மாவில் இந்தியர்கள் குடியேறி அந் நாட்டைத் திருத்தி, விவசாயமும் வியாபாரமும் செய்துகொண் டிருக்கிறார்கள். சில காலமாக பர்மியர்கள் இந்தியர்கள் மீது பொறாமைகொண் டிருக்கிறார்கள். பர்மியர்களின் துவேச வளர்ச்சியே இன்று கலகமாகத் தோன்றி யிருக்கிறது. பர்மாப் பிரிவினை விஷயம் ஆரம்பித்தது முதல், இந்தியருக்கும் பர்மியருக்கும் ஒற்றுமை குறைந்து நேசபாவம் அருக ஆரம்பித்து விட்டது. இப்பொழுது செய்கையில் சண்டை சச்சரவுகளின் மூலமாகக் காட்ட ஆரம்பித்து விட்டார்கள். தாரவாடி, ஹெஞ்ஜடா, தயமித்தோ முதலிய ஜில்லாக்களில் கலகங்கள் ஆரம்பித் திருக்கின்றனர். அங்கு இந்திய விவசாயிகளின் வீடுகளையும், களஞ்சியங்களையும், வைக்கோற் போர்களையும் தீயிட்டுக் கொளுத்தியும் இந்தியர்களை ஆண் பெண் வித்தியாச மின்றித் தாக்கி அடித்தும் கொன்றும் கொள்ளை அடித்தும் வருகிறார்கள். ஷை இந்த ஜில்லாக்களி லிருக்கும் இந்தியரின்—முக்கியமாய்த் தமிழ் விவசாயிகளின் நிலைமை மிகவும் ஆபத்தா யிருக்கிறது. பலர் கொல்லப்பட் டிருக்கிறார்கள். கோர சம்பவமா யிருக்கிறது.

ஜீவகாருண்ய மதத்தைப் போதிக்கும் புத்தர்கள் இவ்வாறு கொடூரமாய்—மிருகத்தனமாய் தங்கள் புத்தர் பிறந்த நாடாம் இந்தியவாசிகளுக்கு—தங்களுக்கு உதவியா யிருக்கும் இந்திய சகோதரர்களுக்கு இவ்விதமாக நடந்து கொண்டிருப்பது வெறுக்கத்தக்க விஷயமாகும். நாளைக்கு ஒரு கஷ்டம் பர்மாவுக்கு வந்ததென்றால், இந்தியர்கள்தான் வந்து உதவப் போகிறார்கள். இதை எவ்வாறு பர்மியர்கள் மறந்து விட்டார்கள்? பர்மியத் தலைவர்கள் இக் கலகத்தை அடக்கி, துவேசத்தைத் துடைத்து நேசப்பான்மையை முன் போன்று வளர்க்க முன்வரல் வேண்டும். தேசிய பர்மாத் தலைவர்கள் மிகவும் தீவிரமாக இதில் உழைப்பார்களாக.

வேண்டிய வேலைகளை விரைவில் சரியாய்ச் செய்து, இத் துன்மார்க்கமான கலகத்தை உடனே கலைக்காம லிருக்கும் பர்மா சர்க்காரின் மர்மம் நமக்கு விளங்க வில்லை. இந்திய சர்க்கார் இதைப் பற்றி நடபடிக்கைகள் எடுத்துக் கொள்ளவும் வேண்டும். பர்மாவில் சடுதியாய் அமைதி ஏற்பட வேண்டும். பர்மா இந்தக் கோர சம்பவத்தைப் பார்த்துச் சகித்துக் கொண்டிருக்கிறது. நமக்குச் சுயாட்சி இருந்தால், இப்படி இருக்காது. வேற்று நாட்டாரை நம்பி, இந்தியரைத் துவேசிக்கும் பர்மியர்களுக்குப் பேராபத்து வரப்போகிற தென்று எச்சரிக்கிறோம்.

கிராமங்களிலும் பிற விடங்களிலும் துன்புறும் ஸகோதரர்களுக்கு நம் தமிழ் நாட்டுச் சோதரர்களும் மற்றவர்களும் இது சமயம் மிகவும் உதவியா யிருக்க வேண்டுகிறோம். எல்லா விஷயத்திற்கும் அரசாங்கத்தையே நம்பி எதிர் பார்த்துக்கொண் டிருப்பதிற் பயனில்லை. தற்காப்புக்கேனும் பலம் படைத்தவர்களாக விருத்தல் இது சமயம் மிகவும் அவசரமும் அவஸ்யமுமாகும். கோடிக் கணக்கான பணத்தை இறைத்திருக்கும் தனவணிக அன்பர்களுக்கும் பிற இந்தியருக்கும் இச்சமயம் நெருக்கடியும் சோதனையும் நிறைந்ததா யிருப்பதால் யாவரும் ஒற்றுமையுடனும் தைரியத்துடனும் விஷமிகளின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாது 'தர்மமும், நியாயமும் வெல்லும்' என்பதை மனதிற் கொண்டு, தாய் நாட்டின் கௌரவத்தையும் தங்கள் பெண்மணிகளின் மானத்தையும் காக்க வேண்டிக் கொள்ளுகின்றோம்.

சென்ற வருடம் பர்மியர்கள் ஆந்திரர்களை நாசம் செய்த காலையில் இந்துக்களும் முஸ்லீம்களும் ஒருங்கு சேர்ந்து ஆற்றிய அருஞ் செயலால், பர்மியர்களின் அட்டகாசம் ஒடுங்கி அடங்கியதை எண்ணும் நாம், இக் கலகமும் அவ்விதமே மறைந்து விடுமென்றே யெண்ணுகின்றோம்.

ஆராய்ச்சி மேடை.

ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரின் திவ்விய சரித்திரம்

மொழிபெயர்த்தவர்: அ. ஸ்ரீநிவாஸாச்சாரியார், பி. ஏ., எல். டி.
வெளியிட்டவர்: ஸ்ரீ ராமகிருஷ்ணமடம், மைலாப்பூர், சென்னை.

விலை ரூ. 5—0—0.

சென்ற நூற்றாண்டின் கடைசிக் காலத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண தேவர் அவதரித்து, நவ இந்தியாவிற்கே புதிய உயிர் கொடுத்திருக்கிறார். கல்வி கல்லாதவரா யிருந்தும் தமது பக்தியின் பெருக்கால் கடவுளைக் கண்டவர். இவர் இன்று இந்து மத சரித்திரத்தில் ஜோதியாக விளங்குகிறார். மானிட உருவம் தாங்கிய அனைவரும் அவரது சரித்திரத்தைப் படித்தறிய வேண்டியது அவஸ்யம். தமிழில் ஸ்ரீமான்கள். மகேச குமார சர்மா, சுப்ரமண்ய சிவம் முதலியோர் அவரது திவ்விய சரித்திரத்தைச் சுருக்கமாகவும் இலகுவாகவும் எழுதி யிருக்கிறார்கள். ஆனால் ஆங்கிலத்தி லிருந்து தமிழில் மொழி பெயர்த்திருக்கும் ஸ்ரீ பரமஹம்ஸருடைய இந்தச் சரித்திரமே விரிவானது. இப் புத்தகம் 946 பக்கங்கள் கொண்டது. இதன் ஆங்கில மூலப் புஸ்தகத்திற்குக் காந்தி அடிகள் முகவுரை கொடுத்திருக்கிறார். "ஸ்ரீ ராமகிருஷ்ணரது வாழ்க்கைச் சரித்திரம், மெய்ப் பொருள் காண்டற்குரிய பயிற்சியின் வரலாறே யாகும். அவரது வாழ்க்கை இறைவனை நேரிற்காண வல்லுநராக்கும். அவர் திருவாய் மலர்ந்தருளியவை வெறுங் கல்விமானது உரைகளல்ல; வாழ்வென்னும் சுவடியின் கண்ணுள்ள ஏடுகளே அவை'' என்று காந்தி மகாத்மா எழுதி யிருக்கிறார்.

தேவரது இச் சரித்திரத்தை ஒருவர் உணர்ச்சியுடன் படித்தால் அவர் ஒரு புதிய மனிதராகிவிடுவார். அவரது சரித்திரத்தைப் பற்றி அதிக மெழுதத் தேவையில்லை நல்ல காகிதம்; சுத்தமான பதிப்பு; நேர்த்தியான பைண்டு. மொழிபெயர்ப்பு நன்றாயிருக்கிறது. எனினும் இலகுவான நடையில் எழுதி யிருந்தால் இன்னும் நன்றாயிருக்கும். இதனை வெளியிட்ட சென்னை ராமகிருஷ்ண மடத்தாருக்குத் தமிழ் நாடு மிகவும் கடமைப்பட் டிருக்கிறது. இனியும் இந்த மடத்தார் இது போன்ற அவஸ்யமான அநேக மொழிபெயர்ப்புகளைத் தமிழில் வெளியிட்டுத் தமிழன்னையை மேலும் மேலும் அலங்கரிப்பார்களாக.

சுவாமி.

கிரேட் ஈஸ்டர்ன் ஆப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டில் பதிவு செய்துகொள்ளுங்கள்.

(ஸ்டிரெயிட் செட்டில்மெண்டில் இணைக்கப்பட்டது.) (இங்கிலாந்தில் பதிவு செய்யப்பட்டது.)

உயர்ந்த தன்மை வாய்ந்த பாலிசிகளையுடையது. பாலிசி பணம் கட்டாததற்காக, பாலிசி பறிமுதல் செய்ய முடியாததற்கான விதிகளும், சாசுவதமாகவே பணம் கட்ட இயலாமல் நோயுற்று விட்டாலும் சரி அல்லது அபாயம் நேர்ந்துவிட்டாலும் சரி அவற்றிற்கும் சௌகர்யமான விதிகளுடனும் கூடியது.

மூன்று வருஷங்களுக்கொரு முறை போனஸ்! உத்திரவாதமுள்ள போனஸ் திட்டங்கள்!!

இந்தியாவிலே பணம் முதலீடு செய்யப்பட்டது. லாபகரமான நிபந்தனைகளின் கீழ் வேலை செய்ய ஏஜெண்டுகள் தேவை.

மற்ற விபரங்களுக்கு எழுதவும்:—

1. எம். வி. மர்ச்சண்ட், பிராஞ்சு மானேஜர்,
50–52 சர்ச் கேட்டு தெரு, பம்பாய்.

2. சி. பி. கிருஷ்ண ராவ், சீப் ஏஜெண்டு,
(மதுரை, ராமனாதபுரம், திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களுக்கு)
30, வடக்குமாசி வீதி, மதுரை.

"கலா நிலயம்"

இது ஓர் இலக்கிய வாரப் பத்திரிகை.

கலையுணர்வும், கலா ஞானமும் பெறுவதற்கு இது ஒரு நல்ல கருவி யென்றால் மிகையாகாது. இதில் இலக்கிய வளர்ச்சிக்குரிய கட்டுரைகளே மலிந்து வருகின்றன. கம்ப ராமாயணம், தமிழ்ப் பாடம், அகப்பொருள் வரலாறு, செந்தமிழ் நாவல், ஆங்கிலப் புலவர்களாகிய கார்லைல், ரஸ்கின், எமர்ஸன் முதலியோரின் கட்டுரை மொழி பெயர்ப்புகள், மற்றும் பல விஷயங்கள் அவ்வப்போது வெளிவரும்

சந்தா விபரம்.

சந்தா உள்நாட்டிற்கு ரூ 7—8—0 வெளிநாட்டிற்கு ரூ 9—0—0 தனிப்பிரதி அணா 3 ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

விலாசம்:—மானேஜர்,
11, வெள்ளாளர்தெரு, புரசைபாக்கம், சென்னை.

1930-ம் வருட வால்யம்

புதிய சந்தா நேயர்கட்கோர் நல் விருந்து:

சென்ற 1930-ம் வருஷத்தின் "பாரதி" & "நவீன பாரதி" யாகிய இரு பத்திரிகைகளும் ஒருங்கு சேர்ந்த பைண்ட் வால்யம் தயாராக விருக்கிறது.

இதில் இந்திய தேசாபிமானிகளின் படங்களுடன் பெரியோரின் படங்களும் அவர்தம் விரிவான சரிதைகளும் அடங்கியுள்ளது.

அன்றியும், பத்திராசிரியர்களால் வரையப்பெற்ற அவஸ்யமானதும் காலத்திற் கேற்றதுமாகிய கட்டுரைகளுடன் அறிஞர்களாலும், சிறந்த ஆசிரியர்களாலும், பிரபல நியாயவாதிகளாலும் அறிவு தருவதாய், ஆனந்தம் நல்குவதாய், செல்வம் ஈவதாய் நவம் நவமாக எழுதப்பெற்ற அற்புதமான வியாசங்களைப் பெற்று 800 பக்கம் கொண்டதா யிருக்கின்றது. பத்திரிகையின் விஷயப் போக்குக்கும் அச்சுக்கும் ஏற்ற விதமாக நேர்த்தியான காலிகோவினால், அழகாகவும் உறுதியாகவும் பைண்ட் செய்யப்பெற்று, தங்க மசியில் காலிகோவின் மேலும் அச்சிடப்பட் டிருக்கிறது.

பிரதி 1-க்கு விலை ரூ. 2—8—0.

தபாற் செலவு பிரத்தியேகம்.

வெளி நாட்டிலுள்ளோர் தபாற் செலவு அணா 8 சேர்த்து ரூ. 3. அல்லது 5 ஷில்லிங் போஸ்டல் ஆர்டர் அனுப்ப வேண்டும்.

மானேஜர், "பாரதி."

"பாரதி"யின் பம்பாய் ஏஜண்ட்.

K. S. Naganathan,
c/o. Dasan's Tea Depot,
200c, Girgaum Back Road,
Bombay 4.

198537.

T. C. P. A. ஏலச்சரக்கு விற்பனைக் கம்பெனி Ltd., கோம்பை.

1913-ம் வருஷத்திய இந்தியன் கம்பெனி ஆக்டுப்படி
ரிஜிஸ்டர் செய்யப்பெற்றது.

பங்கு 1-க்கு ரூ 3 வீதம் 900,000 பங்குகளின் பேரில்
2,700 000 ரூ மூலதனம்.

1. ஏல விவசாயிகளைத் தவிர வேறு எவரையும் பங்காளிகளாக ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது.

2. ஏல விவசாயிகளின் ஐக்கியத்தையும் லாபத்தையும் பிரதானமாகக் கொண்டு பிரஸ்தாபக் கம்பெனி ஸ்தாபிக்கப் பெற்று, ஏலச் சரக்குகளைக் கொள் முதல் செய்தும் கம்பெனி மெம்பர்களிடம் கன்செயின்மெண்டில் சரக்குகளைச் சேர்த்தும் லண்டன், ஜெர்மனி, அமெரிக்கா முதலிய அந்நிய தேசங்களுக் கனுப்பிவைத்தும் பாம்பை, கல்கத்தா, கராச்சி டில்லி, கான்பூர், அம்ரிட்ஸார், விருதுநகர் முதலிய துறைமுகங்களில் தொக்தக் கடைகளை நிர்மாணித்தும் விற்பு முதல் செய்து வருவதோடு சக்கர், முல்டான், லாகூர், அலகாபாத், ஆக்ரா, ஆகரின், சென்னை முதலிய இடங்களில் விற்பனை ஏஜண்டுகளைக் கொண்டும் விற்றுமுதல் செய்து வரப்படுகிறது.

3. நல்ல விலைக்கு விற்க விரும்பும் ஏல விவசாயிகளும், நல்ல ஏலச் சரக்கை வாங்க விரும்பும் வியாபாரிகளும் இக் கம்பெனியை ஆதரித்துத் தக்க லாபத்தையும் மிக்கப் புகழையு மடையும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

உ. ம. சே. முகையித்தீன்பிள்ளை ராவுத்தர்,
மானேஜிங் டைரெக்டர்,
T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி,
(லிமிடெட்,)
கோம்பை, மதுரை ஜில்லா.

"பாரதி"

ஒரு தேசிய மாதப் பத்திரிகை.

சுதந்திரம் பொங்கி சாமர்த்தியம் ததும்பி சகோதரத்வம் ஜ்வலித்து
குறைந்த சந்தாவிலே நிறைந்த விஷயங்களால் உயர்ந்த
மாலிகையாய் மத பேதமற்று ஜாதி பேதமற்றுக்
கட்சி பேதமற்று இந்தியரனைவரும் பாரத
மாதாவின் மக்களென்ற மேலான
கொள்கையுடன் தேசாபி
விருத்தியை முக்கிய
முதல் நோக்கமாகக்
கொண்டு

தேச விடுதலைக்காக உழைக்கும்
தேசீய மணங் கமழும்

மாலிகை இஃது ஒன்றேயாகும்.

உடனே சந்தாதாரர்களாய்ச் சேருங்கள். உங்கள்
நண்பர்களுக்கும் இதனைப்பற்றி அறிமுகம்
செய்து சந்தாதாரர்களாய்ச் சேர்த்துக்
கொடுங்கள்.

சந்தா விபரம்.

உள்நாடுகளுக்கு வருடத்திற்கு ரூ. 2—0—0
வெளி நாடுகளுக்கு ,, ரூ. 2—8—0
அல்லது 4 ஷிலிங்

தனிப் பிரதி விலை அணா 3. அயல் நாடு அணா 4.
ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஏஜெண்டுகளாக விரும்புவோர் எழுதவும்.

பொறுப்பாளர்,
"பாரதி" ஆலயம்.
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

Edited and Published by R. NARAYANASWAMI.
Printed at ANANDA PRESS, Uthamapalayam, Madura Dt., S. India.

சமயம் மனங் கலங்காமல் அதற்கேற்ற சிகிச்சைகளைச் செய்தும், வரவுக்கேற்றபடி செலவு செய்து, தமது கிருக கிர்த்தியங்களை யெல்லாம் வெகு ஜாக்கிரதையுடன் நடப்பித்தும் உடுக்கை யிழந்தவன் கைபோல தங்கள் கணவர்களுக்கு உதவுவார்கள்.

தாய்மை

ஒருவன் உயர்வதும், தாழ்வதும், அவன் குடும்பம் சீர் பெறுவதும், சீர் கெடுவதும் அவன் இல்லத்திற்கு அரசியாகிய மனைவியாலேயாம்? ஒருவனுக்கு எல்லாச் செல்வத்திலும் சிறந்தது மக்கட் செல்வம். குழந்தை பிறந்தவுடன் தகப்பனை அறியுமுன்னர் தாயையே அறிகின்றது. அது பள்ளிக்கூடம் போகும் வரை தாயின் பராமரிப்பினாலும், நடத்துதலினாலும் ஏற்படும் நன்மைகள் அனந்தம். பெரும்பாலும் தாயானவள் படியாதவளாக இருந்தால் தன் குழந்தைகளை நன்னெறியில் நடத்துவது அரிது. அவள் தன் பிள்ளைகளைக் குழந்தைப் பருவமா யிருக்கும்போது மனம் போன வழி யெல்லாம் விட்டு விடுவதனால் அவர்கள் கெட்ட வார்த்தைகளைப் பேசவும், கெட்ட பிள்ளைகளோடு சேரவும், தீய வழிகளில் ஒழுகவும் இடமாயிருக்கின்றது. இவ்வித குணங்களையுடைய சிறுவர், சிறுமியர் தங்கள் அறிவின்மையால் பல தீய காரியங்களைச் செய்து தாங்களும் கஷ்டத்திற்குள்ளாவதன்றி தங்களை ஈன்றோர்க்கும் உயிருள்ளவரைத் தீரா வியாகூலத்தை அளிப்பார்கள்.

கற்றறிந்த தாயோ தன் மக்களுக்கு நல்லொழுக்கங்களையும் கல்வியையும் கற்பிப்பாள். அதனால் அவர்கள் மிகுந்த சிறப்படைந்து இவ் வுலகத்தில் கண்டோர் யாவரும் புகழத்தக்க மேம்பாட்டினை அடைந்து தங்களுடைய பெற்றோர்க்கு மனமகிழ்ச்சியை அளிப்பார்கள். திருஷ்டாந்தமாக இப்பொழுது உலகம் போற்றும் காருண்ய மூர்த்தியாய் விளங்கும் மகாத்மா காந்தி அவர்களின் அருமைத் தாயாரவர்கள் கல்வி யறிவும், புத்தி தீக்ஷண்யமும், மற்றும் இதர நற்குணங்களும் அமைந்தவர்களாய் இருந்தமையால்தான் அவர் தாயைப்போல் பிறந்தனர். அவ் வம்மையார் தமது புதல்வரை நல் வழியிலேயே வளர்த்தமையாலன்றோ, அவர் இவ்வளவு சிறப்புக்கும் ஆளாயினர்? அவர் இங்கிலாந்துக்குச் சென்று கல்வி கற்க விரும்பித் தமது அன்னையாரவர்களை உத்திரவு கேட்டபோது அவர் இலேசில் விடை கொடாமல், பின்னர் பலவாறு சிந்தித்துத் தமது புதல்வரிடம் அன்னிய நாடு சென்றால் நல்வழி விலகி, தீய வழியில் செல்வதில்லையெனச் சத்தியம் செய்து கொடுக்கச் செய்த பின்னரே போக அனுமதி தந்தாரென்றும், தாயாரின் சிறந்த புத்திமதிகளும் அவருக்குக் கொடுத்த

வாக்குத்தத்தமுமே மோகனதாஸரின் மனதில் நிலைத்து நின்று அவரை அநேக சமயங்களில் காத்து வந்ததென்றும் சரித்திர வாயிலாய் அறிகிறோம்.

முடிவு

“கல்லாத பெண்மணிகள் நற்குண, நல்லொழுக்க முடையவர்களாக இருப்பதில்லையா” என்று யாரேனும் கேட்கலாம். மிக்க பெருமை பொருந்திய வைரக் கல்லானது சாணைக் கல்லில் வைத்துத் தீட்டத் தீட்ட அதிகமாய் ஒளி கொடுத்துப் பிரகாசிப்பது போல் மாதர்கள் கல்வியில் மேம்படுவதால் அறிவு வயப்பட்டு நல்லொழுக்கத்தை அடைகின்றனர். ஒருவர்க்கொருவர் துணையாக இருந்து வரவேண்டிய ஆண், பெண் இரு பாலாரும் குறையற்ற நிலையி லிருந்தாலன்றி க்ஷேமத்தைப் பூரணமாக எதிர்பார்க்க முடியாது. அன்றியும் வாழ்வுக்கு நற்றுணையான பெண் கல்வி யறிவுடையாளாயின் மனோ திருப்தியுடன் பல்வேறு நற் கருமங்களாற்ற நேரமும் சக்தியும் தானாகவே அமைந்துவிடும். இவ்வாறெல்லாம் இல்லாததனாலன்றோ நம் நாடு க்ஷீணதசையிலிருந்துவர வேண்டியிருக்கின்றது. தேச க்ஷேமத்திற்கும் உலக மேன்மைக்கும் கல்வி அறிவுடைய நற் பெண்டிர் வேண்டப்படும் காலம் நாளுக்கு நாள் வளர்ந்துகொண் டிருக்கின்றது. அதனைக் கருதி தாமதமின்றி நீங்கள், பெண் கல்வியைத் தாராளமாகக் கொடுத்து நாட்டின் குறையை நிவர்த்தியுங்கள். அதுவே உங்கள் பிரதான கடமையாக இருக்கட்டும்.

இனம் இனத்தைக் காப்பது போல தம் இனத்தவராகிய பெண்கள்பால் இரக்கம் வைத்துக் கிருபை செய்யும்படி கலைவாணியை ஸ்தோத்தரிப்பதுடன், மிஸ். மேயோ போன்றவர்களால் நம் நாடு இழித்துக் கூறப்படா வண்ணம் கல்வி கற்ற காரிகைகளாலும், தேசபக்தி மிக்க வீர மாதுசிரோன்மணிகளாலும், கற்பை ஆபரணமாக அணியப்பெற்ற ஸ்திரீ ரத்னங்களாலும் நிறையப் பெற்று, ஒற்றுமையுடனும், சமத்துவத்துடனும், சமாதானத்துடனும் விளங்க அருள்பாலிக்கும்படி எல்லாம்வல்ல பரம் பொருளை முழுமனதுடன் இறைஞ்சுகின்றேன்.

இரு கடிதங்கள்.

I

தூய்மை மிகும் சகோதரர் அவர்களே,

நான், சிறைச்சாலையிலிருந்து வந்தவுடன் "பாரதி"யின் இதழ்களைக் கிடைக்கப் பெற்றேன். மிக்க வந்தனம். அன்பும், ஆர்வமும் ஊக்கமும் ததும்பும் கடிதத்தைக்கண்டு மிக்க மகிழ்வெய்தினேன்.

"பாரதி" இப்பொழுது மிகமிக நன்றாயும் கவர்ச்சியாயுமிருக்கின்றது; தேசிய மணம் கமழ்கின்றது; முன் குருத்தாயிருந்த "பாரதி" இப்பொழுது பூவுங் காயுமாய்த் திகழ்கின்றது. தமிழ் மக்களுக்குத் தற்பொழுது வேண்டியவைகள் நமது "பாரதி"யில் பொதிந்து கிடக்கின்றன; முகப்பும் தலைப்பும் அழகாயிருக்கின்றன; விஷயங்கள் ஒவ்வொன்றும் பொறுக்கின நவரத்தினங்களாக மிளிர்கின்றன. ஸ்ரீ வா. வெ. சு. ஐயரின் "பால பாரதி"யும், ஸ்ரீ பாரதியாரின் "இந்தியா"வும், "கர்ம யோகி"யும், ஸ்ரீரங்கம் "வாணி விலாசனி"யும் இறந்து மறைந்தன. நல்ல பத்திரிகையில்லாது தவிக்கும் தமிழ் மக்களுக்கு இத் தருணத்தில் தங்களது "பாரதி" நல்ல அருமருந்தாகக் கிடைத்திருக்கின்றது. இறந்துபட்ட அப் பத்திரிகைகளின் ஸ்தானத்தைத் தற்பொழுது வகிக்கும் உயரிய பத்திரிகை தங்களது "பாரதி" ஒன்றேயென்பது மிகையாகாது. "பாரதி" இங்ஙனம் செழித்தோங்குவதின் காரணம் தங்களது உயர்ந்த சுய நலத் தியாகமும், தேச பக்தியும், குன்றாத முயற்சியும், பத்திரிகா ஆர்வமும், எதிர்ப்புகளுக் கஞ்சாத ஆண்மையும் தீரமுமே யாகும். ஆனால் பத்திரிகைகளின் அவஸ்யத்தையையும் அவைகளின் உபயோகத்தையையும் மற்ற நாடுகள் போல், நந் தமிழ் நாடு இன்னும் அறிந்து கொள்ளவில்லை என்று வருந்துகிறேன். இதற்கு எக்காலம் வருமோ? நாட்டிற்கு விடுதலை என்று கிட்டுமோ?

ஸ்ரீ ராமநந்த சாட்டர்ஜியின் "மாடெர்ன் ரெவ்யூ" போன்று தங்களது "பாரதி"யும் தழைத்தோங்குமாறு அன்னை பராசக்தி அருளும்படி பிரார்த்திக்கிறேன். தங்களது தேச பக்தியும், ஆர்வமும், ஊக்கமும், சுயநலமின்மையும் வாழ்க. தங்களது மேலான முயற்சிகளுக்குக் கட்டாயம் ஆண்டவன் தக்க பலன் கொடுப்பாரென்பது நிச்சயம்.

தாங்கள் சிறை சென்ற பின் பத்திரிகை நஷ்டமடைந்து வருகிறதென்று அறிய வருந்துகின்றேன். தாங்கள் கஷ்டத்துடன் பத்திரிகையை நடத்துகின்றீர்கள்; இது உண்மையேயாகும்,

என் செய்வது? தமிழ் மக்கள் இன்னும் "பாரதி"யின் உயர்வை அறிந்து கொள்ளவில்லையே. அறிந்தவர்களும் ஆதரிக்கத் தயங்குகிறார்களே. பணக் கஷ்டம் ஒரு பக்கம்; மற்றொரு பக்கம் கல்வியின்மையும், அசிரத்தையும் இவ் விரண்டும் தமிழ் மக்களை, என், நம் பாரதர்களைப் பிடித்திருக்கின்றன. இவை நம் நாட்டவரின் முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டைகளாயிருக்கின்றன. இவைகளை நீக்கத், தங்களது போன்ற பத்திரிகைகளும் உயர்ந்த நோக்கங்களையுடைய தேச பக்தர்களும் தேவை. உண்மையான நாட்டன்புடையோர்களின் மனதில் இவ்வார்வம் கொதித்தெழுகின்றன. மற்றும் நாடு அடக்குமுறையால் தவிக்கின்றது. விமோசனம் ஏற்படுங் காலம் என்றோ?

காரணம் என்னவெனின், கிராமங்களில் பரவியிருக்கும் மடமைத்தனமும் கல்வியின்மையும் அசிரத்தையும் பணக் கஷ்டமுமேயாகும். போதித்துப் போதித்துதான் நம் எண்ணத்தை நிறைவேற்ற முடியும். வந்தே மாதரம்.

"பாரதி" வாழ்க.

இங்ஙனம் தங்களன்பன்

S. கிருஷ்ண பாரதி.

II

அமிர்தசரஸ்,

மேன்மை வாய்ந்த ஐயா,

* * *

தங்கள் "பாரதி" ஒழுங்காகக் கிடைத்து வருகின்றது. அவைகளை விருப்பத்துடன் வாசித்து அகமகிழ் வெய்துகின்றேன்.

* * *

பத்திரிகைத் தொழில் சாமான்யமானதன்று. அதிலும் பலராலும் போற்றத்தக்க விதமாகப் பத்திரிகையை நடத்திப் போவதென்பது இன்னுஞ் சிரமமான காரியம். இக் காரணத்தாலேயே அநேகம் பத்திரிகைகள் அரும்பி, மலராமலேயே வாடி வதங்கி உதிர்ந்து போகின்றன. தென்னாட்டில் தோன்றிய கணக்கற்ற பத்திரிகைகள் இருந்தவிடந் தெரியாமல் மறைந்து போனதற்குப் பொது ஜனங்களின் ஆதரவில்லாததே காரணமாகும். பா நல

நோக்கங்கொண்ட பத்திரிகைகளின் கதியே இவ்வாறிருக்குமானல் சுயநல-பொருளீட்டும் நோக்கங் கொண்டவைகளின் கதியைப்பற்றிச் சொல்லத் தேவையில்லை. பத்திரிகை வளர்ச்சிக்கு ஆதரவு மிகமிகத் தேவை. நிற்க,

பல வின்னல்களுக்கு மிடையே 'பாரதி'யைத் திறம்பட நடத்திச் செல்லும் தங்களின் ஆற்றல் வியக்கத்தக்கதா யிருக்கிறது. "பாரதி"க்கு ஏற்பட்டது போன்ற கஷ்டங்கள் வேருெரு பத்திரிகைக்கு நேர்ந்திருப்பின் இதற்குள் அது சமாதியாயிருக்குமெனச் சொல்லலாம். ஆயினும் "பாரதி"யோ எத்தகைய இடையூறுகளையும் தாண்டி நாளுக்கு நாள் அபிவிருத்தியடைந்து வருவதானது, அது பொது ஜனங்களின் மதிப்பை ஓரளவு பெற்றுவிட்டதாலேயே எனத் திட்டமாகப் புகலலாம். இளம் பிராயத்திலேயே தக்க தீரம் காட்டிய "பாரதி"க்கு வருங்காலம் மிக்க சுபிக்ஷமாக இருக்குமென்பதற் கையமில்லை.

தென்னுட்டு மாஸிகைகளில் "பாரதி"யே தலைசிறந்து விளங்குகிறது. அதன் ஒவ்வொரு பக்கமும் அறிவை வளர்க்கும் அரும் பொக்கிஷங்களா யிருக்கின்றன. பக்கங்களை நிறப்பிக் காட்டுவதற்கான குப்பை கூளங்கள் ஒன்றையும் அதில் காணமுடியாது. அறிஞர்கள், மேதாவிகள் பலரின் கட்டுரைகள் மணிகள்தோறும் மிளிர்கின்றன. பிரபலமாகிய "தமிழ் நாடு," "இந்தியா," "நவசக்தி" முதலிய தமிழ்ப் பத்திரிகைகளே "பாரதி"யின் கட்டுரைகளை வெளியிட்டு வருகின்றன வென்ருல், "பாரதி"யின் பெருமையை ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம். "பாரதி"யைக் கையிற் பிடிக்கவும், படிக்கவும், முடிக்கவும் ஆனந்தம். "பாரதி" தென்னுட்டு "மாடர்ன் ரிவ்யூ" எனப் பெயர் பெற்றதில் ஆச்சர்யமொன்றுமில்லை. "பாரதி" தழைத்தோங்குக!

"பாரதி"யின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றுள்ள தங்களைப் பற்றியும் இரண்டொரு வார்த்தைகள் சொல்லிக்கொள்ள வேண்டியிருக்கிறது. தக்க ஆதரவின்றி, தக்க பொருளுதவியின்றி, உடல் நலமின்றிப் பத்திரிகையின் தலைமைப் பேற்றை யேற்று நடத்தி வருவது தேவியின் திருவருளேயாகும். பூர்வ ஜென்ம புண்யக் குறையின் காரணமாகத் தாங்கள், தேவாரம் என்னும் கிராமத்தில் தேவாங்கர் குலத்தில் பிறக்க நேர்ந்தது தங்களின் துர்ப்பாக்கியமேயன்றி வேறென்ன? பத்திரிகை யுலகத்தில் ஒரு நார்த்கிளிப் ஆகவோ, வாலிப உலகத்தில் ஒரு காரிபால்டியாகவோ இருக்க வேண்டிய தாங்கள், அடிமை மண்ணில் பிறக்கவும் தன்னலமும் பொருமையும் வஞ்சகமுமிக்கோர் சூழ நிற்கவும் நேரிட்டதாலேயே இன்று தாங்கள் காட்டுப் புஷ்பமென ஒடுங்கி, ஒதுங்கிக்கிடக்கின்

துர்காவதி.

திரு. M. சின்னச்சாமி அவர்கள்.

இந்திய மத்ய பிரதேசத்தின் பழமையான பெயர்
கோட்வாஞ. அங்கு வேஹி என்பவர் அதிபதி
யாகவிருந்தார். அவருடைய இராஜதானி ஜபல்
பூரிலிருந்து மூன்று நான்கு மைல் தூரத்தி
லுள்ள கடா நகரத்திலிருந்து வந்தது. அப்
பொழுது இந் நகரத்திற்குக் கடாவென்ற பெய
ரில்லை. கோன்ட் என்ற பெயரே வழங்கி வந்தது. இன்று இது
ஓர் சிறிய கிராமமாக விருக்கிறது. இப் பாழான நிலையிலும் இது
தன்னுடைய பூர்வ வைபவத்தைச் சாக்ஷியாகக் காட்டிக்கொண் டிருக்
கிறது. மொகலாயர்களுடைய காலத்தில் கோன்ட் ஜனங்கள், தங்க
ளுடைய இராஜதானியை வேறிடத்திற்கு மாற்றிக்கொண்டார்கள்.
அப்பொழுது அவ் விராஜதானிக்குக் கடா மண்டலமெனக் கூறிக்
கொண்டார்கள். இப்பொழுதுங்கூட அது தன்னுடைய நிலையைக்
குறித்து அழுதுகொண் டிருக்கிறது. கோன்ட் அரசர்களால் அப்
பொழுது கட்டப்பட்ட அநேக கோட்டைகள் ஆங்கு இன்றும் இருக்
கின்றன. மதன் வஹீல் என்னுங் கோட்டை அவ் வமயம் பிரசித்தி

றீர்கள். ஆயினும் மாற்றெண்ணங் கொண்டோரும் மனந் திரும்பும்
காலமும் வாராமற் போகாது. தங்களின் உண்மைச் சக்தி பிரகா
சிக்கும் காலம் வெகு விரைவிலேயே தோன்றும். தேவியின்-
இயற்கை அன்னையின் அருள் தங்கள்பால் மேலும் வழிந்தோடி
மிகுவதாகுக. "ஞானிக்குப் பிறந்த விடத்தில் பூஜிதையில்லை."
சிறுத்தன பெருத்தலும், பெருத்தன சிறுத்தலும், இறந்தன பிறத்
தலும், பிறப்பன இறத்தலும் இயற்கையா யிருத்தலின் எதிர்
காலத்தை யாரறிவார்? தங்களுக்கு உடல் நலமும், மனோவலிமை
யும், சாந்தியும் அருள அம்பிகையைப் பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம் தங்கள் நன்மையே நாடும்

K. காமராஜ்.

பெற்றிருந்தது. அக் கோட்டையை ஏறக்குறைய 800 வருடங்களுக்கு முன்னர் மதன்ஸாக் எனும் அரசர் கட்டி முடித்தார். அக் கோட்டை ஜபல்பூருக்கு ஐந்தாவது மைல் தூரத்திலுள்ள மலையின் அழகான பாறையில் கட்டப்பட்டுள்ளது.

இன்றுங்கூட அது முன்னிருந்த உன்னத நிலையில் தலை சிறந்து நின்றுகொண் டிருக்கிறது. பதினைந்தாவது நூற்றாண்டில் நரசிங்கபூர் ஜில்லாவில் மஹாராஜ் சங்காராம்ஸிங் என்பார் செளராகட் எனுங் கோட்டையைக் கட்டினார். இக் கோட்டையில்தான் கோண்ட் ஜாதியார்கள் அநேக தடவைகளில், மராட்டியர்களோடும், முசல்மான்களோடும், புந்தேலாவெனும் இராஜபுத்திர வகுப்பின் ஒரு பிரிவாரோடும் தங்கள் சுதந்திரத்திற்காகப் போர் புரிந்திருக்கிறார்கள். மகாராணி துர்க்காவதி, இதே சங்காராம் ஸிங்கின் புத்திரரான தளபதிஸாக் என்பவருடைய பத்தினி. இவள், மஹோப க்ஷத்திரிய அரசரான, ஸந்தேல் என்பவரிடத்தில் பிறந்தவள். தளபதியைக் கோண்ட் ஜாதியைச் சார்ந்தவர். துர்க்காவதி சந்தேல் எனும் இராஜபுத்திர ஜாதியின் ஓர் பிரிவினள். இவ்விதம் வெவ்வேறு பிரிவாகவிருந்த போதிலும் சந்தேல் என்பவர் தன் மருமகனை, தளபதிஸாக் எப்பொழுது தன்னைத் தாக்க வாரம்பித்தாரோ அப்பொழுது தளபதியின் நேசத்திற்காகவும், தன்னுடைய பாதுகாப்பிற்காகவும், அக் குழந்தையை அவருக்கு விவாஹஞ் செய்து கொடுத்தார்.

தளபதிஸாக் தன்னுடைய இராஜதானியான மண்டலாவிலிருந்து புறப்பட்டு தாமோஹ் ஜில்லாவிலுள்ள ஸிங்கெளர்கட் எனுங் கோட்டைக்கு வந்து அக் கோட்டையிலேயே அரசியுடன் ஆனந்தமாக வாழ்ந்து வந்தார். ஆனால் சில நாளைக்குப் பின் மகா ராணிக்கு செளபாக்கிய சூர்யன் அஸ்தமனமாகிவிட்டான். விவாஹமாகி ஐந்தாண்டிற்குப் பின் மஹாராணியின் இடுப்பில் வீரநாராயணன் எனும் நான்கு வயதுக் குழந்தை யொன்றை விடுத்துத் தளபதிஸாக் பரலோகமடைந்தார்.

மஹாராணி அக் குழந்தையின் முகத்தைப் பார்த்துக்கொண்டே தனக்கும் தன் குடிகளுக்கும் வரப்போகிற சங்கடங்களை யனுபவிக்க உடன்கட்டை யேறாது உயிருடனிருந்து வந்தாள் போலும்! தன்னுடைய புத்திரனைச் சிம்மாதனத்தில் உட்காரவைக்க வேண்டுவதே உசிதமெனக் கருதியிருந்தாள். அவள் குணவதியாகவும் வீரமுள்ளவளாகவும் விளங்கினாள். எப்பொழுதும் தன்னுடைய நாட்டின் நிலைக்குத் தகுந்த அரச காரியங்களிலே மிக்க கவனஞ் செலுத்தி வருவாள். தன்னுடைய குடிகளுக்கு நன்மை பயக்கும் விஷயங்களில், கண்ணுங் கருத்துமா யிருப்பாள். தன்னுடைய இராஜ்யாதிகாரிகளின் கடமைகளுக் கனுகூலமான உபதேசங்களைக் கொடுத்து வருவாள். அவளுடைய அரசாட்சியில் எப்பொழுதாவது ஆபத்து வந்ததில்லை. பஞ்சமும் ஏற்படவில்லை, குடிகள் சுகமாகவும் ஆனந்தமாகவும் வாழ்ந்து வரலாயினர். அவள் பதினைந்து ஆண்டுவரை அவ் விராஜ்யத்தை நிர்வகித்து அந் நாட்டை முன்னையப் பூர்வ நிலைக்குக் கொண்டு வந்தாள். இவள் காலத்தில் குடிகள், தனதான்யம் நிறைந்து, உன்னத நிலையிலிருந்து வந்ததால் மொகலாக்களை இவளுக்குக் கப்பமாகச் செலுத்தி வந்தார்கள். அவள் குடிகளின் நன்மையைக் கோரி அநேக நல்ல வேலைகளைச் செய்து வந்ததால், எளியவர்கள்கூட அவளிடம் எல்லையற்ற பக்திகளோடிருந்து வந்தார்கள். இன்றுங்கூட ஜபல்பூரினுடைய இராணி துர்க்காவதியின் ஞாபகத்தை இங்குள்ள பாழடைந்த குளங்கள் குறிப்பிடுகின்றன.

அக்பர் அக் காலத்தில் சக்ரவர்த்தியாக விருந்தார். அவர் தன்னுடைய சேனாதிபதிகளால் பரதகண்டத்தில் மொகலாய ஏகாதிபத்தியத்தைப் பலமாகப் பரப்பிக்கொண் டிருந்ததால், அவ்வமயம் அவருடைய எதிர்ப்பு ஏதாவது ஒரு இராஜ்யத்தின் மேலிருந்து வந்தது. கங்கைக் கரையருகில் மானிக்பூர் எனும் பெயரையுடைய மொகலாய இராஜதானி ஒன்றிருந்து வந்தது. அவ் விராஜதானியின் சேனாதிபதியின் பெயர் ஆஸப்கான். இவன் இக் கடா மண்டலத்தினுடைய உன்னத நிலையைக் கேள்வியுற்று அநேக தடவைகளில் மத்திய பிரதேசத்தைத் தாக்கி அங்குள்ள குடிகளுக்கு அநேக இன்னல்களை இழைத்து வந்தான்.

இவன் ஒரு தடவை மகாராணியின் முகத்தைப் பார்க்க நேர்ந்தது. இச் செய்தியை இவன் அக்பருக்கு அறிவிக்க அவரும் ஆனந்தமடைந்தார். உடனே அம் மத்திய பிரதேசத்தை உக்ரமாகத் தாக்கும்படி உத்தரவிட்டார். அவனும் தன்னுடைய தளவாடங்களோடு பொறி பறக்க வெழுந்தான். 1564-ம் வருஷம் அவன் 70,000 வீரர்களை யழைத்துக்கொண்டு கடா மண்டலத்தை நோக்கிப் பிரயாணமானான். இச் செய்தி யறிந்த அங்குள்ள குடிகள் மிகக் குழப்பமடைந்தார்கள். சிலர் வேறிடங்களுக்கு ஓடுவதற்கும் பிரயத்தனஞ் செய்தார்கள். அரசி குடிகளினுடைய இத் துக்ககரமான நிலையைப் பார்த்துத் தன்னுடைய கடமையைச் செய்யச் சிறிதும் பின் வாங்காது, அச்சமின்றி யுத்தத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தாள்.

அரசி, கவசந் தரித்து வில்லம்பு வாள் முதலிய ஆயுதங்களைப் பூண்டு, யானையிலாரோகணித்து, 1500 யானைகளோடும் 8000ம் வீரர்களோடும் சிங்கெளர் கோட்டையிலிருந்து வெளிக் கிளம்பி

மொகலாய சேனைக்கெதிரில் போய்ச் சேர்ந்தாள். பயங்கர யுத்தம் ஆரம்பமாயிற்று. முகலாயர்கள் தங்களுடைய எதிரில் சாதாரண பெண் சிறிது சேனையோடு வந்திருப்பதாக நினைத்தார்கள் அவள் கடைசியாய் தோல்வியே யடைவாள் என்று தீர்மானித்தார்கள். மகாராணியின் வீரத்தைக் கண்ணுற்ற கோன்ட் நகரக் குடிகள் தங்கள் தாய் நாட்டை (மீட்க) காப்பாற்ற மிகவும் உற்சாகத்துடன் போர் புரிந்தார்கள். துர்க்காவதி ஆவேசத்துடன் தீவிரமாக யுத்தஞ் செய்ய உத்தரவளித்தாள். பிரளயகால ருத்திரன்போலக் கோன்ட் நகரச் சேனை சீறியெழுந்தது. உற்சாகத்தோடும் சந்தோஷத்தோடும் இவர்கள் போர் புரிவதைக் கண்ணுற்ற மொகலாயச் சேனையானது மிகக் குழப்பமடைந்தது. பின்னர் கோன்ட் நகர சேனையின் உயிருக்கும் ஆபத்து நேர்ந்துகொண்டிருந்தது. யுத்த களத்தில் மொகலாயர் ஆறுயிரவர்தான் எஞ்சியிருந்தார்கள். அவர்களைக் கோரமாய்த் தாக்கவே ஓடவாரம்பித்தார்கள். கடைசியாய் என்ன நடந்தது? காளிகா தேவி அவள்பேரில் கிருபை கூர்ந்து வெற்றி மாலை சூட்டிவைத்தாள். மாலை நேரமானவுடன் தன் சேனையைச் சிரமபரிகாரஞ் செய்துகொள்ளும்படியாய் அரசியாகிய துர்க்காவதி உத்தரவளித்தாள்.

அச் சேனையானது மறுபடியும் மொகலாயர்களை இரவிலேயே தாக்கலாமாவென்று யோசனை செய்தது. இதனால் சிலர், சேனா வீரர்களோடு இரவிலேயே சென்றார்கள். ஆனால் அசட்டுத்தனமாக அதிக வீரர்கள் செல்லவில்லை. இரு தடவைகளில் மொகலாயர்களைச் சின்னபின்னப்படுத்தியதால் தங்களை எவ்விதமாய் எதிர்க்கப்போகிறார்கள் என்று இலேசாக நினைத்துவிட்டார்கள். சிலர் இவ் விரவில் சுகமான நித்திரையை விட்டுவிட்டு ஏன் கஷ்டப்பட வேண்டுமென்று கருதி, மகாராணியினிடஞ் சாக்குப் போக்குச் சொல்லிச் சமாதானஞ் செய்து கொள்ளலாமெனத் திரும்பினர். இத் துரதிஷ்டமுடைய கோன்டர்களுடைய சோம்பல் அவர்கள் கழுத்திலேயே மாட்டிக் கொண்டது. அதன் பயனாய் அவர்கள் வீணாக அழிந்ததுடன், மத்ய பிரதேசத்தினுடைய சுதந்திரமும் நஷ்டமடைய நேரிட்டது.

ஆஸப்கான் ஓர் பெண்மணியிடந் தோல்வி யடைந்ததால் மிக வெட்கமடைந்து மனதிற்குள்ளே கொதித்துக்கொண்டிருந்தான். பழிக்குப் பழி வாங்க மறுபடியும் பிரயத்தனஞ் செய்தான். கோன்ட் நகர சேனை இளைப்பாறிய செய்தி அவன் காதிற்கெட்டியது. உடனே சந்தோஷமடைந்து கபடயாக சூர்யோதயத்திற்குள் தூங்குகின்ற சேனையின் மேல் படையெடுக்கும்படி உத்தரவிட்டான். இவ்விதம் எதிர்பாராத விதமாய் திடீரென்று விபத்து வரவே, கோன்ட் நகர சேனை குழப்பமடைந்தது. மகாராணிக்கும் அவ்வமயம் ஓருபாயமுந்

தோன்றவில்லை. பதினெட்டு வயதுடைய தனது குமாரனை வீரநாராயணனைச் சேனாதிபதியாக்கி யுத்தத்தை யாரம்பித்துவிட்டாள். க்ஷத்திரிய பாலகனான அவ் வீரநாராயணனின் நிகரற்ற பராக்ரமத்தைக் கண்ணுற்ற முசல்மான்களுக்கு அறிவு மறைந்து போயிற்று. வீரநாராயணன் இயற்கையான வீரர்போன்று இரு தடவை அவர்களைப் பின்னடையச் செய்தான். மூன்றாவது தடவையில் மொகலாயர்கள் ஒருமித்துத் தாக்கவே இத் தடவையில் அவன் பிரயத்தனம் பலிக்கவில்லை. கடைசியாய்த் திக்கற்றுப் பூமியில் விழுந்தான். பிரிய புத்திரன் கீழே விழுந்தும் அரசி சிறிதும், அதைரியமடையாது, அப் பாலகனுக்கு வேண்டிய சிகிச்சை செய்து, சௌராகட் கோட்டைக்கு அனுப்பிவைத்தாள். பின்னர் அவள் சிங்கம்போல் கர்ஜித்துச் சமுத்திரத்தைக் கலக்குவதுபோல் மொகலாயர்களை அதிக நேரம்வரை கலக்கி நூற்றுக் கணக்கான வீரர்களைப் பூமியில் வீழ்த்தினாள். கடைசியாய் அவளுடைய சேனை முசல்மான்கள் எதிர்ப்புக்கு நிற்காது பின்னடைந்தது. திக்கற்ற ஆபத்தை யறியாதவர்கள் மகாராணியின் துக்கத்தை விரும்பாது எஞ்சிய வீரர்களை ஒன்று சேர்த்துக் கடா நகருக்குத் திரும்பினார்கள். அவர்கள் யுத்தத்திற்குத் தகுதியான யிடத்தை யடையாது கடா நகருக்கருகிலுள்ள பன்னிரண்டாவது மைலில் ஓர் சிறிய பள்ளத்தாக்கில் தங்கினார்கள். அங்கும் எதிரிகள் வந்து சிறிது நேரத்தில் சூழ்ந்துகொண்டார்கள். மகாராணியின் சேனையின் மீது பீரங்கிகளினால் அக்கினியை வர்ஷித்தார்கள். அச் சமயம் திடீரென ஓர் அம்பு வந்து மகாராணியின் கண் ஒன்றைக் கெடுத்துவிட்டது. அவள் உடனே அந்த அம்பை எடுத்தெறிந்து கூர்மையற்ற கண்ணோடும் உறுதியோடு அசையாது போர் தொடுத்தாள். மறுபடியும் ஓர் அம்பு வந்து கழுத்தில் பாய்ந்தது. கடைசியாய் அவள் தனக்கு வந்த தோல்வியையும், தன் சேனை ஆசையற்றுப் போயிருப்பதையுங் கண்ணுற்று சிறிது அதைரியமடைந்தாள். பின்னர் தன் கஷ்டத்தையும் மறந்து வீரர்களுக்கு உற்சாகமூட்ட ஆரம்பித்தாள்.

மகாராணியின் பரிதாப நிலையைக் கண்ணுற்ற யானைப்பாகன் அவளைத் தன்னுடைய மண்டலத்திற்குத் திரும்பும்படி வேண்டவும் மகாராணியார் அவனைப் பார்த்து "அற்ப சுகத்தை விரும்பியும், எனதுயிரைப் பாதுகாத்துக் கொள்ளவும், யுத்த களத்திலிருந்து திரும்ப விரும்பவில்லை. நீ கூறுவது க்ஷத்திரிய தர்மத்திற்கே விரோதமானது; எச்சரிக்கை! க்ஷத்திரியக் கன்னிகைகள் சமரில் சந்தோஷமாய் உயிரைக் கொடுப்பார்கள். ஓடுவது யார்? நீங்களெல்லாம் மனிதர்களாக விரும்பின் தன் தாய் நாட்டைச் சங்கடத்தில் விடுவீர்களா? நான் இப்பொழுது நமது குடிகளுக்காக இரத்தஞ் சிந்தப் பின்வாங்

கேன்" என வீரிட்டெழுந்தாள். இதற்குள்ளாக மொகலாய சேனை அவளை வளைத்துக்கொள்ளவே இப் பவித்திரமான, தேகத்தை மொகலாயர்கள் தொடாதிருக்கக் கருதி, யானைப்பாகன் கையிலிருந்த கத்தியைப் பிடுங்கித் தன் மார்பில் தானே குத்திக்கொண்டாள். அவளுடைய மார்பிலிருந்து பீறிட்டெழுந்த இரத்த தாரையைப் பார்த்த வீர பாலகர்களின் உயிர் பறந்தது. துடிதுடித்தது. அந்தோ! பாரத மாதாவின் ஓர் விலையற்ற முத்து மண்ணோடு கலந்தது. அப்பொழுதுங் கோன்ட் வீரர்கள் பின்னடையாது ஒவ்வொருவராய் யுத்தஞ் செய்து வீரசுவர்க்க மடைந்தார்கள். சுதந்திரத்தை விடுத்துப் பாதந்திரத்தில் பிரியம் வைக்கவில்லை.

இதன் பிறகு நவாப் சௌராகட் கோட்டையையும் எதிர்த்தான். அங்கு பால்ய வீரநாராயணன் சண்டை செய்யத் தயாராகவிருந்தான். அவனும் இரண்டு மாதங்கள் வரை ஓயாது போர் புரிந்து சந்தோஷத்துடன் சுதந்திரத்திற்காக உயிர் நீத்தான்.

மத்ய பிரதேசமானது பாராதீனமெனுங் குழியில் விழுந்துவிட்டது. மகாராணியின் தேகம் எவ்விடத்தில் முடிவடைந்ததோ அவ்விடத்தில் அவளுக்கு வேண்டிய கிரிகைகள் செய்யப்பட்டன. யுத்தத்தின் பிறகு அவ்விடத்தில் ஓர் மேடை போட்டிருக்கிறது. இன்றும் அம் மேடை அங்கு இருக்கின்றது. அதில் யுத்தத்தினுடைய முழு விபரங்களும் வரையப்பட்டிருக்கின்றன. அப்பக்கஞ் செல்லும் யாத்ரீகர்கள் அருகில் குவிந்துகிடக்கும் பிரகாசமான கற்களில் சிலவற்றையெடுத்து மகாராணியின் ஞாபகார்த்தமாக அம் மேடையில் போட்டுச் செல்கிறார்கள். சிலர் அம் மகாராணிக்கு வீர பூஜையுஞ் செய்து வருகிறார்கள்.

மகாராணிக்குப் பின் அக் கோன்ட்வாலா ஜனங்கள் அப் பிரதேசத்தில் மிகக் குறைவாக விருந்து வந்தனர். அவர்களும் மொகலாயர்களால், மதம் மாற்றப்பட்டு மறைந்து போய்விட்டார்கள்.

---

1. உணர்ச்சியுடன் உண்மையாகச் சொல்லப்பட்ட ஒரு வார்த்தை ஒரு பெருஞ் சொற்பொழிவைவிட மேலானது.

2. நன்மை செய்வதே சமயத்தின் சிறந்த இலக்கணம்; சடங்குகளல்ல.
டிக்கன்சன்.

3. வார்த்தை, வலிமையுள்ள பொருள். அதைப் பேசினாலும் எழுதினாலும் மனிதன் அதற்கு அஞ்சுகிறான். அரசும் அதைக்கேட்டு நடுங்குகிறது.
பேல்லாக்.

4. எளிய வாழ்க்கையே சிறந்ததாகும். மகிழ்ச்சியைத் தேடாதார்க்கே அது எளிதில் கிடைக்கிறது.
—மேரி காரலி.

5. சித்தியடைய வேண்டுமென்று ஆத்திரப்படாதே. உனது இலட்சியத்தைத் தொடர்ந்து முன்னேறிச் செல்பவனைப்பற்றிக் கவலை கொள்ளாதே.
—ஷா.

ஸோவியத் ருஷியா.

திரு. ஸி. ஏ. பெருமாள் அவர்கள்.

மனித வாழ்க்கைக்கு ஏற்றதான இவ்வுலகக் கண்டங்களின் நிலப்பரப்பில் ஆறிலோர் பங்கு அமையப் பெற்றிருக்கும் ருஷியாவில் சரித்திரத்திலேயே நிகழ்ந்திராத ஓர் புதிய அரசியல் முறையை அந்நாட்டு மக்கள் கையாண்டு வருகின்றனர். ருஷியா தேசம் அமெரிக்க ஐக்கிய மாகாணங்களைவிட இரண்டரை மடங்கு பெரியது; இந்தியாவில் நாலரையி லோர்பாகம் கொண்டது. 1928-ம் வருடம் முதற் தேதியிலெடுத்த கணக்கின்படி அதன் விஸ்தீரணம் 80 லக்ஷம் சதுர மைலும் ஜனத்தொகை 14 கோடியே 96 லக்ஷம் மக்களுமாகும். ஐரோப்பாவிலுள்ள பெல்ஜியம் தேசத்தில் குடியேறியிருக்கும் ஜன நெருக்கத்தைப் போன்று ருஷியாவிலுள்ள ஸைபீரியாப் பிரதேசத்தில் மட்டும் குடியேறப்படுமானால் இவ்வுலகத்தில் வாழும் மக்கள் யாவரையும் அங்கு வாழச்செய்துவிடலாமாம்.

ருஷியா தேசம் இந்தியாவுக்குச் சமீபத்திலிருப்பது. இந்தியாவைப் போன்று அங்கும் பல விதமான மக்களும் பல் வேறு பாஷைகளும் பற்பல சமயங்களும் காணப்படுகின்றன. இரண்டு நாடுகளும் கைத்தொழிலில் ஆரம்பத் திசையை அடைந்திருக்கும் மகா பெரிய விவசாய நாடுகள். அத்துடன் இரண்டும் கல்வியில்லாக் கொடுமையிலும் கனத்த செல்வமில்லா நிலைமையிலும் பாதவிக்கும் பாமர நாடுகள். ருஷியாவில் வாழும் மக்கள் 149 விதமானப் பாஷைகளைப் பேசுகின்றனர். அங்கு 182 தேசங்களைச் சேர்ந்த பல வகுப்பார்கள் மத்திய அரசாங்கத்தின் ஜனநாயகப் பொறுப்பில் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். ஆறாயிரம் வருடங்களுக்கு முன் எகிப்து, பாபிலோன் ஆகிய தேசங்களில் நாகரீகமின்றி வாழ்ந்துவந்த மக்களைப்போன்று, எழுத்துக்களில்லாத பாஷைகளைப் பேசித் திரியும் எண்ணற்ற பாமர மக்களும் அங்குக் காணப்படுகின்றனர். அந்நாட்டில் மங்கோலியாவிலுள்ள மஞ்சள் நிற மக்களும், வடதுருவத்தைச் சேர்ந்த பனி உறை நாட்

டில் வாழும் எஸ்கிமோ ஜாதியாரும், காடுகளில் வேட்டையாடி நாடுகள் சுற்றித்திரியும், "ஜிப்ஸீஸ்" சாதியாரும், நவநாகரீகத்திற் சிறந்து விளங்கும் ஜெர்மானியர், வெள்ளை ருஷியர், அர்மேனியர், பின்னியர் ஆகிய மக்களுடன் கலந்து வாழுகின்றனர். இந்நிலை பெற்று விளங்கும் ருஷியா இன்று இவ்வுலகத்தார்கள் கண்டு அதிசயித்து ஆச்சரியப்படும் விதத்தில் பொதுவுடைமைக் கொள்கையோடமைந்த "ஸோவியத்"* முறையைத்தழுவி மக்களின் வாழ்க்கைத் துறைகளனைத்தையும் புரட்சி மயமாக்கிப் புத்தம் புதியதாக விளங்குகிறது. உலக மக்களும் அந்நாடு அடைந்துவரும் மாற்றங்களை மிகக் கவனமாகப் பார்த்து வருகின்றனர்.

பொதுவுடைமைக் கொள்கை

பொதுவுடைமைத் தத்துவம் "காரல் மார்க்ஸ்," என்பவரால் 1847-ம் வருடம் வெளியிடப்பட்டது. காரல் மார்க்ஸ் என்பவர் உலகமானது முதலாளிமார் கூட்டங்களின் அதிகார தோரணையிலகப்பட்டு ஏழைத் தொழிலாளர்களுக்கு எத் துறையிலும் உரிமையளிக்க முன் வரவில்லையென்றும், ஏழைகள் விமோசனமடைய வேண்டுமாயின் முதலாளிகள் கூட்டங்கள் அழியவேண்டுவதவசியமென்றும் கூறினார். தேசத்தின் செல்வங்கள் தனி மனிதருக்கு ஒருபோதும் உரிமையாயிருத்தலாகாதென்றும் பொது மக்கள் யாவரும் அதனைப் பகுந்து தத்தமக்கு வேண்டியவாறு கட்டுப்பாடான திட்டங்களின்படி இலாபங் கருதாது வேலைசெய்து அனுபவிக்க வேண்டுமென்றார். நாட்டின் செல்வம் முதலாளிமார்களின் ஆதிக்கத்திலிருந்து ஏழைகளின் சர்வாதிகாரத்திற்கு வர வேண்டுமாயின் மூன்று விதமான மாற்றங்கள் அவசியமெனக் கூறினார். முதன் முதலில் அவர் குறிப்பிட்டது முதலாளித்துவத்தை அடிமாளச் செய்தலாகும். இரண்டாவது அறியா மக்களை வழி நடாத்துவதற்கு சர்வாதிகாரி ஒருவர் தோன்றி அரசாங்கத்தைக் கைப்பற்றுவதென்பது. இந் நிலைமையில் முதலாளிமார்களின் கூட்டுறவு அமைப்புகள் தமது உரிமையைப் பாதுகாக்கும் நிமித்தம் கடும் போர் தொடுத்து நிற்குமென்றும், அதில் வெற்றி ஏற்படுவதற்கு ஏழைகளின் சர்வாதிகாரியாய் வருபவர் அஞ்சா நெஞ்சத்துடன் குரூர முறைகளைக் கையாண்டு விடாப்பிடியாக முதலாளித்துவத்தை அடக்கி ஒடுக்கி தொழிலாளர் திருப்தி படையும் வண்ணம் ஏழைகளின் குடியரசையும் வியாபார ஐக்கிய நிலையங்களையும் நிலைநாட்ட வேண்டுமென்றனர். மூன்றாவது

*"ஸோவியத்" என்பது ருஷிய மொழியில் "சங்கம்" எனப் பொருள்படும்.

நிலையில் முதலாளித்துவம் அடிமாண்டு போய்விடுமென்றும் அப்பொழுது மக்கள் யாவரும் ஒன்றுபட்ட கூட்டுறவில் லாபங் கருதாது, தேச நலத்திற்காகவும் புதிய முறையில் பொருளுற்பத்தி, செலாவணி, பண்ட மாற்றுதல் ஆகியவைகளை இனிது நிறைவேற்றிச் சகோதர ஐக்கியத்தோடு வாழ்ந்து வருவார்களென்றுங் கூறினர். இதுவே 1847-ம் வருடம் காரல் மார்க்ஸ் என்பவரின் நம்பிக்கையும் தத்துவமும் வாழ்க்கைத் திட்டமுமாயிருந்தது. அவரது சிஷ்யகோடிகளும் அக் கொள்கையின் நோக்கங்களை நாளடைவில் நன்கறிந்து நாட்டிடை நிலைநாட்டும்பொருட்டு தகுந்ததோர் தருணம் பார்த்துவரலாயினர்.

பொதுவுடைமைக் கொள்கையின் ஆதி வரலாறு.

இத்தகையதான பொதுவுடைமைத் தத்துவத்தைப்பற்றி உலகத்தாருக்குப் பகிரங்கமாகத் தெரியவந்தது தற்காலமேயாயினும் மக்களின் உள்ளத்தில் அது ஆதி காலந்தொட்டே இடம் பெற்று வந்திருப்பதாகப் பிரஞ்சு தேச சரித்திரம் அறிவிக்கிறது. இக் கொள்கையைப்பற்றிய வரலாற்றினை டாக்டர். ஹாரி டப்ளியூ லேயிட்லர் என்னும் ஓர் ஆசிரியர் ஆங்கிலத்திலோர் நூலை வெளியிட்டிருக்கிறார். * அவர் கிறிஸ்தவ வேதமாகிய பழைய ஏற்பாட்டில் காணப்பெறும் தீர்க்கதரிசிகளாகிய ஆமோஸ் (Amos), ஓசியா (Hosea) ஆகியவர்கள் கிறிஸ்து பிறப்பதற்கு எழுநூறு எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னரேயே இக் கொள்கையைப் போதித்தனரென்றும் அவர்கள் காலந்தொட்டு இந்நாள்வரை அக் கொள்கையின் தத்துவங்கள் பல மாற்றங்களை அடைந்திருக்கின்றனவென்றும் அறிவிக்கிறார். அத் தீர்க்கதரிசிகளுக்குப் பின் கிறிஸ்துவுக்கு 347 ஆண்டுகளுக்கு முன்னிருந்த கிரேக்க தத்துவ ஞானிகளாகிய பிளாட்டோ (Plato), மோர் (More), பேக்கன் (Bacon) ஆகியவர்களின் கனவுகளில் அது மிளிர்ந்ததென்றும், அப்பால் பிரஞ்சு தேச சமூக ஞானிகளாகிய பாபுவப் (Babeuf), கியாபெட் (Cabet), ஸேயின்ட் ஸைமன் (Saint Simon), பரியர் (Fourier), லூயிஸ் பிளான்க் (Luis Blanc), ப்ரௌதன் (Proudhan) ஆகியவர்களின் கிளர்ச்சிக் கொள்கையாக அது விளங்கிற்றென்றும், பின்னர் ஹெட்ஸ்கா (Hertzka), மாரிஸ் (Morris), பெல்லமி (Bellamy), வெல்ஸ் (Wells) ஆகிய பல தேயத்து அறிஞர்களது சிந்தனையிலும் அது குடி புகுந்திருந்ததென்றும் சொல்லப்படுகிறது. எவ்விதமாயினும் பொதுவுடைமைத் தத்துவம் என்று

* "A History of Socialist Thought," by Dr. Harry W. Laidler. (New York. Thomas Y. Crowell Company).

சொல்லப்படும் சமதர்மக் கொள்கை இத் தத்துவங்களைப் பிரசாரஞ் செய்த தலைவர்களது கருத்துக்களுக் கேற்ப "பாபியன் ஸோஷியலிஸம்" (Fabian Socialism) என்று சொல்லப்படும் போரைத் தடைப் படுத்தும் சமதர்மம், சங்க சமதர்மம் (Guild Socialism), ராஜீய சமதர்மம், (State Socialism), கிறிஸ்தவ சமதர்மம் (Christian Socialism) ஆதிய பல பெயர்களுடன் ஒவ்வோர் காலங்களில் விளங்குவதாயிற்று. இவ்வாறு அக்கொள்கை 57 விதமாகப் பரிணமித்து கடைசியாக 1927-ம் வருடம் சுத்தமான சமதர்மக் கொள்கையை ருஷியநாடு நிலைநாட்டியது.

புரட்சியின் வெற்றி

ஐரோப்பிய மகா யுத்தத்தின்போது ருஷியாவில் சமூக குழப்பங்கள் தலைதூக்கியதும் காரல் மார்க்ஸ் கொள்கைக்காரர்களுக்குத் தகுந்த தருணம் வாய்த்தது. ருஷியாவில் புரட்சியியக்கக்காரர்கள் வலிமையடைந்து தமது அதிகாரபீடத்தை 1917-ம் ஆண்டு நவம்பர் மாதம் கைப்பற்றினார்கள். அது முதல் 1921-ம் வருடம் ஆகஸ்டு மாதம் வரையிலும் மகா பயங்கரமான கொடுஞ் செயல்கள் நாட்டிடைத் தோன்றி ருஷியாவின் இராஜ குடும்பத்தையும் இல்லாதொழித்துத் தனவந்தர்களின் ஆதிக்கத்தையும் அடிமாளச்செய்து எங்கெங்கு பார்த்தாலும் புரட்சி மயமாகவே விளங்கிற்று. அப்பால் பொதுவுடைமைக் கொள்கைக்காரர்களின் குரூரத்தனமான செய்கைகள் ஒருவாறு சலனமடைந்து "லெனின்," என்பாரது தலைமையில் "புதிய பொருளாதார முறை," என்ற திட்டத்தின்படி நாட்டைச் சீர்திருத்தி யமைப்பதற்காகப் பெருமுயற்சி யெடுக்கப்பட்டது. இக்காலம் ஆகஸ்டு 1921-ம் ஆண்டு முதல் அக்டோபர் 1928-ம் வருடம் வரையுமெனக் குறிப்பிடலாம். இது முதற்றான் ருஷியா தான் கொண்ட கொள்கையில் நம்பிக்கையும் நிம்மதியுமடைந்து பெருந் திட்டங்களை நிறைவேற்றிவைப் பதில் வெற்றியும் பெற்று, எத்தனையோ நூற்றாண்டு காலங்களாகத் தத்துவ ஞானிகளும் பொருளாதார நிபுணர்களும் கனவு கண்டு வந்த சமதர்மக் கொள்கையின் உயரிய இலட்சியங்களை உலக மக்களுக்கு நிதர்சனமாகக் காட்டுவதற்கு இலக்காகியது.

தற்கால ருஷியா தனது தேசீய இலக்ஷியங்களிலும் சர்வதேச விஷயங்களிலும் முனைந்து நின்று செய்துவரும் ஆராய்ச்சி அனுபவங்கள் உலக மக்கள் பால் நற்பயனையோ அல்லது தீப்பயனையோ விளைவிக்க ஏதுவா யிருந்தாலும், அது சரித்திர காலந்தொட்டு சமரசநிலை ஏற்படுத்த முடியாத சமூகச் சிக்கல்களையும் சச்சரவுகளையும் அனுபவ சாத்தியமாக ஆராய்ந் தறிந்து முடிவு செய்யும் ஓர் கலைக்

கழகமாய் இன்று இவ்வுலக மத்தியில் விளங்கிவருவது கண்கூடாகும். எவ்விதமாயினும் ருஷியாவின் பொதுவுடைமை யரசு பல மாற்றங்களை சில வருடங்களுக்குள் உண்டுபண்ணி யிருப்பதை உலக மக்களால் மறுக்க இயலவே இயலாது. ருஷியாவில் பொதுவுடைமை யரசு ஆரம்பித்து இப்போது பதின்மூன்று வருடங்களே ஆகியுள்ளன. இவற்றிலும் முதல் ஐந்து வருடங்கள் அந்நிய நாடுகளோடும் உள்நாட்டு எதிரிகளோடும் செய்துவந்த போரிலும், பஞ்ச நிவிர்த்திக்காகப் பாடுபட்டுவந்த கஷ்டங்களிலுமே சென்றது. எங்கெங்கு பார்க்கினும் எண்ணிறந்த எதிரிகள் அந் நாட்டை எதிர்த்து அங்குச் சென்றுகொண்டிருந்த உணவுப் பொருள்களையும் தடைசெய்து பலமாகப் போர்தொடுத்து நின்றனர். வருடக் கணக்கில் புரட்சி இயக்கம் தவித்துக்கொண்டே யிருந்தது. அந் நாட்டின் பொருளாதார நிலையும் சிதறிச் சீரழிந்தது. சென்ற எட்டு வருடங்களில்தான் அது சிறிதளவு அமைதி பெற்று தனது வருமானத்தைச் சரிபடுத்தி சீர்திருத்தத் துறையிலிறங்க ஏதுவாயிற்று. இக் காலங்களிலுங்கூட ஐரோப்பிய தேசங்களின் பகைமையையும் அமெரிக்காவின் பணத் திமிரையும் பொருட்படுத்தாது தன்னைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டியதாயிருந்தது. தனது சீர்திருத்தச் செலவுக்குப் போதிய பொருளின்றி கஷ்டப்பட்ட காலத்திலும் அந்நிய நாடுகள் அதற்குக் கடன் கொடுத்துதவவும் மறுத்துவிட்டன. அன்றியும் மகா யுத்தத்தின்போதும் அரசாங்கத்திற்கு விரோதமாகக் கிளம்பிய இரண்டு கிளர்ச்சியின் போதும், உள்நாட்டுச் சண்டையிலும் பஞ்சத்திலும் அங்கு ஒரு கோடி மக்கள்வரை மாண்டுபோயினர். இதனால் பொறுக்க இயலாத பொருளாதார இன்மை ஏற்பட்டது. எட்டு வருடகாலப் போரிலும் பஞ்சத்திலும் ருஷியா அனுபவித்த துன்பங்களைப்போல் எந்தத் தேசமும் தற்காலவுலகில் அனுபவித்ததில்லையென உலக சரித்திர ஞானிகளே கூறுகின்றனர். எனவே இந் நிலைமையில் அவ்வேழை நாடு இந்த எட்டு வருடங்களில் அபிவிருத்தி யடைந்திருக்குமானால் அது இக் கஷ்டங்களை யெல்லாம் பொருட்படுத்தாமலே அடைந்ததெனக் கூறவேண்டும். அதன் உண்மை நிலையை அறிந்து கூறுகிற ஒவ்வொருவரும் அது அபிவிருத்தி யடைந்துவிட்டதென்றும் எட்டு வருடங்களாக நடந்தேறிய மகா யுத்தத்திலும் பஞ்சத்திலுங்கொண்ட நஷ்டங்களையுங்கூட அது பெரும்பாலும் சரிப்படுத்தி வருகிறதென்றும் கூறுகின்றனர்.

ருஷியா தனது ஒவ்வொரு துறையிலும் செய்து முடித்திருக்கும் சீர்திருத்தப் போங்குகளனைத்தையும் ஒரே கட்டுரையில் விளக்கிக் காட்டுவது எளிதன்று. உலக தேசங்களில் பெரும்

புகழ் படைத்த எத்தனையோ சரித்திர ஆசிரியர்களும் சமூக அபிமானிகளும் இந் நாட்டுக்கு வருடா வருடமும் விஜயம்செய்து, தாம் நேரில் கண்டு தெரிந்த அதியற்புதமான மாற்றங்களை ஒவ்வொரு துறை பற்றியும் எண்ணிறந்த நூல்களில் வெளியிட்டு ருஷிய இலக்கியச் செல்வங்களையே சிறப்பித்துள்ளார்கள். அதன் அரசிய லமைப்பு, சமூகக் கட்டுப்பாடு, அந்நிய நாட்டுச் சம்பந்தம், பொருளாதார முறை, கிராம வாழ்வு, குடும்ப நிர்வாகம், கல்வி அபிவிருத்தி, வியாபாரக் கூட்டுறவு, அரசாங்கத்தில் பொது மக்களின் உரிமைகள், தேசத்தின் சிறுபான்மைத் தொகுதிகள், கலை வளர்ச்சி, பெண் மக்கள் முன்னேற்றம் ஆகிய ஒவ்வொன்றும் புதிய புதிய கருத்துக்களையும் முறைகளையும் உலக மக்களுக் கெடுத்தூட்டுவனவா யிருக்கின்றன. அவை ஒவ்வொன்று குறித்தும் "பாரதி" வாசகர்களின் பொருட்டு தனித்தனி கட்டுரைகளெழுத வெண்ணியிருப்பதால், தற்போது அதன் பொதுவான அபிவிருத்தியை மட்டும் இங்குக் குறிப்பிட விரும்புகின்றேன்.

சீர்திருத்த நிலை

டாக்டர் ஷெர்வுட் எடி என்பவர், மகாத்மா காந்தியின் உண்மை நண்பர்களில் ஒருவர். கீழ் நாடுகளுக்கு ஒய். எம். ஸி. ஏ. காரியதரிசியாக விளங்குகிறவர். அவர் தற்போது உலக சுற்றுப் பிரயாணஞ் செய்து வருகின்றார். ருஷியாவின் நிலைமையை நிலைமையை அவர் நேரில் கண்டு எழுதுவதாவது:— எட்டு வருடங்களுக்கு முன்னர் ருஷியாவின் கைத்தொழி லுற்பத்தி, அது யுத்தகாலத்திற்கு முன் எய்தியிருந்த நிலைமையில் பத்திலொரு பங்குதானு மில்லாத அத்தகைய கீழ் நிலையை அடைந்திருந்தது. சென்ற ஆண்டுகளில் அது அந்நிய நாடுகளுக்கு ஒரு காசுகூட கடன் படாது 1913-ம் வருடத்து நிலைமையிலிருந்து 100-க்கு 125 பங்கு அதிகப்பட்டு விட்டதெனக் கூறப்படுகிறது. சென்ற மூன்று வருடங்களில் அத் தேசத்தின் செல்வம் 100-க்கு 34 பங்கு பெருகியும் தேசத்தின் வருமானம் இரண்டு வருடங்களில் 100-க்கு 50 பங்கு அதிகப்பட்டும் காண்கிறது. ருஷியாவில் கைத்தொழி லபிவிருத்தியையிட்டும் விவசாய முன்னேற்றத்தையிட்டும் "ஐந்து வருடத் திட்டம்," ஒன்று தயாரித்து 1928 முதல் வேலைசெய்து வரப்படுகிறது. இதில் அவர்கள் தற்போதிருக்கும் நிலைமையைவிட கைத்தொழில் இரு மடங்கு பெரிதாகக்கூடுமென்றும் விவசாய வருமானம் 100-க்கு 34 பங்கு இன்னும் வளர்ந்தோங்கு மென்றும் நம்புவதாகக் கூறுகின்றனர். ருஷியாவின் கதி மோக்ஷம் மின்சார வுற்பத்தியிலேயே யுளதென நம்பிக்கை கொண்ட, லெனின் என்பவரது மின்சார வுற்பத்தித் திட்டம்

சென்ற ஆறு வருடங்களில் மும் மடங்கு பெருகி அதன்மூலம் விவசாயச் சீர்திருத்தமும் விஞ்ஞான ஆராய்ச்சி முறையில் செவ்வனே நடைபெற்று வருகின்றது.

ஐரோப்பிய ருஷியாவில் 100-க்கு 97 பங்கு நிலங்களும் குடியானவர்கள் கைகளிலேயே ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. ஸார் சக்கரவர்த்தியின் எதிர்ப்பு இருந்த காலத்தில் அங்கு கூட்டுறவு சங்கங்களில் 20 லக்ஷம் அங்கத்தினர்களே யிருந்தனர். இப்பொழுது 3 கோடி 50 லக்ஷம் அங்கத்தினர்கள்வரை அதிகப்பட்டிருப்பது உலக தேசங்களிலேயே முதன்மை ஸ்தானம் அடையப் பெற்றதாகும். சென்ற வருடத்தில் கூட்டுறவு சங்கங்களின் அங்கத்தினர்கள் ருஷியாவின் மொத்த வியாபாரத்தில் 100-க்கு 62 பங்கும் செய்து முடித்தனர். தேசத்திலுள்ள எல்லா நிலங்களும் குடியானவர்களின் பாதுகாப்பில் விடப்பட்டு தனிப்பட்டவர்களோ அல்லது ஒன்று சேர்ந்த ஸ்தாபனங்களோ வேலை செய்வதில் அரசாங்கம் மேற்பார்வையிட்டு வருகிறது. ருஷிய தேசத்து விவசாயிகள் உலகத்திலுள்ள மற்றெல்லாத் தேசங்களையும்விட மிகவும் ஏழ்மைப் பட்டவர்கள். அவர்கள் எப்பொழுதும் அதிக வரியும் செலுத்த வேண்டியவர்களாயிருந்தனர். ஆனால் தற்போது அவர்களது நிலைமைகள் யாவும் நன்கு பரிசீலனை செய்யப்பட்டு அவர்களில் 100-க்கு 35 பேர்கள் வரியே யின்றி வாழ்வு நடாத்த அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். அங்கு தொழிலாளர்கள் இப்பொழுது தேசம் தமக்கே சொந்தமா யுள்ளதென்ற உணர்ச்சியை அடைந்து விட்டனர். இதனால் சரித்திரத்திலேயே அவர்கள் ஒரு புது வாழ்வை சிருஷ்டித்துப் பெருமை யடைந்து வருவதாகக் கூறலாம். ருஷியாவில் எக்காலத்திலுமில்லாத நிலையில் தொழிலாளர்கள் தற்பொழுது நல்ல உடை உடுத்தியும் நல்ல உணவு உண்டும் அதிக வருமானம் அடைந்தும் வருகின்றனர். தேசத்தில் ஓரிடத்திலாவது வறுமை பஞ்சத்தின் கொடுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் காணப்படுவதில்லை. கைத்தொழிற் சாலைகளில் சிறுவர்கள் வேலை செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. பெண்மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கேற்ற சட்டங்களும் நியாயங்களும் எப் பாகத்திலாவது குறைந்திருப்பதாகவும் தெரியவில்லை. உண்மையில் தொழிலாளர்கள் எண்ணற்ற விஷயங்களில் பூரண உரிமை யடைந்து ருஷியாவில் தொழிலாளர்களது அரசியலைப் புதிதாக நிலைநாட்டி வருவது மிகவும் பெருமை பாராட்டத் தக்கதாகும். மகா யுத்தம் முடிவடைந்து கொடும் பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் பெற்றோர்களையும் பிறந்த வீடுகளையுமிழந்து வெளியில் விடப்பெற்ற 10 லட்சம் குழந்தைகள் நாடெங்கும் பரிதபித்துக்கொண்டிருந்தன. சென்ற ஆண்டிலோ அப் பெருந் தொகை 25 ஆயிரத்திலும் குறைந்து காணப்பட்டது.

இப்பொழுது ஒருசிறிது இல்லையென்று சொல்லும் நிலைமையை அடைந்துவிட்டது. அக் குழந்தைகள் யாவும் 200 மாகாணங்களில் கவனிக்கப்பெற்று அவைகளுக்கு வீடுகள் அளித்தும் விவசாயப் பண்ணைகளில் வேலைகள் கொடுத்தும் காப்பாற்றிவிடப் பெற்றிருக்கின்றன.

ருஷியா கல்வி அபிவிருத்தியில் அடைந்திருக்கும் வெற்றி மிகவும் மகத்தானது. இப்பொழுது அங்கு கலாசாலைகளில் படித்துவரும் மாணுக்கர்களின் தொகை 1,15,00,000 எனச் சொல்லப்படுகிறது. அதாவது யுத்த காலத்திற்கு முன் இருந்ததைவிட ஒன்றரைப் பங்கு அதிகமாகும். கலாசாலைகளில் கல்வி கற்கத் தகும் வயதை யடைந்துள்ள மக்களில் 100-க்கு 70 பங்கு சிறுவர்களும் கலாசாலைகளிலேயே யிருப்பதாகக் கூறப்படுகிறது. கல்வித் துறையில் அவர்களுக்குக் கிடைத்த வெற்றியின் பயனால் இப்பொழுது எழுத வாசிக்கத் தெரிந்த ஆடவர்கள் இரு மடங்கு பெருகியும் பெண்கள் மும்மடங்கு அதிகமாகியும்விட்டனர். தேசத்தில் வளங்கும் பற்பல பாஷைகளின் மூலம் அறியாமையை அகற்றுவதற்காக அவர்கள் கையாண்டு வரும் முறைகளும் முயற்சிகளும் அதிசயத்தையே விளைவிப்பனவாகும். டாக்டர் ஷெர்வுட் எடி அவர்கள் ருஷியா கொண்டுள்ள பொதுவுடமைத் தத்துவங்களான, மனிதனுடைய உரிமையை மனிதன் கொள்ளை யிடுவதை அடியோடு நசிப்பித்தல், சமூகத்தில் தனிவகுப்பார்கள் கொண்டுள்ள ஆதிக்கத்தை அழித்தல், எல்லாவித இரகசிய உடன்படிக்கைகளையும் நிராகரித்தல், ஆசியாவிலிருக்கும் இலக்ஷக்கணக்கான தொழிலாளர்களுக்கு உரிமையளித்தல், இதர நாடுகளை அடக்கி ஆண்டுவரும் தேசங்களின் ஆதிக்கவுணர்வை மடியவைத்தல், எல்லோருக்கும் ஒன்றுபோல் இலவசமாகக் கல்வி அளித்தல், தேச மக்கள் யாவருக்கும் சமய சமூக வேற்றுமையின்றி சமத்துவம் நல்குதல், ஒரு தேசத்தோ டொருதேசம் போர் தொடுப்பதற்கு எவ்வித மார்க்கமும் இல்லாதாக்குதல், உலகமெங்கும் கூட்டுறவின் பயனால் பொதுவுடமை ஸ்தாபனம் நிறுவி மக்கள்பால் ஒருவரோ டொருவர் உண்மையான சகோதரவுணர்வும் சுதந்திரவுணர்வும் பெருகச் செய்தல் ஆகியவைகள் உண்மையிலேயே பெருமைப்படத் தக்கதென்றும், ஆனால் மனிதன் நம்பக்கூடாத விதத்தில், தனது தற்காப்பின் நிமித்தம் இராணுவ பலத்தை மிக்கவாறும் பெருக்கி, தனக்கு எதிராகத் தோன்றும் எல்லாவிதக் கக்ஷிகளையும் இராணுவ பலத்தால் அச்சுறுத்துவது தகாத காரியமென்றும் கூறுகிறார்.

நம் நாட்டின் முப்பெரும் லக்ஷியங்கள்.

திரு. *P. V.* பத்மநாபன் அவர்கள், B. A., B. L.

நீர்வளமும், நிலவளமும் குடிவளமுமற்று வஞ்சகர் தம் நெஞ்சகம் போல் பாழடைந்து கிடக்கும் 'சஹாரா' என்னும் பாலை வனத்தில் பிறந்த ஓர் ஆப்ரிக்கன் கூட தன் நாட்டைப் பொன்னாடாகக் கருதி உள்ளம் பூரிப்பான் அல்லவா? காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சாய்த் தோன்றுதல் இயல்பாதலால் மனிதப் பிறவி எய்தியுள்ள நாம் ஒவ்வொருவரும் நம் நாட்டினிடத்திலும் நம்முடன் பிறந்து வளர்ந்துவரும் நம் நாட்டுச் சகோதர சகோதரிகளிடத்திலும் அன்பும், அபிமானமும் வைத்து அவர்களைச் சீராட்டிப் பாராட்டி வருவதில் என்ன ஆச்சரிய மிருக்கின்றது? இவ்வுணர்ச்சியினால் தூண்டப்பெற்றே, ஆங்கிலக் கவியரசர் ஷேக்ஸ்பியரும், "இங்கிலாந்தே, உன் எல்லாக் குறைகளுடனும் நான் உன்னை நேசிக்கின்றேன்" என்று கூறுகின்றார். ஆதலால், தேசாபிமானம், நம் நாட்டிற் பிறந்த ஒவ்வொருவருக்கும் பிறப்புரிமையே.

ஆயினும், நம் நாடு பிற நாடுகளைப்போல் அறிவு ஆற்றல்களிலும், கல்வி கேள்விகளிலும், செல்வத்திலும், நிலையான சுகவாழ்விலும் உலகமாகிய பந்தயக் களத்தில் முன் அணியில் நிற்கவில்லை என்பது எவரும் எளிதில் மறுக்க இயலாத ஒரு கலப்பற்ற உண்மை. நம் நாடுமட்டும் ஏன் முன்னேற்ற மெய்தாமல் நாளுக்குநாள் பிற்போக்கடைந்து வரவேண்டும்? நம் நாட்டில் ஔவை, திருவள்ளுவர், கம்பர், புகழேந்தி முதலிய வரகவிகளும், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், ஞானசம்பந்தர் முதலிய சமய குரவர்களும், சேர சோழ பாண்டியர்கள், பல்லவர், சாளுக்கியர் முதலிய நரேந்திரர்களும் பிறந்து வளர்ந்து புகழுடம் பெய்தவில்லையா? அவ்வாறிருக்க, நாமும் நம் நாடும் இப்பொழுது அன்னியர் நகைத்து இகழும் நிலைமையில் இருப்பது ஏன்? பண்டைக் காலத்தில் நாகரீக உலகில் நடு நாயகமாய் விளங்கிய எகிப்து, கிரீஸ், கார்தேஜ், ரோம் முதலிய சரித்திரப் பிரசித்திபெற்ற மேற்றிசை நாடுகள் அனைத்தும் தற்காலத்தில் வெறும் பூகோள

சாஸ்திரச் சொற்களாய்மட்டும் இருக்கின்றன. அவற்றைப் போலவே, திராவிட நாகரீகத்தில் ஒரு காலத்தில் உச்ச நிலையடைந்திருந்த நம் செந்தமிழ் நாடும் நிகழ் காலத்தில் சொல்லளவில் மாத்திரம் நிலைபெற்றிருக்கின்றது. நம் நாடு தற்காலம் எய்தியிருக்கும் இழிந்த நிலைக்குக் காரணங்கள் யாவை? அது முன்னொரு காலத்தில் தான் பெற்றிருந்த உன்னத பதவியை மீண்டும் வகிக்க இயலுமா? அது சாத்தியமாயின் அதை நிறைவேற்றுதற்கு இன்றியமையாத சாதனங்கள் யாவை? இவைபோன்ற பல கேள்விகளை நிகழ்த்தி அவை யொவ்வொன்றுக்கும் இயன்றவரையில் விடை பகர முயல்வதே இச் சிறு கட்டுரையின் நோக்கம்.

பிரான்ஸில் கடந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் நிகழ்ந்த இராஜீயப் புரட்சியின் இறுதியில் ஸ்தாபிக்கப்பெற்ற குடியரசின் அடிப்படையான தத்துவங்கள், சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பவைகளே. அமைதியையே என்றும் விரும்பும் நம் நாட்டு ஜன சமூகமும் புத்துயிர்பெற்று பிற நாடுகளால் மதிக்கப் பெற வேண்டுமானால் அது மேல்கூறிய மூன்று தத்துவங்களை அஸ்திவாரமாகக் கொண்டே புத்துருவுடன் அமையவேண்டும். புரட்சிக் காலத்தில் உதவிய உன்னதத் தத்துவங்கள் அமைதி நிலவும் இக் காலத்திலும் நமக்கும் பயன்படும். வன்மை பொருந்திய கடைக்கால் இன்றிக் கட்டப்பெறும் பெரிய மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும், கோட்டைக் கொத்தளங்களும் நீடித்திரா என்பது சிற்பநூற் புலவர்கள் கண்டறிந்த சிறந்த உண்மை. அதைப்போலவே, உயரிய பழக்க ஒழுக்கங்களைக் கடைப்பிடித்து நன்னெறியில் செல்லாத ஜன சமூகம் சிறிது சிறிதாய் க்ஷீணித்து முடிவில் பண்டைக் காலத்து எகிப்திய அரச வம்சத்தைப்போல் இருந்த இடம் தெரியாமல் அழிந்துபடும் என்பதில் ஐயமில்லை. ஆதலால், நமது ஜன சமூகத்தை முற்றிலும் மாற்றிப் புதிதாய் அமைக்கப்புகும் ஜனசார சீர்திருத்தத் தலைவர்கள் கருத்திற் கொள்ளவேண்டிய இலக்ஷியங்கள் மேற்கண்ட சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் சீரிய தத்துவங்களே. இவைகளே நம் நாட்டின் உண்மையான இலக்ஷியங்கள். இவற்றைப் பின்பற்றி யொழுகினால் மட்டுமே நம் நாட்டின் எதிர்கால வாழ்வு இன்ப மயமாய்த் திகழும் என்பது திண்ணம்.

சுதந்திரம் என்னும் சொல்லுக்கு முடிந்த பொருள் என்ன? சுதந்திரமும், சுயேச்சையும் ஒன்றா? வேறா? வேறாயின், அவற்றுக்குள்ள பேதம் யாது? சுதந்திரமாவது, சுக வாழ்விற்கு இன்றியமையாத பற்பல சட்ட திட்டங்களுக்கு அடங்கி அவ் வாழ்விற்குரிய எல்லா உரிமைகளையும் எவ்வித இடையூறுமின்றி அனுபவிக்கக்கூடிய பதவியைத்தான் சுதந்திரமென்பது. மனம் போனவா

றெல்லாம் ஆடிப்பாடிக் கூடிக்குலாவிக் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்றெண்ணிப் பின் விளைவதைச் சிந்தியாமல் தன்னையும் மீறித் தலைவிரி கோலமாய் ஓடும் மிருக சுபாவமே சுயேச்சையாகும். ஆதலால், சுதந்திரத்திற்கும் சுயேச்சைக்கும் இருக்கும் வேற்றுமை மலைக்கும் மடுவுக்கும் உள்ளதே. பகுத்தறிவு படைத்த மனிதன் தன் உயிரினும் பெரிதாய் மதிக்கும் இச் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் பொருட்டுப் புரிந்த போர்களே உலக சரித்திரத்தில் மலிந்து கிடக்கின்றன. சிறப்பாகப் பெண்மக்களுக்குக் கற்பு எவ்வளவு சிலாக்கியமானதோ அவ்வளவு (பொதுவாகக் கூறுமிடத்து) சுதந்திரம் ஆண் பெண் இரு பாலாருக்கும் இன்றியமையாதது. சுதந்திர வேட்கையினால் தூண்டப் பெற்ற சுத்த வீரர்கள் மனைவி மக்களையும் மறந்து பொன்னையும் பொருளையும் இழந்து அவசியம் நேரிடும் பொழுது உயிரையும் வழங்கப் பின் வாங்கமாட்டார்கள். அவர்களே உண்மைச் சுதந்திர வாழ்க்கைக்கு அருகர்கள். அவர்களே உண்மைத் தேசாபிமானிகள். சுதந்திரப் பிரியர்களிடத்தில் சுயநலத் தியாகமும், பொதுநல விருப்பமும் வெள்ளிடை மலைபோல் விளங்கும். நம் நாட்டில் சுதந்திர உணர்ச்சி பெருகுவதற்கு அன்னியர் ஆட்சி ஓர் இடையூறென்று சொல்வதற்கில்லை; சிந்தித்துப் பார்க்குமளவில் அதைச் சுதந்திரப்பயிருக்கு ஏற்ற சிறந்த உரமென்றே கூறலாம். அடிமை வாழ்விலிருந்து தான் சுதந்திர உணர்ச்சி சிறிது சிறிதாய் எழும்பக்கூடும். ஆனால், நம் சுதந்திர வாழ்க்கைக்கு உண்மையான பகைவர்கள் நாமே. ஏனெனில், நம்மில் பாதித்தொகையினராகிய பெண்மக்களும், நம்மில் ஒரு பகுதியினராகிய ஒடுக்கப்பட்ட வகுப்பினரும் சுதந்திர பங்கராய் இருப்பதற்குப் படித்த வகுப்பினர் எனத் தற்பெருமை பாராட்டிக்கொள்ளும் நாமே பொறுப்பாளிகள். 'கல்லாத பேர்களே நல்லவர்கள்' என்ற தாயுமானவரது கூற்று படித்த வகுப்பினரைப் பொறுத்தமட்டில் முற்றிலும் பொருத்தமாகவே இருக்கின்றது. நாம் நம்மின் மெலிந்தாரது சுதந்திரத்தை யபகரித்ததனால் தான் நம்மின் வலியாரிடத்தில் நமது சுதந்திரத்தைப் பறி கொடுத்துப் பரதவிக்கின்றோம். களர் நிலத்தில் சிறந்த விதையை மட்டும் விதைத்து விட்டு நல்ல அறுவடையை எதிர்பார்ப்பது எவ்வளவு மதியீனம்? அதுபோலவே, சுதந்திர ஹீனர்களாகிய நமது மனைவியரிடத்தில் சுதந்திரப் பிரியர்களாகிய நமக்குப் பிறக்கும் புதல்வர்களே சுதந்திர வீரர்களாய் விளங்குவார்கள் என்பது என்ன நிச்சயம்?

ஆதலால், சுதந்திரப் பயிர் தழைத்தோங்க வேண்டியதற்கு நாம் என்ன செய்யவேண்டும்? நூற்றுக் கணக்கிலும் ஆயிரக் கணக்கிலும் தொண்டர்களைத் திரட்டவேண்டும். அவர்கள் கிராமங்கள்

தோறும் சென்று சுதந்திர வுணர்ச்சியைப் பிரசார வாயிலாய் மக்கள் மனதில் அமோகமாய் எழுப்பவேண்டும். ஆரம்பத்தில் இம்முயற்சிக்குப் பல இடையூறுகள் விளையக்கூடும்; தோல்வியும் நேரிடக் கூடும். அநேக நூற்றாண்டுகளாய் அழுந்திக் கிடக்கும் அஞ்ஞான இருளை யறவே அகற்றி ஞான ஒழியைப் பரப்புவது எளிதில் நிறைவேறக்கூடிய காரியமா? போர் முகத்தில் வெற்றி தோல்விகள் நேரிடுவது இயல்புதானே? போர்க்களத்தில் எதிரிக்கு முதுகு காட்டி யோடாமல் நின்ற நிலையிலேயே நின்று வெற்றியுடன் மீள்வது அல்லது மாள்வது என்னும் வீர மொழியே சுத்த வீரர்களிடத்திலிருந்து நாம் எதிர் பார்க்கக்கூடியது. வழக்கத்துக்கும், பழமைக்கும் முரண்படக்கூடிய நூதனக் கொள்கைகளை மக்கள் மனதில் வேரூன்றச் செய்ய முயலும்போது பிராணபத்தும் விளையலாம். அதற்கும் அஞ்சாமல் உழைப்பதே ஆண்மை. கௌதம புத்தர், இராஜ போகத்தை வெறுத்துத் துறவியாகவில்லையா? கிறிஸ்துநாதர், சிலுவையில் அறைபட்டு உயிர் துறக்கவில்லையா? மஹமது நபி, மெக்காவிலிருந்து மெடினாவிற்கு ஓடவில்லையா? இராஜாராமர், சமூக சீர்திருத்தத் துறையில் ஈடுபட்டு அரும் பாடுபடவில்லையா? தயானந்தர், விஷமூட்டப்பெற்று இறக்கவில்லையா? இன்னும் எண்ணிறந்த வீர புருஷர்கள் தத்தம் உடல் பொருள் ஆவி மூன்றையும் தத்தம் கொள்கைகளை நிலை நிறுத்தும் பொருட்டு வழங்கவில்லையா? ஆகவே, நமது வீரத் தொண்டர்கள் தாம் மேற்கொண்ட அரிய பெரிய திருப்பணிகள் பொருட்டு எவ்வித துணிகரமான தொழிலையும் அஞ்சா நெஞ்சுடன் செய்து முடிக்க முன்வர வேண்டும். சுதந்திரத்தைச் சொல்லளவில் போதித்து ஏட்டுச் சுரைக்காய் ஆக்கிவிடாமல் அதைச் செய்கையிலும் கையாள்வதற்கு ஏற்ற சௌகரியங்களை அமைத்துத் தரவேண்டும். ஆங்காங்கு சுதந்திர நிலையங்களை நிறுவி அவற்றுக்குச் செல்வம், செல்வாக்கு, கல்வி முதலியவைகளிற் சிறந்த பெரியோர்களை அந்த நிலையங்களுக்குத் தலைவர்களாகவும், காரியதரிசிகளாகவும், நிருவாகசபை யங்கத்தினர்களாகவும் ஏற்படுத்தி அவர்களைக் கொண்டு அப்போதைக்கப்போது பொதுக் கூட்டங்களும் மஹா நாடுகளும் கூட்டி அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்திச் சுதந்திரத்தை மக்களுக்கு வழங்க வேண்டிய பற்பல தீர்மானங்களை நிறைவேற்றி அவற்றைக் காலக்கிரமத்தில் செய்கையிலும் கொண்டு வரவேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். கருத்தொத்த காதலனும் காதலியும் தாம் வெவ்வேறு குலத்தினராயினும், மதத்தினராயினும் பதவியினராயினும், நாட்டினராயினும் கடிமணம் புரியவும், இல்வாழ்க்கையில் இன்புற்றிருக்கவும் சுதந்திரம் வழங்கப்பெறல் வேண்டும். பர்த்தாவை யிழந்த பால்ய விதவைகள் மறுமணம் புரியச் சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும். இறைவன் கழலிணைகளில் ஈடுபட்டிருக்கும் மெய்யன்பர்கள் தத்தம் சமய நெறிகளில் விமலனை வழிபட்டேத்தச் சுதந்திரம் பெறவேண்டும். ஒத்த அறிவும், ஒத்த நலனும், ஒத்த பண்பும் படைத்த நண்பர்கள் குலம், மதம், நாடு, நிறம், பால் முதலிய அம்சங்களில் மாறுபட்டவராயினும் உடனுண்ணவும், உடன் பிறந்தாரைப் போல் வேற்றுமை யின்றி அன்னியோன்னியமாய்ப் பழகிப் புளகாங்கித மெய்தவும் சுதந்திரம் அடைய வேண்டும். இவ்வாறு, எல்லாத் துறைகளிலும் மக்களுக்குச் சுதந்திரத்தை வழங்கி நாடு முழுதும் சுதந்திர மணம் கமழ்ந்தால் மட்டுமே நமது ஜன சமூகம் புத்துயிர் பெற்றுப் புது வாழ்வில் திளைக்கக்கூடும்.

(வரும்)

ஆசிரியக் குறிப்புகள்.

காங்கிரஸ்

அகில இந்தியாவின் மாபெரும் சபையாம் காங்கிரஸை ஒவ்வொரு இந்தியரும் ஆதரிக்க வேண்டியது கடமையாகும். இவ்வளவு பெருமையுடன் கூடிய, அதிகமான அங்கத்தினர்கள் கொண்ட சங்கம் இந்தியாவில் வேறு கிடையாது. ஏதோ சில குறைகளிருந்தாலும் அவைகளைத் திருத்தவேண்டியது ஒவ்வொரு இந்தியனது வேலையாகும். அவைகளுக்காகக் காங்கிரஸை அனுதரவு செய்தல் சரியன்று. காங்கிரஸ் சபையே இந்தியாவுக்கு விடுதலை கொடுக்கப் போகிறது. இனியும் வேறு ஸ்தாபனம் இருந்தால் அறிவியுங்கள்.

கதர்

கதர் இயக்கம் எவருக்கும் விரோதமாக ஏற்படுத்தவில்லை. துணி உற்பத்தி செய்தல் குடிசைத் தொழில்களில் ஒன்று. பொருளாதார அபிவிருத்திக்கு இது இந்தியாவிற்கு அவசியம் வேண்டி யிருக்கிறது. இயந்திரங்களுக்கு விரோதமா விரோதமில்லையா என்பதைப் பற்றிக் கவனிக்காது, நாட்டின் அபிவிருத்திக்கு நம் நாட்டுக் கதர் அனுகூலமா? என்பதைப் பற்றி ஆலோசிக்க வேண்டுகிறோம். கதர் உடுத்துவதால் எந்த இந்தியருக்கும் எவ்விதத் தீமையுமே கிடையாது. சிலர் கதர் இயக்கத்திற்கு ஏன் விரோதமாக யிருக்கிறார்களென்று எமக்குத்

தெரியவில்லை. இந்திய சகோதர சகோதரிகளே! கதரை ஆதரியுங்கள்; அணியுங்கள்; ஏழைச் சகோதரர்களைக் காப்பாற்றுங்கள்; நாட்டின் செல்வத்தைப் பெருக்குங்கள். கதரினால் 60 கோடி ரூபாய்க்கு மேலாக நம் நாட்டுக்குக் கிடைக்கும்படி செய்யுங்கள்.

சாத்வீக மறியல்

காந்தி-இர்வின் ஒப்பந்தத்தை ஒட்டி நம் நாடெங்கும் தேசியத் தொண்டர்களால் சாத்வீகமாய் மதுபானக் கடைகள், அயல் நாட்டு ஜவுளிக்கடைகள் மறியல் செய்யப்படுகின்றன. சிற்சில இடங்களில் ஒப்பந்தத்திற்கு விரோதமாக முறை தவறிச் சர்க்கார் சிற்சில விஷயங்களில் நடந்து கொள்கிறார்கள்; எனினும் தேசீயவாதிகள் அஹிம்ஸா முறையில் பொறுமையுடன் நடந்து கொள்வது குறிப்பிடத்தக்கது. நாமும் நேரில் சென்று சில மறியல்களைப் பார்த்தோம். ஒரு இடத்தில் நாமே மறியல் செய்ய நேர்ந்தது. பொது ஜனங்கள் காங்கிரஸை அதிகமாய் ஆதரிக்கிறார்கள். பற்பல விடங்களில் மறியல்கள் நல்ல வெற்றிகளைப் பெற்றுக்கொண் டிருக்கின்றன. மறியல் எல்லா இடங்களிலும் தீவிரமாகச் செய்தால், மதுபானமும் அயல் நாட்டுத் துணிகளும் விரைவில் நமது நாட்டைவிட்டு ஓடிப்போகும். தேச மக்களே! காங்கிரஸை ஆதரித்துத் தேசத் தொண்டு செய்யுங்கள்.

மாப்பிள்ளைக் கைதிகள்

மலையாளத்தில் உண்டான மாப்பிள்ளைக் கலகத்தில் பல ஆயிரம் மாப்பிள்ளைகள் சிறைச்சாலை அடைந்தார்கள். பலர் அந்தமானுக்கு அனுப்பப்பட் டிருக்கிறார்கள். நூற்றுக் கணக்கான கைதிகள் மாண்டதுபோக இப்பொழுது அலிப்புரம் ஜெயிலில் ஏறக்குறைய 1000 கைதிகள் இருக்கின்றார்கள். அவர்கள் நிலை பரிதாபம்! மாப்பிள்ளைக் கைதிகளை விட்டுவிட வேண்டுமெனச் சில மாதங்களுக்கு முன்னிருந்து சர்க்கார் யோசித்துக்கொண் டிருப்பதாக அறிகிறோம். அறியாத் தனத்தால் ஒரு காலத்தில் குழப்பம் செய்த மாப்பிள்ளைகளை இனியும் ஜெயில்களிலும் அந்தமானிலும் போட்டு வதைப்பதால் பயனில்லை. அவர்களைச் சீர்திருத்த வேண்டும். நமது நாட்டுச் சிறைச்சாலைகளும் அதிகமாகச் சீர்திருத்தங்கள் அடையவேண்டும். மாப்பிள்ளைக் கைதிகளுக்கு உடனே விடுதலை யளித்து அவர்களுக்கு வேண்டுவன செய்யுமாறு சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறோம்.

பர்மாக் கலகம்

இந்தியாவில் அரச குமாரராக உற்பவித்து, மானிடர்களின் துக்க நிவாரணத்தைக் கண்டுபிடிப்பதற்காகவே தனது அரசுரிமையையும் ராஜ போகங்களையும் வெறுத்துச் சந்நியாசியாகி ஆசியாக் கண்டத்தின்

ஜோதியாக விளங்கிய புத்தபிரானது மதமே பர்மியர்களது மதம். அந் நாட்டைத் தங்கள் உழைப்பால் திருத்தியவர்கள் பொதுவாக இந்தியர்களும் முக்கியமாகத் தமிழர்களுமே. அந் நாட்டில் பணக் கடை வைத்து அங்கு பொருளாதார நிலையை விருத்தி செய்தவர்கள் நகரத்துச் செட்டியார்களே. பன்னெடுங் காலம் இந்தியர்களுடன் சமரசமாய் வாழ்ந்து அன்பு மதமாம் புத்த மதத்தைக் கடைப் பிடித்திருக்கும் பர்மியர்கள் துவேசப் புத்திமதிகளுக்கும் சூழ்ச்சிகளுக்கும் இடங் கொடுத்து, வேற்றுமைப் பத்திரிகைகளைப் படித்து மனம் வேறுபட்டு நன்றி மறந்து இந்தியர்மீது துவேஷம் கொண்டு இந்தியர்களைப் பர்மாவிலிருந்து துரத்த விரும்புகிறார்கள். பிக்சு உத்தமருடைய கோஷ்டியார்களும் தேசிய வாதிகளும் இந்தியரை ஆதரித்துப் பர்மாவும் இந்தியாவும் ஒற்றுமையாகவிருக்க விரும்புகிறார்கள்.

இத் துவேசத்தின் காரணமாகச் சயாசன் முதலிய பர்மியர்கள் சேர்ந்துகொண்டு தாரவாடி, ஹென்ஜடா, பக்கோ, புரோம், டாங்கோ, இன்சீன் முதலிய ஜில்லாக்களில் பல இந்தியர்களை வெட்டியும், பொருள்களைக் கொள்ளையடித்தும், வைக்கோல் போர்களைக் கொளுத்தியும் கன்றுகாலிகளை விரட்டியும் பர்மாவை அலங்கோலப்படுத்தி விட்டார்கள். இக் கலகத்தால் இந்தியர்களுக்குப் பெருத்த நஷ்டம். பலர் கொல்லப்பட்டார்கள். பல ஆயிரக் கணக்கான இந்தியர் தாயகம் திரும்பிவிட்டனர். கலக காலத்தில் பர்மா சர்க்கார் விரைவில் தயாராகி இந்தியர்களுக்கு உதவியிருக்கவேண்டும். கலகம் இப்பொழுது ஒருவாறு அடங்கிவிட்டது. கொள்ளைக் கூட்டத் தலைவன் சயாசன் தூக்கு தண்டனை விதிக்கப்பட் டிருக்கிறான். வெளிப்படையான அல்லல்கள் அடங்கிவிட்டபோதிலும், இந்தியர்மீது துவேஷம் வளர்ந்துகொண்டு வருகிறது. பர்மாப் பிரிவினை ஏற்பட்டால் இன்னும் நிலைமை மோசமாகிவிடும். பிரிவினை விஷயத்தில் பர்மியத் தலைவர்கள் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை மாற்றி இந்தியாவுடன் பர்மா இணைந்திருக்க வேண்டுமென முயற்சி செய்வார்களாக. "அயலானது நேசமும் சொந்தக்காரனது பகையும் ஒன்றே" என்பதைப் பர்மியத் தலைவர்கள் கவனிக்கவேண்டும். புத்தர் பிறந்த நாடாம் இந்தியாவுடன் அவர்கள் நேசமாயிருக்க வேண்டும். இந்தியாவுடன் இப்பொழுது சேராது விலகி ஆங்கில மாய்கையில் விழுந்தால், எக் காலத்தில் பர்மா நாடு விடுதலை யடையப் போகிறது?

மலையாளிகளுடன் கலப்பு

மலையாளத்தை ஆதியில் தமிழர்களே ஆட்சி செய்தார்கள். சேரமான் பெருமாளை எந்தத் தமிழர் மறப்பார்? தமிழர்களுடைய சின்னங்கள் மலையாளத்தில் நிறைந்து கிடக்கின்றன. பழைய காலம்

செல்லட்டும். தற்காலத்தைக் கவனித்து எதிர்கால இந்தியாவை நமது உழைப்பால் சிறப்பிக்க முயலுவது நமது கடமையாகும். இப்பொழுது திருவாங்கூர், கொச்சி, மலையாளம் (கேரளம்) ஆகிய சேர மண்டிலத்தில் தமிழர்களுக்கு விரோதமாக ஓர் வகை உணர்ச்சி மெல்லென வளர்ந்துகொண்டு வருகிறது. கேரளத்தையே அபிமானத் தாய்நாடாகக் கொண்டு எத்தனையோ தமிழர்கள் அங்கு வசிக்கிறார்கள். தமிழ் நாட்டில் எத்தனையோ மலையாளிகள் பலவகைத் தொழில்கள் செய்துகொண்டும் சர்க்கார் உத்தியோகங்கள் செய்துகொண்டுமிருக்கிறார்கள். அவாகள்மீது நமக்குத் துவேஷமில்லை. இங்கிருக்கும் சில தமிழர்களுக்கு அங்கு பந்துக்களுமிருக்கிறார்கள். அங்கிருக்கும் தமிழருடன் விவாக பந்தங்களும் உண்டு. மதுரை அட்வொகேட் ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியாரும் இன்னும் எங்கோ 5, 6 தமிழர்களும் மலையாளத்து மாதர்களை மணம் செய்திருக்கிறார்கள். மலையாளத்து மாதர்களை விவாகம் செய்தால், தமிழர்கள் மலையாளிகளிடையில் ஒற்றுமை ஏற்படும். சுத்தமும் சிக்கனமும் தற்காலக் கல்வியும் உள்ள மலையாளப் பெண்களைத் தமிழர் மணப்பதால் தமிழ் நாடு பலப்படுவதுடன், வருங்காலத்துத் தமிழ் காளையர்களுக்குக் கலப்பு மணங்களுக்கு ஏற்ற வசதியுமாகும்; இதனால் தமிழர்களுக்கும் மலையாளிகளுக்கும் இடையில் உண்டாகிவரும் வேற்றுமை உணர்ச்சி ஆணி வேருடன் அற்றுப்போகும்; அத் தேசத்தாரும் தமிழர்தம் கூட்டுறவால், மிகுவிரைவில் புத்துணர்ச்சியும் புத்துயிரும் பெறுவார்கள். இயற்கா தேவியின் வன்மையால், காலத்தின் வேகத்தால் அக் காலமும் சமீபத்தில் வந்துகொண்டிருக்கிறது.

பத்திரிகைத் தொழிற் பயிற்சி

அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் பத்திரிகைத் தொழிலுக்கென பயிற்சியும் பட்டமும் கொடுக்கச் சர்வ கலாசாலைகளும் இதற்கெனத் தனியாகக் கல்லூரிகளுமிருக்கின்றன. இக் கலைக்கெனப் பற்பல புஸ்தகங்களும் எழுதப்பட்டு வெளிவந்திருக்கின்றன. இன்னும் புத்தம் புதிதாக வெளிவந்துகொண்டிருக்கின்றன; பற்பல பத்திரிகைகளும் பதிப்பிக்கப்படுகின்றன. துருக்கியில் பத்திரிகைத் தொழில் விரைவில் அபிவிருத்தி அடைந்துகொண்டிருக்கிறது. இப்பொழுது பத்திரிகைத் தொழிலை ஓர் பாடமாக அமைக்கவேண்டுமெனச் சீன தேசிய கவர்ன்மெண்டு உத்திரவு செய்திருக்கிறது. இத் தொழிலில் பிரத்தியேகக் கவனம் செலுத்திய சீன சர்க்காரைப் போற்றுகிறோம்.

இந்தியா இவ் விஷயத்தில் மிக மிகப் பிற்போக்கிலிருக்கிறது. இவ் வழியில் நம் தேசத்தில் பயிற்சி கொடுப்பதற்கு எவ்வித ஸ்தாபனமும் இல்லவேயில்லை. தபால் மூலமாகவே இத் தொழிலைக்

கற்பதற்கு மற்றத் தேசங்களில் அநேக பள்ளிக்கூடங்களிருக்கின்றன. இத் தொழில் பயிற்சியை மாணவர்கள் அவசியம் பெறவேண்டும். பத்திரிகைகளின் பயன்கள் பலவாகும். வருங்காலத்தில் பத்திரிகைகளே உயரிய ஆசிரியர்களாக விளங்கப்போகின்றன. பொது ஜன அபிப்பிராயம் உண்டாக்குவதற்குப் பத்திரிகைகளைக் காட்டிலும் சிறந்த சாதனம் வேறொன்றுமில்லை. இத் தொழில் விருத்தியடைய போதியபடி உதவி செய்யாது ஏற்கெனவே உள்ள பத்திரிகைகளை இந்தியச் சர்க்கார் மடக்கி அடக்கிக்கொண்டிருக்கிறது. இந் நிலையில் இத் தொழில் எவ்வாறு விருத்தியடையப்போகிறது! நமது தேசத்தில் பொது ஜனங்கள் பத்திரிகைகளை அதிகமாய் ஆதரித்துப் பத்திராதிபர்களை உற்சாகித்தால், நாட்டுக்கு நலம் செய்யும் நானாவித நல்ல நல்ல பற்பல பத்திரிகை உண்டாகி இத் தொழில் இங்கு விருத்தியாகும். எத்தனையோ உயர்தரப் பத்திரிகைகள் தோன்றி மறைந்ததற்குக் காரணம் இத் தேச மக்களின் ஆதரவின்மையே. இச் சாபத்தால் நாடு ஏற்றபடி முன்னேற்றம் அடைந்துகொண்டிருக்க முடியவில்லை.

சீனத்துப் பெண்கள் முன்னேற்றம்

உலகில் அமெரிக்க, ஐரோப்பாக் கண்டங்களில் மாதர்கள் ஆண்களைப் போன்று சம அந்தஸ்த்துப் பெறுவதற்குப் போட்டி போட்டுக்கொண்டு தீவிரமாய் வேலை செய்கிறார்கள். அங்கு படிப்பிலும் தொழிலிலும் ஆண்களுக்கு இணையாக விருத்தியாகிக்கொண்டு வருகிறார்கள். கீழ் நாட்டில் ஜப்பானிய மாதர்களே உயர்ந்த நிலையிலிருக்கிறார்கள். துருக்கி, எகிப்து, சிரியா, சீனம் முதலான கீழ்த் திசை ஸ்திரீகளுக்குச் சுதந்திர சூரியன் உதித்திருக்கிறான். சைனு தேயத்தின் வனிதா ரத்தினங்களுக்கு நல்ல காலம் வந்துவிட்டது. இதற்கு முன் சீனர்கள் தங்கள் மாதர்களை அடிமை போன்று நடத்தி வந்திருப்பினும், இப்பொழுது பெண்ணின் பெருமையை உணர ஆரம்பித்துவிட்டார்கள். 1924-ம் ஜூலை வட சைனுவிலே காண்டன் நகரத்திலே குவோ-மின்-டாங் கட்சியாலே பெண்களையும் ஆண்களைப் போன்று சமமாகப் பாவிக்கவேண்டுமெனத் தீர்மானித்தபடியே, இன்று தேசீயச் சர்க்கார் செய்து வருவது போற்றுதற்குரிய செய்கையேயாகும். பெற்றோர்களாலோ மத்தியஸ்தர்களாலோ நடைபெறும் கட்டாய மணம் சைனுவில் ஒழிந்தது. காதல்மணம் இங்கு வளர்கிறது. 15 வயதிற் குட்பட்ட பெண்களுக்கும் 17 வயது நிறையாத ஆண்களுக்கும் விவாகம் செய்துகொள்ளச் சட்டம் இடம் கொடுக்கவில்லை; முதல் மனைவிக்குப் பிறக்கும் பிள்ளைகளுக்குத்தான் சொத்தில் உரிமையுண்டு. இளைய மனைவியின் மக்களுக்குக் கொஞ்சமேனும்

சொத்துரிமை இல்லை. இதனால் பலதார மணம் ஒருவாறு தடுக்கப்படுகிறது. இவ்வித பல சீர்திருத்தச் சட்டங்களால் சைனாவின் கோமளங்கள் முன்னேறிச் சென்றுகொண் டிருக்கிறார்கள்.

சக்திகளை வணங்கும் இந்தியா—பண்டை மாதரசிகளை மதித்துப் போற்றிய பாரத கண்டம் பெண்களை இன்று அடிமைப் படுத்தும் வழக்கத்தின் அர்த்தம் நமக்குத் தெரியவில்லை, இந்தியப் பெண்களின் முன்னேற்றத்தில் இந்தியாவின் முன்னேற்றமும், இந்தியப் பெண்களின் விடுதலையில் இந்தியாவின் விடுதலையும் அடங்கியிருக்கிறது. பாரதியார் பாடலைப் படித்து மகிழும் தமிழர்களே! பாரதியார், பெண்கள் விடுதலையைப் பற்றி என்ன சொன்னாரென்று அறிந்தீர்களா? அறிந்தும், அனுஷ்டானத்திற்குக் கொண்டு வராவிடில் பயனென்ன?

பத்திரிகைக்கு நன்கொடை

வங்காளத்தில் பாகல்பூர் சுல்த்தான்கஞ்சு கிருஷ்ணகார் பொனெய்லிராஜ் ஜமீன்தார் குமார் கிருஷ்ணானந்த சின்ஹா தமது இரண்டாவது புதல்வன் பிறந்த சந்தோஷத்தின் அடையாளமாக, கங்கா என்னும் ஹிந்தி மாதப் பத்திரிகைக்கு 40 ஆயிரம் ரூபா இனாமாகக் கொடுத்திருக்கிறார். எளிய விவசாயிகளுக்கும் மாணவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் வாசகசாலைகளுக்கும் பொதுச் சங்கங்களுக்கும் கங்காப் பத்திரிகையை 3ரூபா வருஷ சந்தாவில் 20,000 பேர்களுக்கு 2 வருஷங்களுக்கு அனுப்பும்படியாக அவர் இந்த நன்கொடையை அளித்திருக்கிறார். கங்காப் பத்திரிகையின் ஆண்டுச் சந்தா ரூ. 5. ஒரு கல்யாணத்தை முன்னிட்டு அலகாபாத் "சாந்த்" என்ற உயர்தர ஹிந்தி மாஸிகைக்கு 10 ஆயிரம் ரூபா ஒருவர் சிறிது காலத்திற்கு முன் பரிசு அளித்தார்.

தமிழ் நாட்டில் தோன்றி ஆதரவின்மையால் மறைந்த பத்திரிகைகளுக்குக் கணக்கில்லை. கஷ்ட நஷ்ட மடைந்த பத்திராதிபர்களுக்கும் கணக்கில்லை. மற்ற நாட்டாரின் பத்திரிகாபிமானத்தைப் பார்த்துத் தமிழர் வெட்கமடைய வேண்டும். இந்தியாவிலுள்ள சில மாகாணத்தாரின் பாஷாபிமானத்தைப் பார்த்துத் தமிழர் நாணமடைய வேண்டும். தமிழ் நாட்டிலே தமிழ் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் அன்புடன் அனுப்பி வரும் பத்திரிகைகளைப் பெற்றக் கொண்டு சந்தாவைக் கொடுத்தாலும் போதும். பத்திரிகையின் வி. பி. யைத் திருப்பாமலே பெற்றுக்கொள்ளுதலே தமிழ் நாட்டில் ஒரு பெரிய தருமமாகக் கருதவேண்டி யிருக்கிறது. பாரி வள்ளல் வாழ்ந்த தமிழ் நாட்டில், முல்லைக்குத் தேர் கொடுத்த அரசர் வாழ்ந்த தமிழுலகத்தில், பனிமாதத்திற்கு வேஷ்டிகட்டிய நாயனார் இருந்த நாட்டில் பத்திராதிபர்கள் படும் பாட்டைச் சொல்லி முடியாது.

புதுக் கோட்டைக் கலகம்

புதுக்கோட்டை ஒரு சிறு சமஸ்தானம். அதன் ஜனத்தொகை ஏறக்குறைய 4 லட்சம். அதன் ஆண்டு வரும்படியோ கிட்டத்தட்ட 21 லட்சம் ரூபா இப்பொழுது இருக்கும் தொண்டமான் மகாராஜா சிறு பிள்ளை, ஆகையால் ஒரு நிருவாக சபை ஏற்படுத்தி அதன் மூலம் ராஜரீகம் செய்யப்பட்டு வருகின்றது. அச் சபையின் தலைவர் திவான் பஹதூர் ராகவையாவாகும். முனிசிபல் வரியை உயர்த்துவதாகச் சர்க்கார் செய்த முடிவை ஆட்சேபித்து ஜனங்கள் செய்துகொண்ட வேண்டுகோளை நிர்வாக சபையார் மறுக்கவே, புதுக்கோட்டை ஜனங்கள் ஆத்திரங்கொண்டு 15-7-31ம் தேதியில் கலகம் செய்தார்கள். சர்க்கார் கட்டிடத்தைத் தகர்த்தார்கள்; சர்க்கார் ரிகார்டுகளை எரித்தார்கள். சிறைச்சாலையை இடித்துக் கைதிகளை விடுதலை யாக்கினார்கள். திவான் பஹதூர் ராகவையா சிரமத்துடன் உயிர் தப்பினார். துப்பாக்கிப் பிரயோகமுங்கூட நடந்தது. திருச்சியிலிருந்து ராணுவம் வந்தது. கலகம் அடங்கினது. புதுக்கோட்டைக் கடுத்த அண்டக்குளம் என்னும் கிராமத்தில் கொள்ளையும் நடந்து விட்டது. இவைகளினால் சில கிராமங்களில் அதிக பீதியடைந்திருந்தார்கள். புதுக்கோட்டை சமஸ்தான வாசிகள் எப்பொழுதும் ராஜ விசுவாசிகள். இப்பொழுது இவ்வாறு புதுக்கோட்டை வாசிகள் நடந்து கொண்டது ஆச்சர்யமா யிருக்கிறது.

25 வருடங்களுக்கு முன்பு தூத்துக்குடியில் ஏற்பட்ட சுதேசிக் கலகத்திற்குப் பிறகு இதுவே தமிழ் நாட்டில் பெரிய கலகமாகும். இக்கலகத்தைப் பற்றி மிஸ்டர் ரஸ்ஸல் விசாரணை செய்து வருகிறார். பஞ்சமும் பணக் கஷ்டமும் உண்டாகி யிருக்கும் இக்காலத்தில் வரியை உயர்த்தியது சரியன்று. ஜனங்களின் பொருளாதார நிலையைக் கவனித்துப் பொது ஜனங்களின் மனுவுக்குக் கூடியமட்டில் தழுவிச் சாதகஞ் செய்து பிரஜைகளின் நன்மைகளை வளர்க்க வேண்டியது சமஸ்தானத்தின் பிரதானக் கடமையாகும். திவான் பஹதூர் ராகவையா திருவாங்கூரில் திவானாக யிருந்தபோது பள்ளிகளிலும் காலேஜுகளிலும் மாணவர் செலுத்த வேண்டிய சம்பளங்களை உயர்த்தினார், மாணவர் கிளர்ச்சி நடந்தது. மாணவர் பொதுக் கூட்டத்தில் தடியடி தண்டப் பிரயோகம், குதிரைகளால் மிதி முதலானவைகளுக்கு மாணவர்கள் ஆளானார்கள். ஸ்ரீமான் ராகவையா அவர்கள் அங்கு அதிகாரத்தைத் துஷ் பிரயோகம் செய்ததே மாணர்கள் கஷ்டத்திற்குக் காரணம். அரசியல் அறிவும் அனுபவமும் பெற்றவரா யிருப்பினும் புதுக்கோட்டை முனிசிபல் வரி உயர்த்தும் விஷயத்தில் பிடிவாதமா யிருந்துவிட்டாரென்றே சொல்லல் வேண்டும். தற்சமயம் வரி உயர்த்தும் பேச்சை நிறுத்தி வைத்திருக்கலாம். பிரஜைகளும் திவானது

மறு மொழிக்காக மறுநாள் வரையில் காத்திருக்கலாம். காந்தி அடிகள் அஹிம்சா தர்மநெறி நாடெங்கும் பிரகாசித்துக் கொண்டிருக்கும் இக்காலத்தில் இம்மாதிரிச் சம்பவம் நடந்தது வருந்தக்கூடிய சங்கதியேயாகும்.

திருவாங்கூர் ஏல விவசாயிகள்

திருவாங்கூர் ஏல விவசாயிகள் அனைவரும் ஏகோபித்து ஏலச்சரக்கு விலையைக் கட்டுப் படுத்தும் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். போடிநாயக்கனூர் ஜமீன்தாரவர்களும் சென்னை சட்டசபை அங்கத்தினருமான ஸ்ரீமான் T. V. K. காமராஜ பாண்டிய நாயக்கர் அவர்களும், மதுரைஜில்லா வியாபார அரசரும் (Merchant Prince and Commercial Magnate of Madura District) சென்னை சட்டசபை அங்கத்தினருமான ராவ் சாகிப் A. S. அழகண்ணன் செட்டியார் அவர்களும் திருவாங்கூர் ஏல விவசாயிகளுக்கு இரு கண்களாக விளங்கி வேண்டிய உதவிகளைச் செய்வார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. திருவாங்கூர் ஏல விவசாயிகளின் ஒற்றுமையாலும் மேற்கண்ட இரு பிரபுக்களின் ஒத்தாசையாலும் ஏல விவசாய உலகத்திற்குப் புத்துயிரும் T. C. P. A. ஏலச்சரக்கு விற்பனைக் கம்பெனிக்குப் புத்துணர்ச்சியும் உண்டாகியிருக்கிறது. இதனை ஏல விவசாயிகள் அனைவரும் உணர்ந்து மேலும் மேலும் தங்கள் முழு ஆதரவு அபிமான மாகியவற்றை நல்கி வளர்த்துவர வேண்டுகிறோம்.

காந்தி அடிகளின் புறப்பாடு

காந்தி-இர்வின் ஒப்பந்தப்படி நடந்துகொள்ளாது பர்தோலியில் கிராமவாசிகளை, சர்க்கார் மிகவும் தொந்திரவு செய்து வரி வசூலிக்க ஆரம்பித்தது. காந்தி-இர்வின் உடன்படிக்கைப்படிச் சர்க்காரால் மீறப்பட்டதா இல்லையா என்பதை விசாரிக்க ஒரு கமிட்டி வேண்டினார் மகாத்மா. அதற்கு இராஜப்பிரதிநிதி மறுக்கவே தாமும் இங்கிலாண்டில் கூடும் வட்ட மேஜை மகா நாட்டிற்குச் செல்ல மறுத்துவிட்டார். ஒரு இந்தியன் சிவில் உத்தியோகஸ்தரைக்கொண்டு இவ் விஷயத்தை விசாரிக்க வைஸ்ராய் அவர்கள் ஏற்பாடு செய்யவே மகாத்மா இங்கிலாந்துக்கு 29உ கப்பலேறிவிட்டார். மகாத்மாவே இந்தியாவின் உருவம்; மகாத்மாவின் அபிப்பிராயமே இந்தியாவின் அபிப்பிராயம். பிரிட்டன் இந்தியாவை அன்புடன் கவனிக்க வேண்டுகிறோம். வேண்டுவன இந்தியாவுக்குச் செய்ய வேண்டுகிறோம். பிரிட்டிஷார் நல்லவர்கள், ராஜதந்திரிகள், காலதேச வர்த்தமானத்தை அனுசரித்து நடப்பவர்கள் என்ற பெயரை இது போதேனும் பெறவும், பிரிட்டிஷார் இந்தியாவுக்கு சந்தோஷத்துடன் சுபாட்சி கொடுத்தார்கள் என்ற நற்பெயரை அடையவும் வேண்டுகிறோம்.

நல்ல சந்தர்ப்பம்! விரைவில் முந்துங்கள்!!

1929-ம் ௵

"பாரதி" வால்யம்

[முதல் வருடத்தியது.]

சில நூறு பிரதிகளே மறுபடியும் அச்சிடுவதாக உத்தேசம்.

சென்ற 30-ம் வருடம் முதல், 'பாரதி'யின் முதல் வருடமாகிய 1929-ம் ஆண்டின் பிரதிகளை விரும்பிய நூற்றுக் கணக்கான அன்பர்கள் கிடைக்கப் பெறாது ஏமாற்றமடைந்ததை யுத்தேசித்தும், ஏற்கெனவே இந்த முதல் வருட 'பாரதி'யை விரும்புவோர் நாளுக்குநாள் மிகுந்து வருவதை யெண்ணியும் இதனை மறு முறையும் அச்சிட்டுதவுவதாகத் தீர்மானித்துள்ளோம். முன்னர் விரும்பிய அன்பர்கள் அனைவரும் இதுபோது தங்கள் விருப்பத்தை யறிவித்து, நேர்த்தியாக அச்சிட்டுப் பைண்ட் செய்யப்போகின்ற 'பாரதி'யைப் பெற்று விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்வார்களாக.

அச்சிடுவதற்கு முன் குறைந்தது 300 பிரதிகள் வரை ஆர்டர் கிடைப்பதற்காகக் காத்திருக்கவேண்டி யிருக்கின்றது. இவ் விஷயம் விரைவில் பூர்த்தியாகுமெனவே கருதுகின்றோம். நமது இந்த விருப்பம் நிறைவேறியவுடன் அச்சிட ஆரம்பிக்கப்படும்.

அச்சிடுவதற்கு முன்னர், முன் பணமனுப்பித் தங்கள் பெயரைப் பதிந்துகொள்வோருக்கு விலை... ரூ. 2—8—0
(தபாற் செலவு இனாம்)

அச்சிட்ட பின்னர் விலை ... ரூ. 3—0—0
தபாற் செலவு அணா 12 பிரத்தியேகம்.

குறிப்பு: வெளி நாட்டார் தபாற் செலவிற்காகச் சிறிது அதிகமாக அனுப்பிவைக்க வேண்டும்.

உத்தமபாளையம், 31—8—31. மானேஜர், "பாரதி"

"பாரதி"யின் பம்பாய் ஏஜண்ட்.

K. S. Naganathan,

C/o. The Madura Knitting Co.,
47, Chackla Street,
Bombay 3.

"இந்திய மித்திரன்"

சிறந்த தேசீய வாரப் பத்திரிகை.

ஆசிரியர்: B. வேணுகோபாலன் அவர்கள்.

மலேயா நாட்டிலே தமிழ்ப் பத்திரிகைகளில் தேசீயத்தையே பிரதானமாகக் கொண்டு வெளிவருவது எது? தொழிலாளர்களுக்குத் தொண்டு புழைப்பது எது? திக்கற்ற இந்தியக் கூலிகளுக்குச் சிறந்தவழிகளை எடுத்துக் காட்டி, மோசக்காரர்களின் படு மோசத்திற் காளாகாது தப்புவிப்பது எது? ஆயிரக் கணக்கான சந்தாதாரர்களைப் பெற்று எண் டிசை வர்த்தமானங்களையும் கொண்டு வீரமுடன் தீரமாக உலாவி வருவது எது? "இந்திய மித்திரன்" ஒன்றேயாகும்.

வருட சந்தா:	மலேயாவுக்கு வெள்ளி	4/-
	இந்தியா, பர்மா, சிலோனுக்கு ,,	5/-

விலாசம்: மானேஜர், "இந்திய மித்திரன்,"
87, பெல்பீல்ட் தெரு, ஈப்போ., F. M. S.

1931-ம் வருட "பாரதி" அநுபந்தம்.

"பாரதி"யைப்பற்றி அறிய இதனிலும் வேறு வழியில்லை.

100 பக்கங்கொண்டது. கட்டுரை, கட்டுரையாளர், நோக்கங்கள், சிறப்புரைகள், மதிப்புரைகள் ஆகிய இவற்றுடன் "பாரதி"யின் ஆரம்ப காலமுதல் இது பரியந்தம் வந்துள்ள சுவைதரும் சிறந்த பாக்களனைத்தையும் ஒருங்கே பெற்றிலங்குகின்றது.

இதன் அணா 4 ஸ்டாம்பு அனுப்பவும்.

தமிழபிமானிகளுக்குச் சிறந்த விருந்து!

1. திருவாசகம்.

(உண்மை ஞான விளக்க உரையுடன்.)

'மனங் கரைத்து மலங் கெடுக்கும் வாசகம்' எனப் புலவர் புகழும் தமிழ்மறையின் பெருமையை உணராதார் தமிழுலகில் ஒருவருமே இரார். சைவ சமய குரவர் நால்வருள் ஒருவராகிய மாணிக்கவாசகர் தமிழ் மக்களுக்கு வழங்கியுள்ள திருவாசகம் என்னும் அரிய பெரிய நூலைத் தமிழராய்ப் பிறந்தோர் ஒவ்வொருவரும் ஆர்வத்துடன் பிழையறப் படித்துப் பயன் பெற வேண்டும். இந் நூலின் உரையாசிரியராகிய ஸ்ரீலஸ்ரீ ஈ. சுந்திரமாணிக்க யோகியார் அவர்கள் தமது முதிர்ந்த ஆன்மஞான அனுபவத்தினால் இந் நூலை வெறும் பக்தி நூல் அன்றெனவும், பிரம்ம சாதனைகள் நிறம்பிய ஆன்ம ஞானக் களஞ்சியம் எனவும் ஐயந்திரிபறத் தெளிந்து தாம் சென்னையில் நிறுவியுள்ள பிரம்ம வித்தியா சங்கத்தின் உபயோகத்திற்காக இந் நூலுக்குச் சிறந்த உரை யியற்றி யிருக்கின்றார்கள். இது டிம்மி யளவில் 115 பாரத்தில் அமைந்திருக்கின்றது; உயர்ந்த பளபளப்பான தாளில் அழகாய் அச்சிடப் பெற்றுள்ளது; சிறந்த காலிகோ பைண்டு செய்யப் பெற்றது.

விலை ரூபா 10—0—0. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

---

2. ஔவைக் குறள்.

(உரையுடன்.)

இந் நூல் வரகவிகளில் சிறந்த ஔவையார் அருளிய ஆன்ம ஞான நூல். இது திருக்குறளைப் போல் பண்டிதர்களும், பாவலர்களும் உரையெழுதக் கூடியதன்று. இது ஆன்ம ஞான சாதனங்களைப் புகட்டும் நூல், ஆன்ம ஞான இன்பத்தை அவாவி அம் மெய்ச் சுகத்தில் ஈடுபடும் மெய்

யன்பர்களுக்கே இது பெரிதும் பயன் அளிக்கும். ஸ்ரீலஸ்ரீ ஈ. சுந்திரமாணிக்க யோகியார் அவர்கள் தமது சிறந்த ஆன்ம ஞான அனுபவத்தினால் இந் நூலுக்குச் சிறந்த உரை யெழுதி யிருக்கின்றார்கள். இதுவும் உயர்ந்த காலிகோ பைண்டு செய்யப் பெற்றுள்ளது.

விலை ரூபா 1—8—0. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

3. நவகீதம்.

மேற் கூறிய இரண்டு தமிழ் நூற்களுக்குச் சிறந்த உரை இயற்றிய உரையாசிரியரும், சென்னை பிரம்ம வித்தியா சங்க ஸ்தாபகரும், அச் சங்கத்தின் குருவுமாகிய ஸ்ரீலஸ்ரீ ஈ. சுந்திரமாணிக்க யோகியார் அவர்கள் தாம் ஐம்பது ஆண்டுகளாய் உழைத்துப் பெற்ற சிறந்த ஆன்ம ஞான அனுபவத்தைத் திரட்டி யியற்றிய நூல் இது. இந் நூல் ஆன்ம ஞான அப்பியாசிகளுக்கும், அத் துறையில் இறங்குமுன் ஆன்ம ஞானம் எத் தன்மையது என்று அறிய அவாவும் அன்பர்களுக்கும் இன்றி யமையாதது. இதை ஆன்ம ஞான பொக்கிஷத்தின் திறவுகோல் என்றே கூறலாம். இதுவும் அழகிய காலிகோ பைண்டு செய்யப் பெற்றிருக்கின்றது.

விலை ரூபா 1—8—0. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

4. மீனலோசனி.

இது ஓர் இனிய செந்தமிழ் நாவல். கற்பனைக் கதைகள் எழுதுவதில் ஒப்பாரும் மிக்காரு மில்லாதவரும், 'வட நாட்டு மாந்திரீகன்' என ஆங்கிலக் கதை யாசிரியர்களால் சிறப்பாய் அழைக்கப் பெறுபவருமாகிய சர் வால்டர் ஸ்காட் என்னும் புலவர் பெருமான் இயற்றிய 'ஐவன்ஹோ' என்னும் ஆங்கிலக் கதையைப் பெரும்பாலும் தழுவியே இது இயன்றுள்ளது. இதை எழுதிய ஆசிரியர், சென்னை உயர் நீதிமன்றத்து வழக்கறிஞர் (Advocate, High Court, Madras) திருவாளர் போ. வ. பத்மநாபன், B. A., B. L. இவர் மாணவர் பருவத்திலிருந்தே செந்தமிழ்க் கலைகளில் பேரார்வம் கொண்டு இலக்கியப் பயிற்சியிலும், ஆராய்ச்சியிலும் ஈடுபட்டு உழைத்து வந்தாராதலின் இந் நூலில் ததும்பும் தமிழ்ச் சுவையை அன்பர்கள் துய்த்து ஆனந்திப்பார்கள் என்பது திண்ணம். இதன் சிறப்பையும் உயர்வையும் மதித்தே துரைத்தனத்தார் இதை உயர் வகுப்பு மாணவர்களுக்குப் பாடப் புத்தகமாக இருக்கத் தகுந்தது என அங்கீகரித் திருக்கின்றார்கள்.

விலை ரூபா 0—12—0. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

5. பொன் செய்யும் மருந்து.

இது நீதியைப் போதிக்கும் ஓர் இனிய செந்தமிழ்ச் சிறுகதை. பண்டைக் காலத்து கிரேக்கர்கள் எழுதிய கட்டுக் கதைகளில் ஒன்றைத் தழுவியே இது அமைந்துள்ளது. ஜனங்களுக்கு இரசவாதத்தில் உள்ள மோஹத்தையும், அதனால் விளையும் பொல்லாங்குகளையும் இக் கதை கரதலாமலகமாய் எடுத்துக் காட்டுகின்றது. இதன் இனிய உரை நடையும், சிறந்த இலக்ஷியமும் வாசிப்பவர்கள் மனதைப் பரவசப் படுத்தும். இதை எழுதியவர் சென்னை உயர் நீதிமன்றத்து வழக்கறிஞர் திருவாளர் போ. வ. பத்மநாபன், B. A., B. L.

விலை ரூபா 0—3—0. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

பிரதிகள் கிடைக்கும் இடம்:

வே. ஜ. முருகேச முதலியார்,
15, முத்து முதலி தெரு, புரசைவாக்கம்,
வேப்பேரி, சென்னை.

குறிப்பு:— மேற் கண்ட நூற்களின் பிரதிகள், புஸ்தக வியாபாரிகளுக்கும், ஒரு முறையில் 10 பிரதிகளுக்குக் குறையாமல் ஆர்டர் கொடுப்பவர்களுக்கும் 100-க்கு 25 வீதம் கமிஷன் கொடுக்கப்படும்.

நேர்த்திக்கும் உறுதிக்கும் உத்தரவாதம்.

இங்கு

பிரிண்டிங், ரூலிங், பைண்டிங் ஆகிய எல்லாவித வேலைகளும் விரும்பிய வண்ணம் குறித்த காலத்தில் செய்து தரப்படுகிறது.

வெளியூர் ஆர்டர்களை உடனுக்குடன் கவனிக்கப்படும்.

பரீக்ஷார்த்தமாகவேனும் உங்கள் ஆர்டர்களை ஒரு முறை கொடுத்துப் பாருங்கள்.

ஆனந்தா பிரஸ்

உத்தமபாளையம்.

"லோகோபகாரி"

பழமையும் புதுமையும் வாய்ந்த வாரப் பத்திரிகையை நீங்கள் விரும்பினால் லோகோபகாரிக்குச் சந்தாதாரராய்ச் சேருங்கள். உலகத்துச் செய்திகளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளி வருகிறது. முப்பத்தேழாவது ஆண்டு நடக்கிறது.

பத்திராதிபர்: பரலி— சு. நெல்லையப்ப பிள்ளை,
லோகோபகாரி பத்திரிகாலயம்,
சிந்தாத்ரிப்பேட்டை, சென்னை.

வருஷ சந்தா ரூபாய் நான்கு.

பிரிண்டிங் மெஷின்கள் தேவை.

முழு விபரத்தை உடனே அறிவிக்கவும்.

மானேஜர்,
ஆனந்தா பிரஸ்,
உத்தமபாளையம்.

"கலா நிலயம்"

இது ஓர் இலக்கிய வாரப் பத்திரிகை.

கலைபுணர்வும், கலாஞானமும் பெறுவதற்கு இது ஒரு நல்ல கருவி யென்றால் மிகையாகாது. இதில் இலக்கிய வளர்ச்சிக்குரிய கட்டுரைகளே மலிந்து வருகின்றன. கம்பராமாயணம், தமிழ்ப் பாடம், அகப்பொருள் வரலாறு, செந்தமிழ் நாவல், ஆங்கிலப் புலவர்களாகிய கார்லைல், ரஸ்கின், எமர்ஸன் முதலியோரின் கட்டுரை மொழி பெயர்ப்புகள், மற்றும் பல விஷயங்கள் அவ்வப்போது வெளிவரும்.

சந்தா விபரம்.

சந்தா உள்நாட்டிற்கு ரூ 7—8—0 வெளிநாட்டிற்கு ரூ 9—0—0 தனிப்பிரதி அணா 3 ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

விலாசம்:—மானேஜர்,
11, வெள்ளாளர்தெரு, புரசைபாக்கம், சென்னை.

"பாரதி"-க்கு ஏஜெண்டுகள்.

தேவை.

மற்ற விபரங்களுக்கு எழுதவும்.

1930-ம் வருட வால்யம்

புதிய சந்தா நேயர்கட்கோர் நல் விருந்து.

இதில் இந்திய தேசாபிமானிகளின் படங்களும் பெரியோரின் படங்களும், அவர்தம் விரிவான சரிதைகளும் அடங்கியுளது. இவையன்றி, சிறந்த ஆசிரியர்களாலும், பிரபல நியாயவாதிகளாலும் அறிவு தருவதாய் ஆனந்தம் நல்குவதாய் செல்வம் ஈவதாய் நவம் நவமாக எழுதப்பெற்ற அற்புதமான வியாசங்களை 800 பக்கங்களில் கொண்டதாயிருக்கின்றது. பத்திரிகையின் விஷயப் போக்குக்கும் அச்சுக்கும் ஏற்ற விதமாக நேர்த்தியான காலிகோவினால், அழகாகவும் உறுதியாகவும் பைண்ட் செய்யப்பெற்று, தங்க மசியில் காலிகோவில் அச்சிடப்பட்டிருக்கிறது.

பிரதி 1-க்கு விலை ரூ. 2—8—0.

தபாற் செலவு பிரத்தியேகம்.

வெளி நாட்டிலுள்ளோர் தபாற் செலவு அணா 8 சேர்த்து ரூ. 3. அல்லது 5 ஷில்லிங் போஸ்டல் ஆர்டர் அனுப்ப வேண்டும்.

விளம்பர விகிதம்.

பாரதி பேரேடில் கட்டம்		1-க்கு		ரூ.	1—0—0
சாதாரண பக்கம்		1-க்கு	மாதம் 1-க்கு	ரூ.	10—0—0
,,	,,	½-க்கு	,,	,,	5—8—0
,,	,,	¼-க்கு	,,	,,	3—0—0
கவர்	,,	3 ல்	,,	,,	15—0—0
,,	,,	4 ல்	,,	,,	20—0—0

விளம்பரத்திற்கு எப்பொழுதும் முன்பணம் அனுப்ப வேண்டும்.

நீண்ட கால விளம்பரஞ் செய்வோர் எழுதவும்.

“பாரதி”

ஒரு தேசிய மாதப் பத்திரிகை.

சுதந்திரம் பொங்கி சமத்வம் ததும்பி சகோதரத்வம் ஜ்வலித்து
குறைந்த சந்தாவிலே நிறைந்த விஷயங்களால் உயர்ந்த
மாலிகையாய் மத பேதமற்று ஜாதி பேதமற்றுக்
கட்சி பேதமற்று இந்தியரனைவரும் பாரத
மாதாவின் மக்களென்ற மேலான
கொள்கையுடன் தேசாபி
விருத்தியை முக்கிய
முதல்நோக்கமாகக்
கொண்டு

தேச விடுதலைக்காக உழைக்கும்
தேசிய மணங் கமழும்

மாலிகை இஃது ஒன்றேயாகும்.

உடனே சந்தாதாரர்களாய்ச் சேருங்கள். உங்கள்
நண்பர்களுக்கும் இதனைப்பற்றி அறிமுகம்
செய்து சந்தாதாரர்களாய்ச் சேர்த்துக்
கொடுங்கள்.

சந்தா விபரம்.

உள்நாடுகளுக்கு வருடத்திற்கு ரூ. **2—0—0**
வெளி நாடுகளுக்கு ,, ரூ. **2—8—0**
அல்லது **4** ஷிலிங்

தனிப் பிரதி விலை அணா 3. அயல் நாடு அணா 4.
ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஏஜெண்டுகளாக விரும்புவோர் எழுதவும்.

பொறுப்பாளர்,
“பாரதி” ஆலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

Edited and Published by R. NARAYANASWAMI.
Printed at ANANDA PRESS, Uthamapalayam, Madura Dt., S. India.